மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI**

தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

**DIRECTORATE DISTANCE CONTINUING EDUCATION**

**TIRUNELVELI**

# பக்தி இலக்கியம்

# JMTA51

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி – 627 012.

## பக்தி இலக்கியம்

## ஐந்தாம் பருவம்

**அலகு எண் - 1**

1. திருஞானசம்பந்தர் தேவாரம் - கோளறு பதிகம் ( வேயுறு தோளி பங்கன்)
2. திருநாவுக்கரசர் தேவாரம் - மாசில் வீணையும்
3. மாணிக்கவாசகர் - பிடித்த பத்து

**அலகு எண் - 2**

1. ஆண்டாள் - திருப்பாவை முழுவதும்
2. குலசேகர ஆழ்வார் - திரு வித்துவக் கோட்டம்மா
3. பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி (1-10 பாடல்கள்)

**அலகு எண் - 3**

1. எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை - இரட்சண்ய மனோகரம் - விசுவாசக்காட்சி முழுவதும்
2. குணங்குடி மஸ்தான் சாகிபு – றகுமான் கண்ணி – 1 முதல் 50 கண்ணிகள் வரை

**அலகு எண் - 4**

1. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் - திருவரங்கக் கலம்பகம்
    - மேகவிடுதூது ( 2 பாடல்கள் )
    - ஊசல் ( 2 பாடல்கள் )
    - வண்டு ( 1 பாடல் )
    - அம்மானை ( 1 பாடல் )
    - நிமித்தம் ( 6 பாடல்கள் )
2. கம்பர் - சடகோபர் அந்தாதி – 30 பாடல்கள்

**அலகு எண் - 5**

1. வேதநாயகம் பிள்ளை – தேவமாதா அந்தாதி ( முதல் 20 பாடல்கள் )

2. சீதக்காதி நொண்டி நாடகம் - மா.மு. நயினார் ( 10 பாடல்கள் )


| அலகு எண் | உள்ளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | திருஞானசம்பந்தர் தேவாரம் | 3 - 10 |
| | திருநாவுக்கரசர் தேவாரம் | 11 - 15 |
| | மாணிக்கவாசகர் தேவாரம் | 16 - 22 |
| 2. | ஆண்டாள் - திருப்பாவை | 23 - 41 |
| | குலசேகர ஆழ்வார் - திரு வித்துவக் கோட்டம்மா | 42 – 47 |
| | பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி | 48 – 51 |
| 3. | ஏச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை - இரட்சண்ய மனோகரம் - விசுவாசக் காட்சி | 52 - 56 |
| | குணங்டி மஸ்தான் சாகிபு – றகுமான் கண்ணி ( 1 – 50 பாடல்கள் ) | 57 – 65 |
| 4. | பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் -திருவரங்கக் கலம்பகம் | |
| | மேகவிடுதூது ( 2 பாடல்கள் )<br>ஊசல் (2 பாடல்கள் )<br>வண்டு ( 1 பாடல் )<br>அம்மானை ( 1 பாடல் )<br>நிமித்தம் ( 6 பாடல்கள் ) | 66 – 74 |
| | கம்பர் - சடகோபர் அந்தாதி ( 1 – 30 பாடல்கள் ) | 75 – 87 |
| 5. | வேதநாயகம் பிள்ளை – தேவ மாதா அந்தாதி | 88 – 95 |

| | | |
|---|---|---|
| | (1 – 20 பாடல்கள் ) | |
| | மா.மு. நயினார் - சீதக்காதி நொண்டி நாடகம்<br>( 1 – 10 பாடல்கள் ) | 96 - 100 |

## பக்தி இலக்கியம்

சங்கம் மருவிய காலத்தில் தமிழ்நாட்டில் களப்பிரர்கள் ஆட்சி தொடங்கியது. இவர்கள் காலத்தை வரலாற்று அறிஞர்கள் இருண்ட காலம் என்பர். களப்பிரர்கள் முதலில் பௌத்தத்தை ஆதரித்துப் பின்னர் சமணத்தை ஆதரித்தனர். இக்காலக் கட்டத்தில் தான் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றின. தெற்கே பாண்டிய மன்னன் கடுங்கோனும், தொண்டைம ண்டலத்தில் பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணுவும் களப்பிரர்களை எதிர்த்துப் போராடி விரட்டி விட்டனர். இதன் பிறகு தமிழகத்தில் கிட்டத்தட்ட மூன்று நூற்றாண்டுகள் பல்லவர் ஆதிக்கம் மிகுந்திருந்தது. இக்காலமே பக்தி இலக்கியக் காலமாகும்.

பாண்டிய நாட்டு மன்னர்களும், பல்லவ மன்னர்களும் , சைவ, வைணவத்தை ஆதரிக்கத் தொடங்கியமையால் சைவமும், வைணவமும் வேகமாக வளரத் தொடங்கின. பக்தி இயக்கமாகவே வளர்ந்தது. சைவத்திற்கு நாயன்மார்களும், வைணவத்திற்கு ஆழ்வார்களும் பக்திப் பாடல்கள் இயற்றிப் பெருந்தொண்டு புரிந்தனர். தொடக்க நிலையில் காரைக்காலம்மையார், திருமூலர் போன்ற பெரியோர்கள் இவ்வருந்தொண்டைத் தொடங்கி வைத்தனர் எனலாம்.

சங்க காலத்தில் மன்னர்களைப் பாடினர். சங்கம் மருவிய காலத்தில் குடிமக்களைப் பாடும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களும், அறத்தை வலியுறுத்தும் நீதி நூல்களும் தோன்றின. பல்லவர் காலத்தில் இறைவனையும், இறையடியார்களையும் பாடினர். விருத்தப்பா , பக்திப் பாவாக மாறியது. இதனை ‘தேவாரம்’ என்று அழைப்பர். தே , ஆரம் - தேவனுக்கு சூட்டப்படும் பாமாலை என்று பொருள்.

பக்தி இலக்கியம் சைவம், வைணம், சமணம் , பௌத்தம் என்ற பல்வேறான பிரிவுகளில் இருந்தது. சைவமும், வைணவமும் செழித்தோங்கியது. சமணம், பௌத்தம் வீழ்ச்சியடைந்தது.

சைவத்திற்குத் தொண்டாற்றியவர்களை நாயன்மார்கள் என்றும், வைணவத்திற்குத் தொண்டாற்றியவர்களை ஆழ்வார்கள் என்றும் குறிப்பிடலாம்.

**நாயன்மார்கள் மொத்தம் - 63 பேர்**

**ஆழ்வார்கள் மொத்தம் - 12 பேர்**

## சைவ இலக்கியம்

சைவ சமயம் சிவபெருமானைப் பற்றியது. சிவமென்றால் நன்மை, செம்மை என்று பொருள். சிவம் அன்பை வளர்த்ததால் அன்பே சிவமாயிற்று. நாயன்மார்கள் தமது பக்தியின் ஆழமும், புலமைத்திறமும் புலப்படும் வண்ணம் பரமன் மீது பக்திப் பாடல்களைப் பாடிக் குவித்தனர். இவர்களுள் சிலரும் மற்றும் சிவ அடியார்களும் பாடிய பாடல்கள் சோழ மன்னர் இர்ராசராச சோழனின் விருப்பத்திற்கிணங்க நம்பியாண்டார் நம்பியின் முயற்சியினால் திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றன. இறைவனைப் பற்றி சைவ அடியார்கள் பாடியுள்ள திருநூல்கள் ‘திருமுறை’ என அழைக்கப்படுகின்றன. முதல் பதினொரு திருமுறைகள் **நம்பியாண்டார் நம்பியால்** தொகுக்கப் பெற்றன. பன்னிரண்டாம் திருமுறையான பெரியபுராணம் சேக்கிழார் பெருமானால் திருமுறையாக பின்னாளில் சேர்க்கப்பட்டது என்பர். இவ்வாறு நாயன்மார்களின் திருமுறை காணப்படுகின்றது. சைவ சமயக் குரவர்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதல் சேக்கிழார் ஈறாக 27 அடியவர்களின் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

**பன்னிரு திருமுறைகள்**

1. சம்பந்தர் தேவாரம் - முதல் மூன்று திருமுறைகள்
2. நாவுக்கரசர் தேவாரம் - 4, 5, 6 ஆம் திருமுறைகள்
3. சுந்தரர் தேவாரம் - ஏழாம் திருமுறை
4. மாணிக்கவாசகர் தேவாரம் - எட்டாம் திருமுறை
5. ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு – ஒன்பதாம் திருமுறை
6. திருமூலரின் திருமந்திரம் - பத்தாம் திருமுறை
7. பன்னிருவர் பாடிய பாடல்கள் - பதினோராம் திருமுறை
8. சேக்கிழாரின் பெரியபுராணம் - பன்னிரண்டாம் திருமுறை

திருஞானசம்பந்தர்

- ✓ சோழ நாட்டில் சீர்காழியில் அந்தணர் குலத்தில் பிறந்தவர்.
- ✓ பெற்றோர் **சிவபாத இருதயர் - பகவதி அம்மையார் .**
- ✓ பெற்றோர் இட்ட பெயர் **ஆளுடைபிள்ளை.**

- ❖ மூன்று வயதாக இருக்கும்போது, கோவில் குளக்கரையில் விட்டு விட்டுச் சிவபாதர் குளத்தில் மூழ்கவே தந்தையைக் காணாது பசியால் குழந்தை அழுதது. அப்போது அம்மையப்பர் காட்சி தந்து, பாலொடு ஞானத்தையும் கலந்தூட்டி மறைந்தனர். கையில் கிண்ணமும், வாயில் பால் வடியும் முகத்தைக் கண்ட தந்தை ‘ யார் கொடுக்கப் பாலுண்டனை ’ என்று அதட்டவே , **‘ தோடுடைய செவியன்’** எனப் பாடி அம்மையப்பரைச் சுட்டிக்காட்டியது. பாலுண்ட மாத்திரம் ஞானத் தொடர்பு தேவியிடம் இருந்து கிடைத்தது. இதனால் ‘ ஞானசம்பந்தர்’ எனப்பட்டார்.
- ❖ ஆதிசங்கரர் இவரைத் **‘திராவிட சிசு**’ என அழைப்பர். பெரியபுராணம் ‘பிள்ளைபாதி புராணம் பாதி’ என்று இவர் புகழ் பேசும். தந்தையுடன் ஊர் ஊராகச் சென்று இசையோடு சைவத்தைப் பரப்பினார். சுந்தரரால் இவர் **‘நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்’** என அழைக்கப்பட்டார்.

சிறப்புகள் :

- ➢ மயிலையில் இறந்து எலும்பு மட்டும் எஞ்சிய பூம்பாவை என்னும் பெண்ணை உயிர் பெறச் செய்தார்.
- ➢ திருமறைக்காட்டில் கோயில் திருக்கதவைத் தம் பாட்டால் மூடும்படிச் செய்தார்.
- ➢ திருமகலில் பாம்பு கடித்து இறந்த கணவனை எண்ணி அழுத மனைவியின் துயர் நீக்கப் பதிகம் பாடிக் கணவனுக்கு உயிர் கொடுத்தார்.
- ➢ சைவம் தவிர பிற சமயங்களை வெறுத்தார் என்றே கூறலாம். புத்தர், சமணர்களைப் பழிக்கின்றார். சமணர்கள் பலரை அனல் வாதத்திலும் புனல் வாதத்திலும் வென்று கழுவேற்றினார் எனலாம். சமண சமயத்திலிருந்து கூன்பாண்டியன் மனைவி மங்கையர்க்கரசி வேண்டுகோளுக்கிணங்க மதுரை வென்று சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார்.
- ➢ இவரது பாடல்கள் 16000 பதிகங்கள் கொண்டது .ஆயினும் இன்று கிடைப்பதுரு 383 பதிகங்களே கிடைத்துள்ளன. 4168 பாடல்கள் பாடியுள்ளார். சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாடு அனைத்தும் சென்று சிவபெருமானைப் பாடியுள்ளார்.

- சிவபெருமான் அருளால் திருக்கோலக்காவில் பொற்றாளமும், பட்டீச்சுவரத்தில் முத்துப்பந்தரும், திருவாயிலறத்துறையில் முத்துச் சிவிகையும், திருவாவடுதுறையில் பொற்கிழியும், திருவீழிமிழலையில் படிக்காசும் பெற்றார்.
- இவர் வாழ்ந்த காலம் 16 ஆண்டுகள்.
- இவரது நெறி **'சற்புத்திரநெறி'** எனப்படும்.
- பதினாறாம் வயதில் திருமணம் செய்யும் நிலையில் நல்லூரில் பெருமணம் என்னும் ஊரில் இவரும் மணப்பெண்ணும் மற்றையோரும் பெருஞ்சோதியில் கலந்து மறைந்தனர் என்று கூறுவர்.

**பாடல் அமைப்பு :**

- இவரது பதிகங்களில் ஓர் ஒழுங்கு முறையைக் காண முடிகிறது. ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாடல் இராவணனைப் பற்றியும், ஒன்பதாவது பாடல் மும்மூர்த்திகளில் சிவனே மேம்பட்டவர் எனவும், பத்தாவது பாடல் சமண சாக்கியரைத் தாக்கியும், பதினோராவது பாடல் தமது பெருமை நூற்பயன் இரண்டை இணைத்தும் அமைவதைக் காணலாம்.

**திருஞானசம்பந்தர் தேவாரம்**

**கோளறு பதிகம்**

**நவகிரகங்களால் ஏற்படும் பாதிப்புகள் நீங்கி மனதில் நினைத்தனவெல்லாம் நிறைவேறும்.**

1. **வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி**
   **மாசறு திங்கள் கங்கை முடி மேல் அணிந்து என் உளமே புகுந்த அதனால்**
   **ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டும் உடனே**
   **ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே !**

   **விளக்கம்** : எம்பெருமான் மூங்கில் போன்ற தோளினை உடைய உமையவளுக்குத் தன் உடம்பினில் பாகம் கொடுத்தவன். ஆலகால விடத்தை உயிர்களைக் காக்கும் பொருட்டு அருந்தி திருக்கழுத்தினில் தாங்கியவன். இனிமையான இசையை எழுப்பும் வீணையை வாசித்துக்கொண்டு இருக்கும் சிவபெருமான் களங்கமில்லாத பிறையையும், கங்கையையும் தன் திருமுடி மேல் அணிந்து கொண்டு, என் உளம் முழுவதும் நிறைந்து காணப்படுவதால் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, மற்றும்

பாம்பாகிய ராகு – கேது என்னும் ஒன்பது கோள்களும் ஒரு குற்றமும் இல்லாதவையாக (என் போன்ற ) சிவனடியாருக்கு என்றும் மிக மிக நல்லதையே செய்யும் !

2. **என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பிலங்க எருதேறி ஏழையுடனே**
   **பொன்பொதி மத்தமாலை புனல் சூடி வந்தென் உளமே புகுந்த அதனால்**
   **ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டொடாறும் உடனாய நாள்களவை தாம்**
   **அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே !**

**விளக்கம்** : திருமாலின் வாமன, பன்றி, கூர்ம அவதாரங்களின் ஆணவத்தை அடக்கி அணிந்து நிற்கும் எலும்பு, கொம்பு, ஆமைஓடு, முதலானவை தன் திருமார்பில் விளங்க, உமையவளுடன் எருதின் மேல் ஏறி, பொன்போலொளிரும் ஊமத்தை மலர்களாலான மாலை தரித்து, தலையில் கங்கையணிந்து என் உள்ளத்தே நிறைந்ததால், விண்மீனாய் வரும் ஆயில்யம்; ஒன்பதோடு ஒன்று – பத்தாவது விண்மீனான மகம் ; ஒன்பதொடு ஏழு – பதினாறாவது விண்மீனான விசாகம் ; பதினெட்டாவது விண்மீனான கேட்டை ; ஆறாவது விண்மீனான திருவாதிரை ; முதலான பயணத்திற்கு விலக்கப்பட்ட நாட்கள் எல்லாமும், சிவனடியார் மீது அன்பொடு அவர்க்கு என்றும் நல்லதையே செய்யும் !

3. **உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து உமையோடும் வெள்ளை விடை மேல்**
   **முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்**
   **திருமகள் கலையதூர்தி செயமாது பூமி திசை தெய்வமான பலவும்**
   **அருநெதி நல்லநல்ல அவை நல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே**

**விளக்கம்** : பவளம் போன்ற சிவந்த திருமேனியில் ஒளிபொருந்திய வெண்ணீற்றை அணிந்து, சிவபெருமான் உமையம்மையாரோடு வெள்ளை எருதின் மீது ஏறி வந்து, அழகு பொருந்திய கொன்றையையும், சந்திரனையும் தன் முடிமேல் அணிந்து சிவபெருமான், உமையம்மையாரோடு வெள்ளை எருதின் மீது ஏறி வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால் இலக்குமி, கலைகளை வாகனமாகக் கொண்ட கலைமகள், வெற்றித் தெய்வமான துர்க்கை, பூமாது, திசைத் தெய்வங்களான பலரும் அரிய செல்வம் போல நன்மை அளிப்பர். அடியவர்களுக்கு மிக நல்லதையே செய்வர்.

4. **மதிநுதல் மங்கையோடு வடவாலி ருந்து மறையோதும் எங்கள் பரமன்**
   **நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்**

**கொதியுறு காலனங்கி நமனோடு தூதர் கொடுநோய் களான பலவும்**
**அதிகுணம் நல்லநல்ல அவைந ல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே!**

**விளக்கம்** : பிறை போன்ற நெற்றியை உடைய உமையம்மையாரோடு ஆலமரத்தின் கீழ் இருந்து (வடம் - ஆலமரம்) வேதங்களை அருளிய எங்கள் பரமன் கங்கை நதியையும் , கொன்றை மாலையையும் முடிமேல் அணிந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால் உக்கிரமுடையதான காலம், அக்கினி, யமன், யமதூதர், கொடிய நோய்கள் எல்லாம் மிக நல்ல குணமுடையன ஆகி நல்லவை செய்யும். அடியவர்களுக்கு மிகவும் நல்லனவே செய்யும்.

5. **நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும் விடையேறு நங்கள் பரமன்**
**துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென் உளமே புகுந்த அதனால்**
**வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும் மிகையான பூத மவையும்**
**அஞ்சிடும் நல்லநல்ல அவைந ல்லநல்ல அடியார்அவர்க்கு மிகவே.**

**விளக்கம்** : விடத்தைக் கழுத்தில் அணிந்த நீலகண்டனும், என் தந்தையும் , உமையம்மையாரோடு இடபத்தின் மேல் ஏறி வரும் நம் பரம்பொருள் ஆகிய சிவபெருமான், அடர்ந்து கறுத்த வன்னிமலரையும், கொன்றை மலரையும், தன் முடிமேல் அணிந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், கொடிய சினத்தை உடைய அசுரர்கள், முழங்குகிற இடி, மின்னல், துன்பந்தரும் பஞ்சபூதங்கள் முதலானவையெல்லாம் ( நம்மைக் கண்டு) அஞ்சி நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு மிக நல்லனவற்றையே செய்யும்.

6. **வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர் மடவாள் தனோடும் உடனாய்**
**நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென் உளமே புகுந்த அதனால்**
**கோளரி யுழுவையோடு கொலையானை கேழல் கொடுநாக மோடு கரடி**
**ஆளரி நல்லநல்ல அவைந ல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே!**

**விளக்கம்** : ஒளியும் வரியும் பொருந்திய புலித்தோல் ஆடையும் வரிந்து கட்டிய கோவணமும் அணிந்த சிவபெருமான் அன்றலர்ந்த மலர்கள், வன்னி இலை, கொன்றைப்பூ, கங்கை நதி ஆகியவற்றைத் தம் முடிமேல் சூடி, உமையம்மையாரோடும் வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், கொல்லும் வலிய புலி, கொலையானை,

பன்றி, கொடிய பாம்பு, கரடி, சிங்கம் ஆகியன நல்லனவே செய்யும். அடியார்களுக்கு மிக நல்லனவே செய்யும்.

7. **செப்பின முலைநன்மங்கை ஒரு பாகமாக விடையேறு செல்வ நடைவார்**
**ஒப்பிள மதியும்அப்பும் முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்**
**வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும் வினையான வந்து நலியா**
**அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.**

**விளக்கம்** : செம்பு போன்ற இளந் தனங்களை (மார்பு) உடைய உமையவளைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு, இடபத்தின் மேல் ஏறிவரும் செல்வனாகிய சிவபெருமான் தன்னை அடைந்த அழகிய பிறைச் சந்திரனையும், கங்கையையும் தன் முடிமேல் அணிந்தவனாகிய உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால் காய்ச்சல், (சுரம்), குளிர்காய்ச்சல், வாதம், மிகுந்த பித்தம், அவற்றால் வருவன முதலான துன்பங்கள் நம்மை வந்து அடையா. அப்படி அவை நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு அவை நல்லனவே செய்யும்.

8. **வேள்பட விழி செய்தன்று விடைமேலிருந்து மடவாள் தனோடும் உடனாய்**
**வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென் உளமே புகுந்த அதனால்**
**ஏழ்கடல் சூழிலங்கை அரையன்றனோடும் இடரான வந்து நலியா**
**ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.**

**விளக்கம்** : அன்று மன்மதன் அழியும்படி நெற்றிக் கண்ணைத் திறந்து எரித்த சிவபெருமான், இடபத்தின் மேல் உமையம்மையாரோடு உடனாய் இருந்து தன் முடிமேல் ஒளி பொருந்திய பிறைச்சந்திரன், வன்னி இலை, கொன்றை மலர் ஆகியனவற்றைச் சூடி வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், ஏழ் கடல்களால் சூழப்பட்ட இலங்கையின் மன்னன் ஆன இராவணன் போன்ற இடர்களும் வந்து நம்மைத் துன்புறுத்தாது. ஆழமான கடலும் நமக்கு நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு அவைந ல்லனவே செய்யும் .

9. **பலபல வேடமாகும் பரனாரி பாகன் பசுவேறும் எங்கள் பரமன்**
**சலமகளோடு எருக்கு முடிமேலணிந்தென் உளமே புகுந்த அதனால்**
**மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர் வருகால மான பலவும்**
**அலைகடல் மேருநல்ல அவைந ல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.**

**விளக்கம்** : பல்வேறு கோலங்கள் கொண்டு இருக்கின்ற பரம்பொருள் ஆகிறவனும், மாதொருபாகனும், எருதின் மேல் ஏறிவரும் எங்கள் பரமனுமாகிய சிவபெருமான் தன் முடிமேல் கங்கை, எருக்க மலர் ஆகியவற்றை அணிந்து வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால் தாமரை மலர் மேல் உறையும் பிரம்மன், திருமால், வேதங்கள், தேவர்கள் ஆகியோரும், எதிர்காலம் , அலைகளையுடைய கடல், மேரு முதலான மலைகள் ஆகியவையும் நமக்கு நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு அவை மிக நல்லனவே செய்யும்.

10. **கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு குணமாய வேட விகிர்தன்**
**மத்தமு மதியு(ம்) நாகம் முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்**
**புத்தரோடமணை வாதில் அழிவிக்கும் அண்ணல் திருநீறு செம்மை திடமே**
**அத்த குநல்லநல்ல அவைந ல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.**

**விளக்கம்** : கூந்தலில் மலர்க் கொத்துக்களை அணிந்த உமையம்மையாரோடு வேட வடிவில் சென்று அருச்சுனனுக்கு அருள்புரிந்த தன்மை கொண்ட சிவபெருமான் தன் முடிமேல் ஊமத்தை மலர், பிறைச்சந்திரன், பாம்பு ஆகியவற்றை அணிந்து வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், புத்தர்களையும், சமணர்களையும் , ஈசனின் திருநீறு வாதில் தோற்றோடச் செய்யும். அந்த பெருமை நிச்சயமே. எல்லாம் அப்படிச் சிறந்த நல்லனவற்றையே செய்யும். அவை மிகவும் நல்லனவே செய்யும்.

11. **தேனமர் பொழில் கொளாலை விளைசெந்நெல் துன்னி வளர்செம்பொன் எங்கும் நிகழ**
**நான்முகன் ஆதியாய பிரமா புரத்து மறைஞான ஞான முனிவன்**
**தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய்**
**ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே.**

**விளக்கம்** : தேன் நிறைந்த பூங்காக்களை கொண்டதும், கரும்பும் (ஆலை), விளைகிற செந்நெல்லும் நிறைந்துள்ளதும், பொன் போல் ஒளிர்வதும், நான்கு வழிப்பட்ட காரணத்தால் பிரமாபுரம் என்ற ஊரில் தோன்றி அபரஞானம் , பரஞானம் ஆகிய இருவகை ஞானங்களையும் உணர்ந்த ஞானசம்பந்தனாகிய யான், தாமே வந்து சம்பவிக்கும் நவக்கிரகங்கள், நாள், நட்சத்திரம் போன்றன எல்லாம் அடியவரை வந்து வருத்தாதவாறு பாடிய இப்பதிகத்தை ஓதும் அடியவர்கள் வானுலகில் அரசு புரிவர். இது நமது ஆணை.

## திருநாவுக்கரசர்

- நடு நாட்டில் திருமுனைப்பாடியைச் சார்ந்த திருவாமூரில் பிறந்தவர்.
- வேளாண்குடியைச் சார்ந்தவர்.
- பெற்றோர் : புகழனார், மாதினியார்
- தமக்கை : திலகவதியார்
- இவரது இயற்பெயர் மருள்நீக்கியார்
- சமணத்திலிருந்து சூலை நோயால் பாதிக்கப்பட்டு சிவபெருமானின் அற்புதத்தால் சூலை நோயிலிருந்து விடுபட்டார். உடனே சைவத்திற்கு மாறினார். சமண மதத்தினர் அரசனைத் தூண்டி யானையை ஏவியும், நீற்றறையில் இட்டும், நஞ்சு ஊட்டியும், கல்லில் கட்டிக் கடலில் எறிந்தும் துன்புறுத்தினர். ஆனாலும் அவற்றையெல்லாம் மீறி வாழ்வில் நலம் அடைந்தார்.
- ‘நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்’ ‘நற்றுணையாவது நமச்சிவாயமே’ எனப்பாடி உயர்ந்தார்.
- இறைவன் அருளிய பெயர் **திருநாவுக்கரசர்.** திருஞானசம்பந்தர் இவரை **‘அப்பர்’** என்று அன்போடு அழைக்கிறார். **வாசீகர்** என்ற பெயரும் உண்டு.

**அற்புதங்கள்**

- பாம்பு கடித்து இறந்த அப்பூதியடிகளின் மைந்தனைப் பதிகம் பாடி எழுப்பினார்.
- மறைகாட்டுக் கதவம் திறந்தார்.
- உழவாரப் படை கொண்டு பணி செய்து ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கினார். படிக்காசு பெற்றார்.
- மகேந்திரவர்ம பல்லவனை சைவ சமயத்திற்கு மாற்றினார்.
- கையிலாயக் காட்சியினை ஐயாற்றில் கண்டார்.
- தனது 81 வது அகவையில் திருப்புகலூரில் சித்திரைத் திங்கள் சதய நாளில் இறைவனோடு இரண்டறக் கலந்தார்.
- திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவரைக் காட்டிலும் அதிக ஆண்டு காலம் வாழ்ந்தவர் என்ற பெருமைக்குரியவர் இவரே.

**பாடல்கள் :**

- 4900 பாடல்களில் 312 பாடல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.
- பத்துவகைப் பண்கள், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்ற வகையில் முறையே அமைகின்றன. **தாண்டக வேந்தர்** என்றும் சிறப்பிக்கப்பெறுகிறார்.
- இவரது நெறி – சரியை அல்லது தாச மார்க்கம் ஆகும்

## திருநாவுக்கரசர் தேவாரம்

**ஐந்தாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது .**

**மாசில் வீணையும் பாடல் முதல் பதிகமாக இடம்பெற்றுள்ளது.**

**பதிகத்தின் சிறப்புகள்** : இந்த பதிகம் ஆபத்துகள் மற்றும் விபத்துகள் ஏற்படாமல் காக்கும் என்று நம்பப்படுகிறது. இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாறுவதன் மூலம் கிடைக்கும் மகிழ்ச்சியை இது விவரிக்கிறது.

பாடல்

1. **மாசில் வீணையும் மாலை மதியமும்**
   **வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
   **மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
   **ஈசன் எந்தை இணையடி நீழலே**

   **விளக்கம்** : எனது தந்தையாகிய இறைவனின் திருவடி நிழல் குற்றமற்ற வீணையின் நாதமும், மாலையிலே தோன்றிய நிலவின் தண்மையும், வீசுகின்ற தென்றலின் சாயலும், செறிந்த இளவேனிலின் மாட்சியும், ஒலிக்கும் வண்டுகள் மொய்க்கும் பொய்கையின் குளிர்ச்சியும் போன்று இன்பம் பயப்பதாகும்.

2. **நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்**
   **நமச்சி வாயவே நானறி விச்சையும்**
   **நமச்சி வாயவே நாநவின் றேத்துமே**
   **நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே**

   **விளக்கம்** : நமச்சிவாய என்ற மந்திரமே நான் அறிந்த கல்வியாகும். நமச்சிவாய மந்திரமே அந்த கல்வியால் நான் பெற்ற ஞானமுமாகும். நமச்சிவாய என்ற மந்திரம் தான் நான் அறிந்த வித்தையாகும். நமச்சிவாய மந்திரத்தை எனது நா இடைவிடாது சொல்லும். இந்த நமச்சிவாய மந்திரம் தான் வீடுபேற்றை அடையும் வழியாகும்.

3. **ஆளாகார் ஆளானாரை அடைந்து உய்யார்**
   **மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்**
   **தோளாத சுரையோ தொழும்பர் செவி**
   **வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிவரே**

**விளக்கம்** : சிவபெருமானின் அடியாராக இல்லாதவர்கள், சிவபிரானின் அடியார்களை அணுகி அவர்களிடமிருந்து உய்யும் வழியினை அறிந்து கொண்டு அந்த வழியில் செல்லா மாட்டார்கள். அவர்கள் சிவபெருமானுக்கு மீளா அடிமையாக இருந்து மெய்ப்பொருளை உணர மாட்டார்கள். அவர்களது செவிகள் உட்குழி இல்லாத காரணத்தால் அவர்கள் சிவபெருமானின் நாமத்தை கேட்டிலர் போலும். அவர்களின் வாழ்க்கை எந்த பயனையும் அடையாமல் வீணாகக் கழிகின்றது.

4. **நடலை வாழ்வு கொண்டு என் செய்தீர் நாணிலீர்**
**சுடலை சேர்வது சொல் பிரமாணமே**
**கடலின் நஞ்சு அமுது உண்டவன் கைவிட்டால்**
**உடலார் கிடந்து ஊர் முனி பண்டமே**

**விளக்கம்** : நாணம் இல்லாதவர்களே, துன்பம் தரும் இந்த வாழ்க்கையில் நீங்கள் சாதித்தது என்ன. இறப்பு தவிர்க்க முடியாதது என்பது சான்றோர் வாக்கு. பாற்கடலில் பொங்கி வந்த விடத்தை உண்டு, உலகினை பாதுகாத்த சிவபெருமான் கைவிட்டால், நமது உடல் அனைவரும் பழிக்கத் தக்க பொருளாக, இழிந்த பொருளாக மாறிவிடும். உயிரற்ற உடல் அனைவராலும், வெறுக்கத் தக்கது என்பதால், சிவபெருமான் அருளால் இனி வரும் பிறவியையும் அதனால் நிகழப்போகும் இறப்பையும் தடுத்து பேரின்பம் அடைய நாம் முயற்சி செய்ய வேண்டும்.

5. **பூக்கை கொண்டு அரன் பொன்னடி போற்றிலார்**
**நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்கிலார்**
**ஆக்கைக்கே இரை தேடி அலமந்து**
**காக்கைக்கே இரை ஆகிக் கழிவரே.**

**விளக்கம்** : பூவைக் கையில் கொண்டு சிவனின் பொன் போன்ற திருவடிகளை போற்ற மாட்டார்கள். நாக்கினைக் கொண்டு சிவபெருமானின் பெயரைச் சொல்ல மாட்டார்கள். இந்த உடம்புக்கு தீனி தேடி அலைந்து காக்கைக்கு இரை ஆகிக் கழிவார்கள். இந்த உடல் எப்படியும் மடிந்து போகப் போகிறது. மடிந்த உடன் மக்கிப் போகும். அதற்கு முன் இந்த உடலை வைத்து என்ன செய்யலாம் என்று யோசிக்க வேண்டும்.

6. **குறிகளும் அடையாளமும் கோயிலும்**
**நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்**
**அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்**
**பொறி இலீர் மனம் என் கொல் புகாததே**

**விளக்கம் :** சிவபெருமானின் திருவுருவங்கள், அவனை அடையாளம் காட்டும் சின்னங்கள் ( நந்தி வாகனம், நந்திக்கொடி, அணியும் திருநீறு, உருத்திராட்சம் ஆகியவை) அவனை வழிபடுவதற்கு உரிய சைவ நெறி, அவனது நேர்மைக்குணம் ஆகியவற்றை நாம் அறிந்து கொள்ளுமாறு வேதங்கள் ஆயிரம் முறைகள் கூறியிருந்தாலும், உங்களது மனத்தில் அந்த உண்மைகள் ஏன் புகுவதில்லை. நீங்கள் அவற்றினை உணரக்கூடிய பொறிகள் ஏதும் இல்லாமல் இருப்பதேன்?

7. **வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்**
**தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை**
**சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே**
**வீழ்த்தவா வினையேன் நெடும் காலமே.**

**விளக்கம் :** தன்னை வாழ்த்துவதற்காக வாயினையும் , தன்னை நினைப்பதற்காக நெஞ்சத்தினையும், வணங்கி வழிபட தலையையும் தந்த தலைவனான சிவபெருமானை, நல்ல நறுமணம் மிக்க சிறந்த மலர்கள் கொண்டு வழிபடாமல், வீணாக எனது வாழ்நாளில் பெரும்பகுதியை கழித்து விட்டேன் என்கிறார் அப்பர்.
அனைத்து உயிர்களையும்பற்றியிருக்கும் ஆணவ மலம் இறைவனைப் பற்றிய சிந்தனைகளை நாம் செய்ய விடாமல் தடுக்கின்றன. ஆகையால் அறியாமையில் இருக்கும் நெஞ்சினை ‘மட நெஞ்சம்’ என்று குறிப்பிடுகிறார்.

8. **எழுது பாவை நல்லார் திறம் விட்டு நான்**
**தொழுது போற்றி நின்றேனையும் சூழ்ந்து கொண்டு**
**உழுத சால் வழியே உழுவான் பொருட்டு**
**இழுதை நெஞ்சம் இது என் படுகின்றதே**

**விளக்கம் :** எழுதிய பாவைச் சித்திரம் போன்ற அழகுடைய பெண்கள் திறத்தின் நீங்கி நான்தொழுது போற்றி நிற்க என்னையும் ஆராய்ந்து கொண்டு உழுத சால் வழியே பின்னும் உழுதவன் பொருட்டு மிக்க இழிவுடைய நெஞ்சம் செய்கின்றது தானா என்னை?

9. **நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே**
**புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்**
**பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு**
**நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே.**

**விளக்கம்** : நெகிழ்ந்து நெகிழ்ந்து நினைபவர் நெஞ்சுக்குள்ளே புகுந்து நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன், பொய்ம்மையாளர் பூசையிற் பூவையும் நீரையும் கண்டு அவர் தம்மை நாணிச் சிரித்து நிற்பர் என்கிறார்.

10. **விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்**
**மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்**
**உறவு கோல் நட் டுணர்வு கயிற்றினால்**
**முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.**

**விளக்கம்** : விறகின் கண் மறைந்திருக்கும் நெருப்பைப் போலவும், பாலில் மறைந்திருந்து பின்னர் தோன்றும் நெய் போலவும், மாமணிச் சோதியனாகிய இறைவன் மறைய நின்றுளன், உறவு என்னுங்கோலை நட்டு உணர்வு என்ற கயிற்றினால் முறுக வாங்கிக் கடைந்தால் முன்னின்று அருள் வழங்குவான் என்கிறார் அப்பர்.

## மாணிக்கவாசகர்

- பாண்டிய நாட்டுத் **திருவாதவூரில்** ஆதி சைவ மரபில் தோன்றியவர்.
- பெற்றோர் **பாதசாரியார் - சிவஞானவதியார்**
- கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினமையால் அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்தவர். அப்போது **'தென்னவன் பிரம்மராயன்'** என்னும் பட்டத்தைக் கொடுத்து முதலமைச்சராக அமர்த்திக் கொண்டான் என்பர்.
- குதிரைப் படையைப் பெருக்க விழைந்த பாண்டியன், இவரை குதிரை வாங்கிவர அனுப்பினான். சிவத்தையே நாடும் சிந்தை கொண்ட அமைச்சர், திருப்பெருந் துறையில் குருந்த மரத்தடியில் முனிவரிடம் உபதேசம் பெற்று உலகியல் மறைந்தார். குதிரை வாங்கும் பணத்தைச் சிவப்பணிக்கே செலவிட்டார்.
- பாண்டியன் சிறையிலிட்டான். இறைவன் நரிகளை எல்லாம் பரிகளாக்கிக் கொண்டு வந்து அரசனிடம் விட்டுச் செல்ல, பரிகளெல்லாம் நள்ளிரவில் நரிகளாகிக் கானகம் புகுந்தன. வெகுண்ட பாண்டியன், மாணிக்கவாசகரின் முதுகில் கல்லை ஏற்றி வையையின் நடுவில் நிறுத்த, அதனைப் பெறாத இறைவன் வெள்ளப்பெருக்கை உண்டாக்கினான். அரசு கட்டளைக்கேற்ப அனைவரும் உடைப்புக்களை அடைக்க உதவலாயினர்.
- வந்தி என்னும் கிழவியின் பொருட்டுப் பிட்டினைக் கூலியாகப் பெற்று, கூலியாளாக சிவபெருமான் வந்தார். இறைவன் வேலை செய்யாமல் இருப்பதைக் கண்டறிந்த பாண்டியன் பிரம்பால் அடிக்க, இறைவன் மேல்பட்ட அடி எல்லோர் உடம்பிலும் பட்டது. இறைவன் திருவருள் என பாண்டியன் தன் தவறை உணர்ந்து மாணிக்கவாசகரை விடுவித்து மீண்டும் அமைச்சராக்கினான்.
- சிவத்தையே நாடும் மாணிக்கவாசகரோ, பதவியை வெறுத்துத் தலம் பல சென்று பரமனுக்குப் பாமாலைகள் பாடி மகிழ்ந்தார் எனலாம்.

### அற்புதங்கள்

- ஊமைப்பெண்ணைப் பேச வைத்தது போன்ற விந்தைகள் பல செய்தார்.
- பாண்டிய நாட்டுப் பதிகளில் பாடிய பாடல்களை மீண்டும் பாடுமாறு பணித்து. அவற்றைத் தம் திருக்கரத்தினாலே எழுதி வைத்துக் கொண்டார் இறைவன். அதுவே திருவாசகம்.
- அப்பாடல்கள் மாணிக்கம் போன்று அமைந்தமையால் இவருக்கு ' மாணிக்கவாசகர்' எனப் பெயரிட்டார்.
- பின்னர் **'பாவை பாடிய வாயால் கோவை பாடுக'** என வேண்டி ஏடெழுதிப் பொன்னம்பலத்தில் வைத்துக் கொள்ள, தில்லை வாழ் அந்தணர்கள் அதற்கு உரை

கூறுமாறு வேண்ட, மாணிக்கவாசகர் ஆடலரசைக் காட்டி அவரே இதற்குப் பொருளாவார் என்று கூறிக் கூத்தப் பெருமானோடு ஒன்றிக் கலந்தார்.

- ஆனி மகம் நாளில் இவ்வுலக வாழ்விலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார்.
- இவர் வாழ்ந்த காலம் 32 ஆண்டுகளே.
- முன்னைய மூவரையும், இவரையும் சேர்த்து சமயக் குரவர் நால்வர் என்பர்.
- இவருடைய நெறி – ஞானமார்க்கம் ஆகும்.
- எழுதிய நூல்கள் - திருவாசகம், திருக்கோவையார்
- “ திருவாசக்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்” என்பது திருவாசகத்தைச் சிறப்பிக்கும் வரிகளாகும்.
- இதில் சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக 659 பாடல்கள் காணப்படுகின்றன. 51 தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன.

## மாணிக்கவாசகர் - பிடித்தபத்து

**மாணிக்கவாசகர் , இறைவனைத் தாம் விடாது பிடித்த செயலைக் கூறும் பத்துப் பாடல்களால் ஆனதால் ‘பிடித்தப பத்து’ எனப்பட்டது. இதில் முக்தியில் கலந்த அனுபவத்தைக் கூறுதல் இடம்பெறுகிறது. இப்பாடல் திருத்தோணிபுரத்தில் அருளியது என்பர்.**

1. **உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த**
**யோகமே ஊற்றையேன் தனக்கு**
**வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு**
**வாழ்வற வாழ்வித்த மருந்தே**
**செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே**
**செல்வமே சிவபெரு மானே**
**எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே.**

**விளக்கம்** : விண்ணவர்களுக்கு வேந்தனே! எங்கும் நீக்கமில்லாது நிறைந்திருக்கின்ற பரம்பொருளே ! அழுக்கு மனத்தை உடையவனாகிய எனக்கு புதுமை என்னும்படி அருள்கனிந்து என் குடும்பம் முழுவதையும் ஆட்கொண்டு வினைப்போகமான வாழ்வை நீக்கி மெய்யான வாழ்வு வாழச்செய்த அருமருந்தே ! செவ்விய நூற்பொருளின் முடிவே ! சீர்மிகுந்த கழல் அணிந்த செல்வமே ! சிவபெருமானே! நானும் என்னைச் சேர்ந்தாரும்

உய்யும் பொருட்டு உன்னை உறுதியாகப் பற்றினேன். இனிமேல் என்னை விட்டு எங்கே எழுந்தருளிச் செல்வது?

2. **விடைவிடா துகந்த விண்ணவர் கோவே**
**வினையனே னுடையமெய்ப் பொருளே**
**முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்**
**புழுக் குரம்பையிற் கிடந்து**
**கடைபடா வண்ணம் காத்தெனை ஆண்ட**
**கடவுளே கருணைமா கடலே**
**இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே.**

**விளக்கம்** : காளையை விடாது வாகனமாகக் கொண்ட தேவர் பெருமானே! வினையின் விளைவாய் வருந்தும் அடியேனுடைய மெய்ப்பொருளே! புலால் நாற்றம் வீசுகின்ற புழுக்கத் தக்க இந்த உடம்பில் நான் கட்டுண்டு கிடந்து அழிந்து போகாத வண்ணம் காத்து என்னை ஆட்கொண்ட கடவுளே! பெருங்கருணைக் கடலே ! உன்னை எந்த நேரமும் விடாது இறுகப் பற்றினேன். நீ இனிமேல் என்னை விட்டு எங்கே எழுந்தருளிச் செல்வது?

3. **அம்மையே அப்பா ஒப்பிலா மணியே**
**அன்பினில் விளைந்த ஆரமுதே**
**பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்**
**தலைப் புலையனேன் தனக்குச்**
**செம்மையே ஆய சிவபதம் அளித்த**
**செல்வமே சிவபெரு மானே**
**இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே**

**விளக்கம்:** தாய் போன்றவனே ! தந்தை ஆனவனே ! ஒப்பில்லாத மாணிக்கம் போன்றவனே ! அன்பெனும் பால் கடலில் விளைந்த அருமையான அமுதமே ! பொய்மையான செயல்களை அதிகமாகச் செய்து காலத்தை வீணடித்து, புழுப்பற்றி அலைகின்ற உடலையும், கீழ்மைக் குணத்தையும் உடைய எனக்கு , மிக மேன்மையான

சிவபோகத்தைக் கொடுத்தருளினை! எம்பெருமானே, இவ்வுலகில் உன்னை உறுதியாகப் பற்றினேன். நீ இனிமேல் என்னை விட்டு எங்கே எழுந்தருளிச் செல்வது?

4. **அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே**
**பெருந்திறல் அருந்தவர்க் கரசே**
**பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த**
**போகமே யோகத்தின் பொலிவே**
**தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த**
**செல்வமே சிவபெரு மானே**
**இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே**

**விளக்கம்** : கருணை ஒளி வீசும் சுடரொளியே ! கனிந்த நிலையில் உள்ள ஒரு ஒப்பற்ற பழம் போன்றவனே! பேராற்றல் கொண்ட அருந்தவத்தினர்க்கு அரசே ! மெய்ப்பொருள் விளக்கும் மெய்ஞ்ஞான நூல் ஆனவனே ! புகழ்தலைக் கடந்த இன்பம் போன்றவனே ! யோகத்தின் பொருட்டு பயனானவனே ! தெளிந்த மனத்தினை உடைய அடியாரிடத்துத் தங்கிய அருட் செல்வமே ! சிவபெருமானே ! அறியாமை நிறைந்த இவ்வுலகத்தே உன்னை உறுதியாகப் பற்றினேன். இனிமேல் நீ என்னை விட்டு எங்கே எழுந்தருளிச் செல்வது ? எம்மை ஆண்டருள்க இறையே !

5. **ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன்**
**உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே**
**மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு**
**விழுமிய தளித்ததோ ரன்பே**
**செப்புதற் கரிய செஞ்சுடர் மூர்த்தீ**
**செல்வமே சிவபெரு மானே**
**எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே**

**விளக்கம்** : ஒப்பும் உவமையும் இல்லாத தன்மையுடைய ஒருவனே ! அடியேனுடைய மனத்துள் விளங்குகின்ற அறிவொளியே ! உண்மையானதும், நிலைபேறுடையதும் எது என்று அறிந்து கொள்ள மாட்டாத எனக்கு மெய்ஞ்ஞானம் என்னும் சிறந்த பொருளைத் தந்த அன்பு வடிவானவே ! சொல்லுவதற்கு அரிய வளம் பொருந்திய ஒளி வடிவினனே ! நிலைத்த செல்வமே ! சிவபெருமானே ! யான் செயலிழந்து தளர்வுற்ற நிலையில் உன்னை உறுதியாகப் பிடித்துக் கொண்டேன். இனிமேல் என்னை விட்டு நீ எழுந்தருளுவது எங்கு?

6. **அறவையேன் மனமே கோயிலாக் கொண்டான்**
**டளவிளா ஆனந்த மருளிப்**
**பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட**
**பிஞ்ஞகா பெரியஎம் பொருளே**
**திறவிலே கண்ட காட்சியே அடியேன்**
**செல்வமே சிவபெரு மானே**
**இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே**

**விளக்கம்** : திக்கற்றவனாகிய என்னுடைய உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு எனக்கு எல்லையற்ற பேரின்பத்தைக் கொடுத்து, என் பிறப்பின் மூலத்தைக் களைந்து என் குடும்பம் முழுவதையும் ஆண்டு கொண்ட தலைக்கோலமுடையவனே ! அடியேனுடைய நிலைத்த செல்வமே! சிவபெருமானே ! இறுதியில் உன்னை இறுதியாகப் பற்றினேன். இனி எழுந்தருளிச் செல்வது எங்கே?

7. **பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்**
**பற்றுமா றடியனேற் கருளிப்**
**பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து**
**பூங்கழல் காட்டிய பொருளே**
**தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ**

**செல்வமே சிவபெருமானே**

**ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**

**எங்கெழுந் தருளுவ தினியே**

**விளக்கம்** : பிறவிதோறும் தொடர்ந்து வரும் பாசத்தளையை வேரோடு அறுக்கு் பழம்பொருளானவனே ! அன்பு செய்யும் வகையை அடியேனுக்கு அருள் செய்து, எனது வழிபாட்டை விருப்புடன் ஏற்றவனே! எனது உள்ளத்துள் புகுந்து அழகிய திருவடிகளைக் காட்டியமெ ய்ப் பொருளே ! கதிர் வீசும் ஒளி விளக்கே ! நிலையான செல்வமே ! சிவபெருமானே! உன்னை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கும் என்னை விட்டு நீ எங்கே செல்வது. என்னைக் காத்தருள்க இறையே!

8. **அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற**

**ஆதியே யாதும் ஈறில்லாச்**

**சித்தனே பக்தர் சிக்கெனப் பிடித்த**

**செல்வமே சிவபெருமானே**

**பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்**

**பிழைத்தவை அல்லையாய் நிற்கும்**

**எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**

**எங்கெழுந் தருளுவ தினியே.**

**விளக்கம்** : அப்பனே ! தேவராயும், அத்தேவர் உலகமாயும் நின்ற முழு முதற்பொருளே ! சற்றும் முடிவில்லாத ஞான வடிவினனே ! அன்பர்கள் உறுதியாய்ப் பற்றிக் கொண்ட நிலைபெற்ற செல்வமே ! சிவபெருமானே ! அடியாரிடத்துப் பெரு வியப்புக் கொண்டவனே ! எல்லா உயிர்களோடும் கலந்து அவையேயாய், அவை நிலை பெறக் காரணமுமாய், அவையல்லாது வேறு பொருளாய் நிற்கும் தன்மையுடைய மாயம் உடையவனே !

உன்னை இறுகப் பிடித்துக் ெ7காண்டேன். நீ இனிமேல் என்னை விட்டு எங்கே எழுந்தருளிச் செல்வது ?

9. பால்நினைந் தூர்ட்டுடந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறத் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே .

**விளக்கம்** : பசிக்கும் காலத்தே குழந்தை அழுதுவதற்கு முன்னே அதனை அறிந்து பாலை ஊட்டுகின்ற கருணையுடைய தாயைக் காட்டிலும் மிகவும் அன்பு கொண்டவனே ! பாவியாகிய என்னுடைய உடம்பினை உருக்கி, உள்ளத்தில் ஞான ஒளியைப் பெருக்கி அழியாத பேரின்பமாகிய தேனைப் பொழிந்து, போகுமிடமெல்லாம் என் உடன் திரிந்த அருட்செல்வம் ஆனவனே! சிவபெருமானே ! உன்னை நான் உறுதியாகப் பற்றினேன். நீ இனிமேல் என்னை விட்டு எங்கே எழுந்தருளிச் செல்வது ? காத்தருள்க.

10. புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**விளக்கம்** : அற்பமாகிய என் புலால் நாற்றம் வீசும் மயிர்க்கால் தோறும் நெகிழ்ச்சி அடையுமாறு அதனைப் பொன்னாலாகியக் கோயில் எனக் கருதி அதன்கண் எழுந்தருளியவனே !என் எலும்புகளையெல்லாம் உருகும்படி செய்து எளியவனாகிய என்னை ஆண்டருளிய ஆண்டவனே ! குற்றமற்ற மாணிக்கமே ! நீ என் உள்ளத்துப் புகுந்ததால் பிறப்பு, இறப்பு, வாழ்வுத் துன்பம், அறியாமை ஆகியவையின் தொடர்பு அறுபட்டு ஒழிந்தது. இன்ப வடிவானவனே ! உன்னை இறுகப் பற்றினேன். என்னை விட்டு இனி நீ செல்வது தான் எங்கே ஐயனே ? என்று கூறுகிறார்.

**பாட வினாக்கள் :**

1. திருஞானசம்பந்தரின் பக்திச் சிறப்பினை விவரி?
2. திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகத்தின் செய்திகளைக் குறிப்பிடுக.
3. அப்பரின் பக்தித் திறத்தினை ஆராய்க.
4. மாணிக்கவாசகரின் பிடித்த பத்து குறிப்பிடும் செய்திகளை விவரிக்க.
5. திருநாவுக்கரசர் - குறிப்பு வரைக.
6. திருஞானசம்பந்தர் - சிறுகுறிப்பு வரைக
7. 'மாணிக்கவாசகர்' பற்றி சிறுகுறிப்பு எழுதுக
8. சிவபெருமானின் சிறப்பினை பக்தி இலக்கியப் பாடல்களின் வழி எடுத்துரைக்க.
9. சைவத் திருமுறைகள் பற்றி எழுதுக.
10. பக்தி இலக்கியம் - குறிப்பு வரைக

## அலகு – 2

## வைணவ இலக்கியம்

- வைணவப் பெரியோர்களின் பாடல்கள் 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' எனப் போற்றப்படுகின்றது. வைதீகசமயம் எனும் பொது நிலையில் இருந்து பிரிந்தவை சைவமும், வைணவமும் ஆகும். திருமாலைத் தெய்வமாகப் போற்றிப் பரவுகிறது வைணவம்.
- பக்தி இலக்கிய காலத்தில் ஆழ்வார்களின் பாடல்களால் வைணவம் புகழ் பெற்றுப் பரவிய போதிலும், தொல்காப்பிய காலத்திலேயே திருமால், மாயோன் என முல்லை நிலக்

கடவுளாகப் போற்றப்படுகின்றன. பரிபாடலும், மாயோன் பெருமை பேசும். மாயோன் என்றால் திருமால்.

- பல்லவர் காலத்தில் வைணவமும், சைவமும் போட்டி போட்டு வளர்ந்தன. இரண்டும் சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கினைக் குறைத்தன. வைணவ இலக்கியங்கள் பக்திப் பாசுரம் என்ற அளவில் அமையாது , காப்பியங்களாகவும், பல்வேறு வகைப்பட்ட இலக்கியங்களாகவும் வளர்ந்து தமிழுக்குப் பெருமை சேர்த்தன.
- வைணவ இலக்கியங்களை வளம் சேர்த்தவர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். இவர்கள் ‘பன்னிருவர்’ ஆவார். முதல் மூன்று ஆழ்வார்கள் காலத்தால் முந்தியவர்கள் . கோயில் தோறும் சென்று நாயன்மார்கள் போன்று இசையோடு பாடல் பாடித் திருமாலின் சிறப்பினைப் பரப்பினர். திருமாலுக்குரிய வைணவத் தலங்களுக்குச் சென்று பாடியுள்ளனர். ஆழ்வார்களின் பாடல்களில் பக்திப் பெருக்கு , உணர்ச்சியோடு கலந்திருக்கும்.
- நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தை அறியச் செய்த பெருமை நாதமுனிகளைச் சாரும்.
- நாலாயிரம் பாடல்களின் தொகுப்பு ‘நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்’ ஆகும்.
- மொத்தம் 24 நூல்கள் இடம்பெற்றுள்ளன. பாடியோர் 12 பேர். நான்கு பிரிவாக இதனைப் பிரிப்பர்.

**பன்னிரு ஆழ்வார்கள்:**

1. **பொய்கையாழ்வார்**
2. **பூதத்தாழ்வார்**
3. **பேயாழ்வார்**
4. **திருமழிசையாழ்வார்**
5. **நம்மாழ்வார்**
6. **மதுரகவியாழ்வார்**
7. **குலசேகர ஆழ்வார்**

8. பெரியாழ்வார்
9. ஆண்டாள்
10. தொண்டரடிப்பொடியாழ்வார்
11. திருப்பாணாழ்வார்
12. திருமங்கையாழ்வார்

இவர்களில் ஆண்டாள் ஒருவரே பெண் ஆவார்.

### ஆண்டாள் - திருப்பாவை முழுவதும் ( 1 - 30 பாடல்கள்)

### ஆண்டாள்

- ✓ பெரியாழ்வார் நந்தவனத்தில் பயிரிட்ட துளசிப் பாத்தியில் ஆடித் திங்கள் பூர நட்சத்திரத்தில் பிறந்தவர். பூ மகள் அம்சமாய் அவதரித்தவர். இயற்பெயர் கோதை.
- ✓ இவரைப் பெரியாழ்வார் பெற்றெடுத்த பைங்கொடி, சூடிக் கொடுத்த சுடர்க்கொடி, கோதை நாச்சியார் என்றெல்லாம் கூறுவர்.
- ✓ மணப்பருவம் எய்தி பெருமாளையே மணக்கும் மனமுடன் இருந்தார். பெருமாளுக்காகச் சூட்டப்படும் மாலையை யாரும் அறியா வண்ணம் நாளும் தந்தைக்குத் தெரியாமல் தான் சூடி, தன்னைக் கண்ணாடியில் கண்டு மகிழ்ந்து பின் கழற்றி வைத்துவிடுவார். ஒருநாள் இதனை அறிந்த பெரியாழ்வார் வேறு மாலைத் தொடுக்குமாறு கூறி, மாலை சாத்த முனைந்த போது பெருமாள் மறித்து சூடிக்கொடுத்த மாலையே வேண்டுமெனக் கனவில் கூற அங்ஙனமே செய்து கோதையையும் பெருமாளுக்கே திருமணம் செய்து கொடுத்தார்.
- ✓ ஆண்டவனையே ஆண்டதால் ஆண்டாள் என்று அழைக்கப்பட்டார். இவர் பாடிய நூல் இரண்டு. 1. **திருப்பாவை** 2. **நாச்சியார் திருமொழி**
- ✓ **திருப்பாவை 30 பாடல்களைக் கொண்டுள்ளது. பாவை நோன்பு பற்றியது. நாச்சியார் திருமொழி 143 பாடல்களைக் கொண்டுள்ளது.** இரண்டும் பக்திச்சுவை மிக்கது என்பர்.
- ✓ ஆண்டாள் திருப்பாவையானது தோன்றிய காலந்தொடங்கி இன்று வரை காலம் காலமாக பதி வைஷ்ணவ சமூகத்தை வழி காத்திருக்கிறது. ஆண்டாள் பாசுரங்களுக்கு பண் வகுப்பு இல்லை. ஆனால் இராகங்கள் சொல்லப்பட்டன. கடைசிப் பாடலில் ஆண்டாள்

தமது பாசுரத்தைச் சங்கத்தமிழ் மாலை முப்பது என்று கூறுவது வரலாற்றுப் பொருளுடையதாகும்.

- ✓ திருப்பாவை பாவை நோன்பு பற்றிக் கூறுகிறது. மார்கழி மாதம் மழை பெய்யும் மாதம் ; புதுநீர் வெள்ளம் காணும் பருவம் ; அப்பொழுது மக்கள் ஆறுகளுக்குச் சென்று நீராடி மகிழ்வு தெரிவித்துக் கொள்கின்றனர். கன்னிப் பெண்கள் காலையில் எழுந்து ஒருவர் மற்றொருவரை எழுப்பிப் பாவையை வழிபடும் களம் நோக்கிச் செல்கின்றனர். அந்த விழாக் கொண்டாடினால் நாட்டில் மழை பெய்யும் என்று நம்புகிறார்கள்.
- ✓ இந்த விழா தொன்று தொட்டு வரும் திருவிழா ; பாவையின் பேரைச் சொல்லி நோன்பு நோற்று அத்தெய்வத்தை வழிபடுகின்றனர். இப்பாடல் அமைப்பைக் கண்ணனின் பாமாலையை மாற்றியது ஆண்டாளின் தனித்திறம்.
- ✓ பாவை வழிபாட்டுக்குப் பறை தேவை என்றும், அதனை நமக்குத் தருமாறும் இளம் கன்னியராகிய ஆய மகளிர் பாடுவதாக இப்பாடல் அமைந்துள்ளன. ஏனைய ஆழ்வார்களைப் போலவே இறைவனோடு தம் உறவு எப்பொழுதும் தொடர்ந்து நிற்க வேண்டும் என்பதே இறுதி வேண்டுகோளாகும்.

## திருப்பாவை

பாடல்

1. மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்

நீராடப் போதுவீர் போதுமினோ நேர் இழையீர்
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளம் சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம் பாவாய்.

**விளக்கம்** : பொருத்தமான அணிகலன்களை அணிந்த பெண்களே ! செல்வம் கொழிக்கும் ஆயர்பாடியிலே உள்ள செல்வச் சிறுமியர்களே! நாராயணன் வேல்கொண்ட கொடிய தொழிலையுடையவனாகிய நந்தகோபன் மகன். அழகு நிறைந்த கண்களையுடைய யசோதையின் இளஞ்சிங்கம். கருமை நிறத்திருமேனியுடையவன். சிவந்த கண்களையுடையவன். கதிர்விரிக்கும் முழுமதி போன்ற முகமுடையவன். அவன் நாம் விரும்பிய பொருளெல்லாம் வழங்குவான். இன்று மார்கழி மாதத்து பெளர்ணமி ! நல்ல நாள்! உலகத்தார் புகழும் வண்ணம் நீராட வருபவர்களே வாருங்கள்.

2. வையத்து வாழ்வீர்காள் நாமும் நம் பாவைக்குச்

செய்யும் கிரிசைகள் கேளீரோ
பாற்கடலுள் பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய் உண்ணோம் பால் உண்ணோம் நாட்காலே நீர் ஆடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோர் எம் பாவாய்.

விளக்கம் : இம்மண்ணுலகத்தில் வாழ்பவர்களே , நாம் நம் பாவை நோன்புக்குச் செய்ய வேண்டிய காரியங்களைக் கேளுங்கள்.திருப்பாற்கடலிலே அறிதுயில் கொண்டுள்ள இறைவன் திருவடிகளைப் பாடுவோம். நெய் உண்ண மாட்டோம்: பால் பருக மாட்டோம் : விடியற்காலையில் நீராடுவோம்: கண்களுக்கு மை தீட்ட மாட்டோம் : கூந்தலில் பூ வைத்து முடிக்க மாட்டோம். செய்யத்தகாத எச்செயல்களையும் செய்ய மாட்டோம்: எவரிடமும் போய் கோள் சொல்லமாட்டோம்: ஐயமும், பிச்சையும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு இடுவோம்;இவை யாவும் செய்வது நாம் கடைத்தேறும் வழிக்கே என்று நினைத்து மகிழ்வோம்.

**3. ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி**
**நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்**
**தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து**
**ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயல் உகளப்**
**பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி வாங்கக்**
**குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : நெடியோன் திரிவிக்கிரமன் ஆக ஓங்கி வளர்ந்து உலகத்தை அளந்த உத்தமன் திருமால். அவன் திருநாமங்களைப் பாடி நாம், நம் நோன்பிற்குரியவற்றைக் கூறி நீராடுவோம் : அவ்வாறு நீராடினால் தீமையில்லாமல் நாடெல்லாம் மாதம் மூன்று மழை பெய்யும் : அதனால் செந்நெற்பயிர் ஓங்கிப் பருத்து வளரும் : அந்தப் பயிர்களின் ஊடே கயல் மீன்கள் துள்ளித்திரியும் : அழகிய குவளை மலர்களிலே ’புள்ளிகளையுடைய வண்டுகள் தேனைக்குடித்து மெய்ம்மறந்து உறங்கும், மாட்டுத்தொழுவில் புகுந்து இருந்து, அழகிய முலைகளைப் பற்றி இழுத்தால், தேக்கி வைத்துக் கொள்ளாமல் பால்கரந்து குடங்களை நிறைக்கும் வள்ளல் தன்மை வாய்ந்த பசுக்களால் இத்தகைய நீங்காத செல்வம் வந்து நிறையும்.

4. ஆழி மழைக்கண்ணா ஒன்று நீ கை கரவேல்
ஆழி உள் புக்கு முகந்து கொடார்த்தேறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழி போல் மின்னி வலம்புரியு போல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்
வாழ உலகினில் பெய்திடாய்
நாங்களும் மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம் பாவாய்.

**விளக்கம்** : கடல்போன்ற பெருமையுள்ள மழையாகிய அருளாளனே? நீ ஒன்றையும் மறைத்து வைக்காதே : கடலுக்குள் செல், கடல் நீரை முகர்ந்து கொள் : போரொலியுடன் மேலோங்கி எழு ; ஊழிக்காலத்திலும் கேடில்லாத திருமாலின் திருமேனிபோல் கருமை கொள் பெருமையும் எழிலும் பொருந்திய பதுமநாபனின் கையில் விளங்கும் சக்கரத்தினைப் போல மின்னிட்டு விளங்கு! அவனது மற்றொரு கையில் விளங்கும் வலம்புரிச்சங்கு போல நின்று முழங்கு. அப்பெருமானின் சாரங்கம் என்னும் வில்லிலிருந்து புறப்படும் அம்புமழை போல உலகம் வாழவும் நாங்களும் மகிழ்ந்து மார்கழி நீராடவும் காலந்தாழ்த்தாமல் பொழி.

5. மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கைத்
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம் பாவாய்.

**விளக்கம்** : அவன் மாயன், நிலைத்தன்மையுடைய வடமதுரையில் தோன்றிய மைந்தன். தூய்மையும், பெருமையுமுடைய நீரினையுடைய யமுனைக்கரையில் வளர்ந்தவன். ஆயர்

குலத்தில் தோன்றிய அழகிய விளக்கு. தன்னை ஈன்ற தாயின் பெருமையை உலகெல்லாம் விளங்கச் செய்த தாமோதரன். அவனை நாம் உள்ளமும் உடம்பும் தூய்மையுடையவர்களாகி, நல்ல மலர்களைத் தூவி வணங்குவோம். வாயினால் அவன் புகழைப் பாடுவோம். மனத்தினால் அவன் தன்மையை நினைப்போம். இவ்வாறு நாம் செய்தால் நாம் செய்த பிழைகளும், இனிமேல் வரும் பிழைகளும் நெருப்பில் இட்ட தூசுபோல் அழிந்துவிடும். ஆகையால் அவன் புகழைப் பேசுவோ்மாக.

**6. புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயில்**
**வெள்ளை விளி சங்கின் பேர் அரவம் கேட்டிலையோ**
**பிள்ளாய் எழுந்திராய் பேய் முலை நஞ்சுண்டு**
**கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி**
**வெள்ளத்தரவில் துயில் அமா்ந்த வித்தினை**
**உள்ளத்துக் கொண்டு முனிவா்களும் யோகிகளும்**
**மெல்ல எழுந்தரி என்ற பேர் அரவம்**
**உள்ளம் புகுந்து குளிா்ந்தேலோா் எம் பாவாய்.**

**விளக்கம்** : பறவைகள் ஒலிக்கின்றன. கருடனுக்குத் தலைவனாகிய நம் இறைவன் எழுந்தருளிய திருக்கோயிலிலிருந்து வெண்சங்கு அழைக்கும் பேரொலி உன் காதில் விழவில்லையா? நம்பெருமான், பூதனைப் பேயின் முலையில் தடவிய நஞ்சினை உண்டவன். வஞ்சனையோடு வண்டி வடிவத்தில் வந்த சகடாசுரன் நொறுங்கி இறக்குமாறு திருவடி தூக்கியவன். திருப்பாற்கடலில் பாம்பணையில் பள்ளி கொண்டவன். உலகுக்கெல்லாம் வித்தாக அமைந்தவன். முனிவா்களும், யோகிகளும் அவனை உள்ளத்தே கொண்டு மெல்ல எழுந்து ‘‘அரி’’ என்று ஓதுகின்ற பேரொலி நம் உள்ளம் புகுந்து குளிா்ந்தது. சிறு பிள்ளையாய் எழுந்து வா!

**7. கீசு கீசென்றெங்கும் ஆனைச்சாத்தன்**
**கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப் பெண்ணே**
**காசும் பிறப்பும் கல கலப்பக் கை பேர்த்து**
**வாச நறும் குழல் ஆய்ச்சியா்**
**மத்தினால் ஓசைபடுத்த தயிர் அரவம் கேட்டிலையோ**
**நாயகப் பெண் பிள்ளாய் நாராயணன் மூர்த்தி**

**கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ**
**தேசம் உடையாய் திறவேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : துயிலும் பெண்ணே ! ‘‘கீசு கீசு’’ என்று ஆனைச் சாத்தன் பறவைகள் ஒன்றோடு ஒன்று கலந்து பேசின. அந்தப் பேச்சின் ஒலி உனக்குக் கேட்கவில்லையா? மணம் பொருந்திய கூந்தலையுடைய இடைச்சியர் தங்கள் கழுத்தில் உள்ள அச்சுத் தாலியும், ஆமைத்தாலியும் ‘கலகல’ என்று ஒலிக்க, கைகளை அசைத்து, மத்தினால் கடைந்து ஓசைப்படுத்தும் தயிரின் ஒலியும் கேட்கவில்லையோ? தலைமையுடைய பெண்ணே! நாராயணனாகிய மூர்த்தியை, கேசவனை நாங்கள் பாடுகின்றோம்! நீ , கேட்டுக் கொண்டே கிடக்கின்றாயோ? ஒளியுடையவளே ! கதவைத்திற.

**8. கீழ்வானம் வெள்ளென்றெருமை சிறுவீடு**
**மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும்**
**போவான் போகின்றாரைப் போகாமல் காத்து**
**உன்னைக் கூவுவான் வந்து நின்றோம்**
**கோது கலம் உடைய பாவாய் எழுந்திராய் பாடிப் பறை கொண்டு**
**மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய**
**தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்**
**ஆவா என்றாராய்ந்தருளேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : மனமகிழ்ச்சியுடைய பெண்ணே! கிழக்கே வானம் வெளுத்தது. எருமைகள் சிறிது நேரம் விடுதலை பெற்று மேய்வதற்காகச் சென்று பரவியுள்ளன. நோன்பு செய்யும் இடத்திற்குப் பலர் சென்று விட்டனர். மீதமுள்ளவர்களும் அங்கே கும்பிடும் நோக்கத்தோடு புறப்படுகின்றனர். அவர்களைப் போக விடாமல் நிறுத்தி வைத்து, உன்னை அழைக்க வந்து நின்றோம். எழுந்து வா! நம் இறைவன் குதிரை வடிவம் எடுத்து வந்த அசுரனது வாயைப் பிளந்தவன். கம்சன் ஏவிய மல்லர்களை அழித்தவன். தேவர்கள் எல்லார்க்கும் பெரிய தேவன் ! அவனை நாம் சென்று அடைந்து பாடி, வேண்டிக்கொண்டு வணங்கினால், ‘‘ஆ’’ என்று வாய் திறந்து இரக்கம் காட்டி ‘‘வா’’ என்று அழைத்து நம் வேண்டுதலை ஆராய்ந்து அருள்புரிவான்.

**9.தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்**
**தூபம் கமழத் துயில் அணைமேல் கண் வளரும்**
**மாமான் மகளே மணிக் கதவம் தாள் திறவாய்**
**மாமீர் அவளை எழுப்பீரோ**
**உன் மகள் தான ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ**
**ஏமப் பெருந் துயில் மந்திரப் பட்டாளோ**
**மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று**
**நாமம் பலவும் நவின்றேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : தூய மாணிக்கங்களை அழுத்திச் சமைத்த மாடத்திலே சுற்றிலும் விளக்குகள் எரியவும், அகில் முதலியவற்றின் புகை மணக்கவும், தூங்குவதற்கென்றே உள்ள படுக்கையின் மீது கண் உறங்குகின்ற அம்மான் மகளே ! மாணிக்கக் கதவின் தாழ்ப்பாளைத் திற ! (மாமன்மகளை இவ்வாறு அன்போடு எழுப்பியும் அவள் எழவில்லை : ஆகையால் அவள் தாயை அழைத்து அவளை எழுப்பும்படி வேண்டுகின்றனர் ) மாமியாரே! உங்கள் மகள் எங்களுக்குப் பதிலே சொல்லாததால் ஊமையோ? அல்லது (கேளாத) செவிடோ? உறக்கமோ? ஒழிவில்லாத ஆழ்ந்த உறக்கத்தில் மந்திரத்தினால் கட்டுப்பட்டுக் கிடக்கிறாளோ? ''மாமாயனே ! மாதவனே ! வைகுந்தனே! என்று அவனுடைய திருநாமங்கள் பலவற்றையும் கூறினோம். ஆயினும் அவள் எழவில்லை : அவளை எழுப்ப மாட்டீர்களோ?

**10.நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்**
**மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்**
**நாற்றத் துழாய் முடி நாராயணன்**
**நம்மால் போற்றப் பறை தரும் புண்ணியனால்**
**பண்டொரு நாள் கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகர்ணனும்**
**தோற்றும் உனக்கே பெருந் துயில் தான் தந்தானோ**
**ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே**
**தேற்றமாய் வந்து திறவேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : விரதமிருந்து சுவர்க்கம் போகின்ற அம்மையே ! வாசற் கதவைத் திறக்காதவராயினும் பதிலுங்கூட சொல்ல மாட்டார்கள்? மணக்கின்ற துளசி மாலையைத் திருமுடியில் அணிந்த நாராயணன், நம்மால் போற்றத்தக்க நம் நோன்புப் பரிசான

பேரின்பத்தை நல்குவான். புண்ணிய மூர்த்தியாகிய இராமபிரானால் முன்னொரு காலத்தில் எமன் வாயிலே போய் விழுந்த கும்பகர்ணன் உறங்கும் போட்டியில் உனக்குத் தோல்வியடைந்து அவனுடைய பேருறக்கத்தை உனக்குத் தந்தானா? ஆழ்ந்த உறக்கமுடையவயே! பெறுதற்கரிய ஆபரணம் போன்றவளே! உறக்கம் தெளிந்து வந்து கதவைத் திற!

11. **கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து**
**ற்றார் திறல் அழியச் சென்று செருகச் செய்யும்**
**குற்றம் ஒன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே**
**புற்றரவல்குல் புனமயிலே போதராய்**
**சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்து**
**நின் முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர் பாடச்**
**சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி**
**நீ எற்றுக்குறங்கும் பொருளேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : இடையர், கன்றுகளையுடைய கறவைப் பசுக்கூட்டங்கள் பலவற்றைப் பால் கறப்பார்; பகைவர்களின் வலிமை அழியும்படி சென்று போர் செய்வர்; குற்றம் ஒன்றுமில்லாதவர். அவர்களது தங்கக்கொடி போன்ற பெண்ணே ! புற்றிலி இருக்கும் பாம்புபோல அல்குலையுடையவளே !காட்டில் திரியும் அழகிய மயில் போன்றவளே ! எழுந்து வா! நம் உறவினராகிய தோழிமார் எல்லாரும் வந்து , உன் வீட்டு வாசலிலே புகுந்து முகில் வண்ணன் திருநாமத்தைப் பாடுகின்றோம். செல்வப் பெண்ணே ! கொஞ்சம் கூட அசையாமலும், பேசாமலும் நீ எதற்காக இவ்வாறு உறங்குகின்றாய்? இதற்குப் பொருள்தான் என்ன?

12. **கனைத்திளம் கற்றெருமை கன்றுக்கிரங்கி**
**நினைத்து முலை வழியே நின்று பால் சோர**
**நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்**
**பனித் தலை வீழ நின் வாசற் கடைபற்றிச்**
**சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற**
**மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்**
**இனித் தான் எழுந்திராய் ஈதென்ன பேர் உறக்கம்**
**அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : இளங்கன்றினையுடைய எருமைகள் கனைத்து, தம் கன்றின் மீது இரக்கம் கொண்டு கன்றை நினைத்து நின்று, தம் முலை வழியாகப் பால் சொரிந்து நனைத்து, தம் வீட்டைச் சேறாக்குகின்றன; அத்தகைய எருமைகளையுடைய நல்ல செல்வனுடைய தங்கையே! மார்கழி மாதப் பனி எங்கள் தலையிலே வீழ, உன் வீட்டுக்கடை வாசலில் நிற்கின்றோம் ;தென்னிலங்கை வேந்தனாகிய இராவணனைக் கோபத்தினால் அழித்த, நெஞ்சிற்கு இனியவனான இராமபிரானை நாங்கள் பாடுகின்றோம். கதவைத் திற ! இது என்ன உறக்கம் ? நாங்கள் உன்னை இப்படி அழைப்பது எல்லா வீட்டாருக்கும் தெரிந்து விட்டது! இனியாவது எழுந்து வா!

13. **புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்**
**கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்ப்**
**பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம் புக்கார்**
**வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று**
**புள்ளும் சிலம்பின காண் போதரிக் கண்ணினாய்**
**குள்ளக் குளிரக் குடைந்து நீர் ஆடாதே**
**பள்ளிக் கிடத்தியோ பாவாய் நீ நன்னாளால்**
**கள்ளம் தவிர்ந்து கலந்தேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : நம் பெருமான், பறவை வடிவமாக வந்த பகாசுரனுடைய வாயைப் பிளந்து எறிந்தவன் ; கொடிய அரக்கனாகிய இராவணன் தலைகள் பத்தினையும் அறுத்து அழித்தவன் ; அவனுடைய வீரப் புகழைப் பாடிக் கொண்டு பிள்ளைகள் எல்லாரும் பாவை நோன்பை நோற்கும் இடத்திற்குப் போய்ப் புகுந்தனர்; விடிவெள்ளி தோன்றி விட்டது; வியாழம் மறைந்து விட்டது. பறவைகள் ஒலிக்கின்றன. மலர் போன்ற அழகிய இரேகை பொருந்திய விழியுடையவளே ! பாவையே ! இந்த நல்ல நாளில் நீ, உன் கள்ளத்தனத்தை விட்டுவிட்டு எங்களோடு கலந்து கொண்டு, குளிரக் குளிரக் குடைந்து நீராடாமல் படுக்கையிலே கிடக்கின்றாயா?

14. **உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்**
**செங்கழுநீர் வாய் நெகிழ்ந்தாம்பல் வாய் கூம்பின காண்**
**செங்கல்பொடிக் கூரை வெண்பற் தவத்தவர்**
**தங்கள் திருக்கோயிற் சங்கிடுவான் போதந்தார்**
**எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும்**
**நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்**
**சங்சொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்**
**பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம் பாவாய்.**

**விளக்கம் :** முந்திவந்து உங்களை எழுப்புவேன் என்று வாயால் வெறும் பேச்சுப் பேசிய நங்கையே! எழுந்திரு ! வெட்கமில்லாதவளே ! நாவின் நீட்சியையுடைவளே ; உங்கள் வீட்டுப் புழக்கடைத் தோட்டத்தில் உள்ள குளத்திலே செங்கழுநீர்ப் பூக்கள் பூத்தன ; ஆம்பல் மலர்கள் இதழ் குவிந்து வாய்மூடின ; காவியாடை உடுத்தவரும், வெண்மையுடைய பற்களையுடைய வருமான தவசீலர்கள் தங்களது திருக்கோயில்களைத் திறக்கச்சென்று விட்டனர் ; சங்கு, சக்கரம் ஏந்திய நீண்ட திருக்கைகளையும் தாமரைக் கண்களையும் உடையவனைப் பாடுவோமாக!

15. **எல்லே இளம் கிளியே இன்னம் உறங்குதியோ**
**சில் என்றழையேன்மின் நங்கைமீர் போதருகின்றேன்**
**வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன் வாயறிதும்**
**வல்லீர்கள் நீங்களே நானே தான் ஆயிடுக**
**ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை**
**எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொள்**
**வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க வல்லானை**
**மாயனைப் பாடேலோர் எம் பாவாய்.**

விளக்கம் :

**எழுப்புவோர்** : ஏடி! ( ஏண்டி, ஏனடி) இளங்கிளியே ! இன்னம் உறங்குகின்றாயோ ?

**எழாதிருப்பவள்** : பெண்களே ! ''சில்'' என்று கத்திக் கூப்பிடாதீர்கள் ! இதோ வந்து விடுகின்றேன் !

**எழுப்புவோர்** : நீ, மிகவும் கெட்டிக்காரி, உன் பேச்சுக்களை முன்னமே அறிந்திருக்கிறோம் ! உன் வாயையும் அறிவோம்.

**எழாதிருப்பவள்** : கெட்டிக்காரிகள் நீங்களேயானாலும் சரி நானேதான் ஆனாலும் சரி.

**எழுப்புவோர்** : சீக்கிரம் நீ எழுந்து வா ! இந்தக் கெட்டிக்காரத் தனம் தவிர உனக்கு என்று வேறு என்ன வைத்திருக்கிறாய்?

**எழாதிருப்பவள்** : எல்லாரும் வந்துவிட்டனரோ?

**எழுப்புவோர்** : வந்துவிட்டார்கள்! நீ வந்து எண்ணிக்கொள்; குவலயாபீடம் என்னும் வலிய யானையைக் கொன்றவனை, பகைவரின் செருக்கை அழிக்க வல்லவனை, மாயனைப் பாடு.

16. **நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய கோயில் காப்பானே**
**கொடித் தோன்றும் தோரண வாயில் காப்பானே**

**மணிக்கதவம் தாள் திறவாய்**
**ஆயர் சிறுமியரோமுக்கு**
**அறை பறை மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்**
**தூயோமாய் வந்தோம் துயில் எழப் பாடுவான்**
**வாயில் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா**
**நீ தேய நிலைக் கதவம் நீக்கேலோர் எம் பாவாய்.**
**(எல்லோரும் திருக்கோயில் முன்சென்று பாடுகின்றனர்)**

**விளக்கம்** : உலகுக்கெல்லாம் தலைவனாய் நிலைத்திருக்கின்றவனாகிய நந்தகோபனுடைய திருக்கோயிலைக் காப்பவனே ! கொடிகள் விளங்கித் தோன்றுகின்ற தோரண வாயிலைக் காப்பவனே! மணிக்கதவின் தாழ்ப்பாளைத் திறப்பாய் ! இடையவர்களின் சிறுமியராகிய எங்களுக்கு நோன்பு நிறைவுக்கான பறை ஒன்றைத் தருவதாக மாயனாகிய மணிவண்ணன் நேற்றே வாக்களித்தான். அந்த எம்பெருமான் துயில் எழுந்தருளுமாறு பாடுவதற்கு, உள்ளும் புறமும் தூயவர்களாய் நாங்கள் வந்தோம். உன் வாயாலே , முதன்முதலிலேயே மறுத்துச் சொல்லிவிடாதே அப்பனே! வாயில் நிலையோடுமு நேசமாகப் பொருந்தியிருக்கும் கதவை நீ, நீக்கு.

17. **அம்பரமெ தண்ணீரே சோறே அறம் செய்யும்**
**எம் பெருமான் நந்தகோபாலா எழுந்திராய்**
**கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குல விளக்கே**
**எம் பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்**
**அம்பரம் ஊடறுத்தோங்கி உலகளந்த**
**உம்பர் கோமானே உறங்காதெழுந்திராய்**
**செம் பொற் கழல் அடிச் செல்வா பலதேவா**
**உம்பியும் நீயும் உறங்கேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : ஆடை, தண்ணீர், சோறு ஆகிய மூன்றையும் எங்களுக்கு அறமாக வழங்கும் எம்பெருமானே ! நந்தகோபாலா, எழுந்திரு ! வஞ்சிக்கொடி போன்ற பெண்கள் எல்லாருக்கும் கொழுந்தாகவும் தாம் பிறந்த குலத்திற்கு விளக்காகவும், எம்பெருமாட்டியாகவும் விளங்குகின்ற யசோதையே ! துயில் நீங்கி உணர்வு பெற்றெற ! வானவெளியை ஊடறுத்து, ஓங்கி வளர்ந்து உலகத்தைத் திருவடியால் அளந்த தேவதேவனே ! துயில் கொள்ளாமல் எழுந்திரு . செம்பொன்னாலாகிய வீரக்கழல் அணிந்த செல்வா! பலதேவா ! உன் தம்பியாகிய கண்ணபிரானும் நீயும் உறங்காதீர்கள்.

18. **உந்து மத களிற்றன் ஓடாத தோள் வலியன்**
**நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்**
**கந்தம் கமழும் குழலி கடை திறவாய்**
**வந்தெங்கும் கோழி அழைத்தன காண்**
**மாதவிப் பந்தல் மேல் பல் கால் குயில் இனங்கள் கூவின காண்**
**பந்தார் விரலி உன் மைத்துனன் பேர் பாடச்**
**செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப**
**வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : நந்தகோபாலன், மதம் பொழிகின்ற யானைகளை உடையவன். நீங்காத தோள் வலிமையுடையவன் ; அவனுடைய மருமகளே ! நப்பின்னையே ! மணங்கமழும் கூந்தலையுடையவளே ! கதவைத்திற ! கோழிகள் எங்கும் வந்து கூவின ; மாதவிக் கொடிகள் படர்ந்திருக்கும் பந்தலின் மேலே குயில் கூட்டங்கள் பலமுறை கூவின ; பந்து பொருந்துகின்ற விரலையுடையவளே ! உன் மைத்துனன் பெயரை நாங்கள் சொல்லிப்பாட, செந்தாமரை போன்ற உன் கையால் அழகிய வளையல்கள் ஒலிக்க மகிழ்ந்து வந்து திறப்பாயாக.

19. **குத்து விளக்கெரிய கோட்டுக்கால் கட்டில்மேல்**
**மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேல் ஏறிக்**
**கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கை மேல்**
**வைத்துக் கிடந்த மலர் மார்பா வாய் திறவாய்**
**மைத் தடம் கண்ணினாய் நீ உன் மணாளனை**
**எத்தனை போதும் துயில் எழ ஒட்டாய் காண்**
**எத்தனை யேலும் பிரிவாற்றகில்லாயால்**
**தத்துவம் அன்று தகவேலோம் எம் பாவாய்.**

**விளக்கம்** : குத்துவிளக்கு ஔிபரப்பிக் கொண்டிருக்கிறது ; யானைத் தந்தத்தினால் அழகு பெறச் செய்யப்பட்டதும், ‘மெத்’ தென்றிருப்பதும்; அழகு, குளிர்ச்சி, மென்மை, மணம், வெண்மை ஆகிய ஐந்தும் பொருந்தியதுமாகிய பஞ்சசயனப் படுக்கையின் மேல் ஏறி, கொத்துக் கொத்தாக மலர்ந்திருக்கின்ற மலர்களைச் கூந்தலையுடைய நப்பின்னைப் பிராட்டியின் கொங்கைகளை மேலே வைத்துக் கொண்டு கிடக்கின்ற மலர் மார்புடைய

கண்ணபிரானே ! உன் திருவாய் மலர்ந்து அருள்வாயாக ! மைதீட்டி பெரிய கண்களையுடைய நப்பின்னை பிராட்டியே ! நீ உன் கணவனைச் சிறிது நோம் கூடத் துயில் எழ விட மாட்டாய் போலும். நொடிப் பொழுதும் கூட அவனை பிரிந்திருக்கும் ஆற்றல் உனக்கு இல்லை போலும் ! இது , உன் நிலைக்கும் இயல்புக்கும் பொருத்தமன்று.

20. **முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று**
**கப்பம் தவிர்க்கும் கலியே துயில் எழாய்**
**செப்பம் உடையாய் திறல் உடையாய்**
**செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா துயில் எழாய்**
**செப்பன்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்**
**நப்பின்னை நங்காய் திருவே துயில் எழாய்**
**உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை**
**இப்போதே எம்மை நீராட்டேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : முப்பத்து மூவராகிய தேவர்களுக்கும், தானாக முன்சென்று அவர்கள் நடுக்கத்தைப் போக்கும் வல்லமை உடையவளே, துயில் எழு ! செப்பம் உடையவனே ! ஆற்றலுடையவனே ! பகைவர்களுக்குக் காய்ச்சல் உண்டாக்குகின்ற விமலனே ! துயில் எழு ! செப்புப் போன்ற மென்முலைகளையும், சிவந்த வாயினையும், சிறிய இடையினையும் உடையவனாகிய நப்பின்னையம்மையே ! திருமகளே ! துயில் எழு ! நோன்புக்குரிய கருவிகளாகிய ஆலவட்டத்தையும் கண்ணாடியையும் தந்து உன் கணவனையும் எம்பொருட்டு இப்போதே நீராட்டு.

21. **ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப**
**மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்**
**ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய்**
**ஊற்றம் உடையாய் பெரியாய்**

**உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே துயில் எழாய்**
**மாற்றார் உனக்கு வலி தொலைந்துன் வாசற் கண்**
**ஆற்றாது வந்துன் அடி பணியுமா போலே**
**போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : எடுத்து ஏந்திய பாத்திரங்களில் எதிர்த்துப் பொங்கி மேலே வழியும் படியாக, இடைவிடாமல் பால் பொழிகின்ற பெரிய பசுக்களை அளவின்றிப் பெற்றிருப்பவனாகிய நந்தகோபன் மகனே ! துயிலெழுவாயாக ! திண்மையுடையவனே ! பெருமானே ! உலகத்திலே காட்சிப் பொருளாய் நின்ற சுடரே ! துயில் எழுவாயாக ! பகைவர்கள் உனக்கு முன்னே தம் வலிமையை இழந்து, உன் கோயில் வாசலிலே ஆற்றாமையுடையவராய் வந்து, உன் திருவடிகளைப் பணிகின்றனர். அவர்களைப் போல் நாங்களும் வணங்கி வந்து உன்னைப் புகழ்ந்தோம் .

22. **அங்கண் மா ஞாலத்தரசர்**
**அபிமான பங்கமாய் வந்து நின் பள்ளிக் கட்டிற் கீழே**
**சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்**
**கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப் போலே**
**செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ**
**திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்**
**அங்கண் இரண்டும் கொண்டெங்கள் மேல் நோக்குதியேல்**
**எங்கள் மேல் சாபம் இழிந்தேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : அழகிய பரந்த பெரிய இவ்வுலகத்திலேயுள்ள அரசர்கள் யாவரும் தற்செருக்கு அடங்கி வந்து உன் படுக்கைக் கட்டிலுக்குக் கீழே கூட்டமாக இருப்பர் ; அவர்களைப் போல் நாங்களும் வந்து அடைக்கலமானோம் . கிண்கிணிவாயில்

இழைக்கப்பட்ட செந்தாமரைப் பூப்போல உன் சிவந்த கண்களைச் சிறுகச் சிறுக விழித்து எங்கள் மேல் அருட்பார்வை செலுத்தக் கூடாதோ? சந்திரனும், சூரியனும் எழுந்தாற்போல உன் அழகான கண்கள் இரண்டையும் கொண்டு எங்கள் மீது நோக்குவாயானால், எங்கள் பாலுள்ள பாவமெல்லாம் தீர்ந்து போகும்.

23. **மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்**
**சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து**
**வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி**
**மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்**
**போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா**
**உன் கோயில் நின்றிங்ஙனே போந்தருளிக்**
**கோப்புடைய சீரிய சிங்காசனத்திருந்து**
**யாம் வந்த காரியம் ஆராய்ந்தருளேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : காயாம்பூ வண்ணனே ! மழைக்காலத்தில் மலைக்குகைக் குள்ளே உறைந்து உறங்கும் வீறுமிகுந்த சிங்கமானது உறக்கம் தெளிந்து எழுந்து, அனல் கக்க விழித்து, பிடரிமயிர் சிலிர்க்கும்படி நாற்புறமும் திரும்பித் திரும்பி உதறி, சோம்பல் முறித்து நிமிர்ந்து, முழங்கி அந்தக் குகையில் இருந்து வெளியே புறப்பட்டு வருவதுபோல், நீ உன் கோயிலிலிருந்து இங்கு வந்தருள்வாயாக. அழகு பெற அமைந்து சிறந்து விளங்கும் அரியாசனத்தில் வீற்றிருந்து நாங்கள் வந்த காரியத்தைக் கேட்டு ஆராய்ந்து அருள்புரிவாயாக.

24. **அன்றிவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி**
**சென்றங்குத் தென் இலங்கை செற்றாய் திறல் போற்றி**
**பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி**
**கன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி**
**வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி**
**என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்**
**இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : அன்று, இந்த உலகத்தை அளந்தவனே ! உன் திருவடிகளைப் போற்றுகின்றோம் ; இலங்கை சென்று அங்கு அரக்கர்களை அழித்தவனே ! உன் ஆற்றலைப்

போற்றுகின்றோம் ; சகடாசுரன் அழியுமாறு உதைத்தவனே ! உன் புகழைப் போற்றுகின்றோம் ! கன்றுக்குட்டி வடிவம் எடுத்து வந்த வத்சாசுரனை எறிதடியாகக் கொண்டு, விளாமரத்தில் கனியாக வடிவம் எடுத்திருந்த கபித்தாசுரன் மேல் எறிந்து ; அந்த அசுரர் இருவரையும் கொன்றவனே ! உன் வீரக் கழல் அணிந்த திருவடிகளைப் போற்றுகின்றோம். கோவர்த்தனமலையைக் குடையாக எடுத்து, மழையைத் தடுத்து மக்களைக் காத்தவனே ! உன் அருட்குணத்தைப் போற்றுகின்றோம். இப்படிப் பலவாறாக உன் வீரத்தைப் புகழ்ந்து போற்றிப் பறை கொள்வதற்காக இன்று நாங்கள் வந்தோம். அருள்வாயாக.

25. ஒருத்தி மகனாய்ப் பிறந்து

**ஓர் இரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்**
**தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த**
**கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்**
**நெருப்பென்ன நின்ற நெடுமாலே**
**உன்னை அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்**
**திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி**
**வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : நீ தேவகியென்னும் ஒருத்தியின் மகனாகத் தோன்றினாய். ஓர் இரவிலேயே யசோதை என்னும் ஒருத்தியின் மகனாக மறைந்து வளர்ந்தாய் ! இதனை அறிந்து பொறாதவனாகித் தீங்கு நினைத்த கம்சன் கருத்தைப் பொய்யாக்கி அவன் வயிற்றிலே நெருப்புப் பற்றி எரிவதுபோல நின்றாய் ! நெடிய மேனி கொண்ட திருமாலே ! உன்னை அன்போடு நினைத்து இங்கு வந்தோம் ; நாங்கள் விரும்பியவற்றை வழங்குவாயானால் உன் அழகுதங்கிய செல்வத்தையும், வீரத்தையும் பாடுவோம் ; வருத்தமும் தீர்ந்து மகிழ்வோம் .

26. **மாலே மணிவண்ணா மார்கழி நீர் ஆடுவான்**

**மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்**
**ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன**
**பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே**
**போல்வன சங்கங்கள் போய்ப் பாடுடையனவே**
**சாலப் பெரும் பறையே பல்லாண்டிசைப்பாரே**
**கோல விளக்கே கொடியே விதானமே**
**ஆலின் இலையாய் அருளேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : திருமாலே ! மணிவண்ணா ! ஆலிலையில் பள்ளி கொண்ட பெருமானே ! மார்கழி நீராடும்பொருட்டு முன்னோர்கள் செய்வனவும், வேண்டுவனவும் என்ன ? அவற்றைக் கேட்டருள்வாயாக ! உலகம் அதிரும்படி முழங்கும் பால் போன்ற வெண்மையான பாஞ்சசன்னியம் போன்ற சங்குகள் வேண்டும். நெடுந்தூரத்தில் சென்று ஒலிக்கின்ற தன்மையையுடைய மிகப்பெரிய பறைகள் வேண்டும்; பல்லாண்டு இசைப்பவர்கள் வேண்டும் ; அழகிய விளக்குகள் வேண்டும் ; கொடி வேண்டும் ; மேற்கட்டி( விமானம்) வேண்டும். இவற்றையெல்லாம் அருள்வாயாக.

27. **கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா**
**உன் தன்னைப் பாடிப் பறை கொண்டு யாம் பெறு சம்மானம்**
**நாடு புகழும் பரிசினால் நன்றாகச்**
**சூடகமே தோள் வளைளே தோடே செவிப் பூவே**
**பாடகமே என்றனைய பல் கலனும் யாம் அணிவோம்**
**ஆடை உடுப்போம் அதன் பின்னே பால் சோறு**
**மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்**
**கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : பகைவரை வெற்றி கொள்ளும் பெருமையையுடைய கோவிந்தா ! உன்னை வாயாரப் பாடிப் பறையைப் பெற்றுக் கொண்டோம் ; இனி நாங்கள் பெறும்படியான பரிசுகள் என்ன? சூடகம், தோள்வளை, தோடு , செவிப்பூ, சிலம்பு என்பவனாகிய பல அணிகலன்களும் நாடு புகழும் வண்ணம் நன்றாக நாங்கள் அணிவோம் ; ஆடை உடுப்போம் ; அதன் பின்னே பாற்சோறு முழுவதும் மூடும்படி நெய் வார்த்து அந்தச் சோற்றை எடுக்கும்பொழுது முழங்கை வழியாக நெய் ஒழுகி வழியும்படி கூடியிருந்து உண்டு உள்ளம் குளிர்வோம்.

28. **கறவைகள் பின் சென்று கானஞ்சேர்ந்துண்போம்**
**அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து**
**உன் தன்னைப் பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்**
**குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா**
**உன் தன்னோடுறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது**
**அறியாத பிள்ளைகளோம் அன்பினால்**
**உன் தன்னைச் சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே**
**இறைவா நீ தாராய் பறை ஏலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : கறவைப்பசுக்களின் பின்னாலே நாங்கள் காட்டிற்குச் சென்று அங்கே கூடிக் கலந்து உண்போம்; அறிவு ஒரு சிறிதும் இல்லாத இடையர் குலத்திலே உன்னைப் பிறவியாகப் (பிள்ளையாக) பெறும் அளவுக்கு நாங்கள் புண்ணியம் உடையவரானோம். குறைவு ஒன்றும்

இல்லாத கோவிந்தா ! உன்னோடு எங்களுக்கு உள்ள உறவு ஒழிக்க முடியாது. அறிவில்லாதப் பிள்ளைகள் நாங்கள் அன்பினால் உன் பெருமையை மறந்து, உன்னைச் சிறுபெயர்கள் இட்டு நாங்கள் அழைத்தவற்றையெல்லாம் குறித்து நீ கோபித்து அருளாமல் இறைவா ! நீ நாங்கள் விரும்புவதை வழங்குவாயாக.

29. **சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து**
**உன் பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்**
**பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து**
**நீ குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது**
**இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா**
**எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்**
**உன் தன்னோடுற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம்**
**மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம் பாவாய்.**

**விளக்கம்** : வைகறைப் பொழுதிலே வந்து உன்னை நாங்கள் வணங்கினோம் ; உன் பொற்றாமரைத் திருவடிகளைப் போற்றுதற்குரிய எங்கள் கருத்தைக் கேட்பாயாக ! எல்லையற்ற பெருமையுடையவனாகிய நீ, மாடு மேய்த்து உண்ணும் இடையர் குலத்திலே பிறந்தும் எங்களைச் சிற்றடிமை கொள்ளாமல் போய்விடாதே! நாங்கள் உன்னை வணங்குவது இன்றைக்குப் பறைகொள்வதற்கு மட்டுமன்று கோவிந்தா ! என்றைக்கும் ஏழேழு பிறவிக்கும் உன்னோடு பொருந்தியே வாழ்வோம் ; உனக்கே நாங்கள் அடிமையாக்கித் தொண்டுகள் செய்வோம்! எங்களுக்கு வேறு ஆசைகள் தோன்றுமானால் அவற்றை மாற்றி அருளவும் வேண்டும்.

30. **வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை**
**திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி**
**அங்கப் பறை கொண்டவாற்றை அணி புதுவைப்**
**பைங்கமலத் தண் தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன**
**சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே**
**இங்கிப்பரிசுரைப்பார் ஈர் இரண்டு மால் வரைத் தொள்**
**செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்**
**எங்கும் திருவருள் பெற்றின்புறுவர் எம் பாவாய்.**

**விளக்கம்** : கப்பல்கள் மிதந்து செல்லும் கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுதம் வழங்கியவன் மாதவன்; கேவி என்னும் அசுரனை அழித்தவன் கேசவன் ; அந்தப் பெருமானை, முழுமதி போன்ற அழகிய முகமுடைய செவ்விய அணிகளைப் பூண்ட பெண்கள் சென்று வழிபட்டு, ஆயர்பாடியிலே பறை கொண்டனர். அந்த வரலாற்றை, திருவில்லிபுத்தூரிலே

தோன்றியவரும் பசுமையுடைய தாமரை மலர்களால் தொடுக்கப்பட்ட குளிர்ந்த மாலையைச் சூடியவருமான பட்டர்பிரான் ( பெரியாழ்வார்) திருமகளாகிய கோதை( ஆண்டாள்) சொன்ன, கூட்டு வழிபாட்டுத் தமிழ்ப் பாமாலை இத்திருப்பாவை. இதில் உள்ள முப்பது பாடல்களையும் தவறாமல் இந்நிலவுகிலே இந்த முறையிலேயே பாடுபவர்கள், நான்கு பெரிய மலை போன்ற தோள்களையும் சிவந்த கண்களையும் அழகிய முகத்தையும் செல்வத்தையும் உடைய திருமாலால் திருவருள் பெற்று எங்கும் இன்புறுவர்.

இவ்வாறு ஆண்டாள் தனது பாமாலை மூலம் கண்ணனின் சிறப்புக்களை எடுத்துரைக்கிறார்.

## குலசேகர ஆழ்வார்

- குலசேகர ஆழ்வார் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர். இவரைக் குலசேகரப் பெருமாள் என்றும் குறிப்பிடுவர்.
- சேர நாட்டுத் திருவஞ்சைக் களத்தில் , பல வருடம் மாசித் திங்கள், புனர்பூச நட்சத்திரத்தில் கௌத்துப ( மணி ) அம்சமாகப் பிறந்தவர். அரியணைத் துறந்து வைணவத் தொண்டரானார். வடமொழியும், தென்மொழியும் கற்றுத் தெளிந்தவர்.
- இராமனிடத்து மிக்க ஈடுபாடு உடையவர். ஒரு சமயம் இராமாயணச் சொற்பொழிவில், இராமன் தன்னந்தனியே கர தூடணர்களுடன் போர் புரிந்தான் என்ற கட்டத்தைப் புராணிகர் கூறிய போது, அந்நிகழ்ச்சியில் நெஞ்சம் ஒன்றியவராய் , அப்பொழுது நடப்பதாக நினைத்து இராமனுக்குத் துணை செய்வேன் எனத் தம் சேனையுடன் கிளம்பிவிட்டார். ‘ இராமன் அவர்களை வென்றான்’ என்று சாமர்த்தியமாகப் புராணிகர் சமாளிக்கவே திரும்பினார்.
- இவர் பாகவதர்களிடம் பேரன்பு செலுத்துவது கண்டு அழுக்காறு கொண்டு இரத்தினாபரணத்தை ஒரு பாகவதர் திருடிவிட்டார் எனக் கூற, அதனை நம்ப மறுத்து, குடத்தில் பாம்பை இட்டு ‘பாகவதர் திருடியிருந்தால் பாம்பு என்னைத் தீண்டட்டும்’ எனக் கூறி கையை விட்டுப் பாம்பு கடிக்கா திருப்பதனை மெய்ப்பித்துக் காட்டினார்.
- இவர் இயற்றிய நூல்கள் : பெருமாள் திருமொழி, முகுந்தமாலை
- வேங்கடத்தில் படியாகக் கிடக்க விரும்பினார். இன்றும் திருவேங்கடத்தில் இருக்கும் படிகள் இவ்வாழ்வாரின் திருநாமத்தினாலேயே ‘குலசேகரன்படி’ என்று அழைக்கப்படுகின்றன. திருவரங்கத்தில் மூன்றாம் மதிலைக் கட்டியதாகக் கூறுவர்.
- இவரது காலம் 9 ஆம் நூற்றாண்டு.
- இவர் திருமொழி 10 பிரிவுகளும், ஒவ்வொரு பிரிவும் முதற்பாட்டின் முதற்றொடரைத் தலைப்பாகவும், இறுதிப் பாடல்கள் **‘ கோழியர் கோன் குலசேகரன் சொன்ன’** என முத்திரை பெறும் தலைப்பாகவும் அமைகின்றன.

## தருதுயரந் தடாயேல்

1. **தரு துயரம் தடாயேல்**
   **உன் சரண் அல்லால் சரண் இல்லை**
   **விரை குழுவும் மலர்ப் பொழில் சூழ்**
   **விற்றுவக் கோட்டம்மானே**
   **அரிசினத்தால் ஈன்ற தாய்**
   **அகற்றிடினும்**
   **மற்றவள் தன் அருள் நினைந்தே அழும் குழவி**
   **அதுவே போன்றிருந்தேனே.**

**விளக்கம்** : நறுமணம் கமழுகின்ற, மலர்கள் சூழ்ந்துள்ள சோலைகளில் குடிகொண்டிருக்கும் வித்துவக்கோட்டம்மா, கோபத்தில், தாய் தனது குழந்தையை தள்ளி வைத்தாலும், குழந்தைக்கு வேறு எங்கும் செல்ல தெரியாமல், அது அழுது கொண்டே தன்னுடைய தாயினிடத்திலேயே சென்று, தாயின் கருணையினையே வேண்டுவது போல், தானும் திருவித்துவக்கோட்டு அம்மானிடம் சரண் அடைந்து அவன் வேண்டாம் என்று சொன்னாலும் அவனை விட்டு அகலாமல் இருப்பேன் என்றும், உன் சரண் அல்லாமல் வேறு கதி எனக்கு இல்லை என்றும் ஆழ்வார் குறிப்பிடுகிறார்.

2. **கண்டார் இகழ்வனனே**
   **காதலன் தான் செய்திடினும்**
   **கொண்டானை அல்லால்**
   **அறியாக் குல மகள் போல்**
   **விண் தோய் மதில் புடை சூழ்**
   **விற்றுவக் கோட்டம்மா**
   **நீ கொண்டாளாயாகிலும்**
   **உன் குரை கழலே கூறுவனே.**

**விளக்கம்** : கண்டார் இகழ்வனவே காதலன் என்று சொல்வது, தானும் அவனும் மட்டும் அறிந்த ஊடல்களும் அதற்கு அவன்∴அவள் செய்த பரிகாரங்களும், ஒரு அவதியாக தோன்றதாத நிலையில், இவர்களிடம் காரியம் பெற்றவர்களும், இவர்களை உதாசீனம் செய்தவர்களும் வெறுத்து இகழும்படி அவன் செய்தாலும், அவன் அவளிடம் இருக்கும் காதலை நிரூபிக்க வேண்டிய நிலையில் உள்ளவன் என்கிறது. வானளவு தோய்ந்து மதில் சூழ்ந்துள்ள கோயிலில் வீற்றிருக்கும் வித்துவக் கோட்டம்மா! நீ என்னை பற்ற வில்லை எனினும் உன் திருப்பாதமே எனக்கு சொர்க்கம். உன் திருக்கழலின் சிறப்பினை யான் எடுத்துரைப்பேன் .

3. **மீன் நோக்கும் நீள் வயல் சூழ்**
**விற்றுவக் கோட்டம்மா**
**என் பால் நோக்காய் ஆகிலும்**
**உன் பற்றல்லால் பற்றிலேன்**
**தான் நோக்காது**
**எத்துயரம் செய்திடினும்**
**தார் வேந்தன் கோல் நோக்கி வாழும்**
**குடி போன்றிருந்தேனே.**

**விளக்கம்** : மீன்கள் துள்ளி விளையாடுகின்ற , நீண்ட வயல்கள் சூழ்ந்துள்ள இடத்தில் குடியிருக்கும் வித்துவக்கோட்டம்மா ! நீ என்னைப் பார்க்காவிட்டாலும் உன் பற்று அல்லாமல் உன்னைப் பற்றினேன். மக்கள் துன்பத்தை செய்திடினும் மாலை அணிந்த செங்கோல் செலுத்துகின்ற மன்னன் குடிமக்களின் நலனில் அக்கறை செலுத்துவது போன்று நீ என் மேல் கவனம் செலுத்த வேண்டும் அம்மானே! அரசாளும் மன்னன், பொதுவாக மக்களுக்கு செய்திடும் செய்கைகள் யாவும் தனி ஒரு பிரஜைக்கோ அல்லது எல்லாருக்குமோ துன்பம் தந்தாலும், குடிமக்கள் தொடர்ந்து அந்த மன்னனையே தங்களுக்கு நன்மை செய்வான் என்ற எதிர்பார்ப்போடு காத்து இருப்பதை போல், ஆழ்வாரும், வித்துவக்கோட்டு பெருமாள், ஆழ்வாரை கவனிக்காவிட்டாலும் எம்பெருமானை விடாமல் இருப்பேன் என்று இந்த மூன்றாம் பாட்டில் கூறுகிறார். மஸ்யம் என்று பெயர் வைத்த எல்லாவற்றையும் காப்பாற்றும் தேசம் என்று கூறுகிறார். கடலில் உள்ள மஸ்யம் கடல் வற்றினால் நம்மை காக்கும் தேசம் என்று இருக்கும் திருவித்துவகோடு என்கிறார்.

4. **வாளால் அறுத்துச் சுடினும்**
**மருத்துவன் பால்**
**மாளாத காதல்**
**நோயாளன் போல் மாயத்தால்**
**மீளாத் துயர் தரினும்**
**விற்றுவக் கோட்டம்மா**
**நீ ஆளா உனதருளே**
**பார்ப்பன் அடியேனே.**

**விளக்கம்** : வாளால் அறுத்துச் சுட்ட பின்பும் மருத்துவரிடம் கொண்டிருந்த அன்பு எந்த விதத்திலும் மாறாமல் இருக்கும். அதனைப் போல நோய் கொண்ட பிணியாளர் எத்தகைய துன்பத்தை தந்தாலும் வித்துவக் கோட்டம்மா ! நீ அடியேனாகிய என்னை ஆட்கொண்டருள வேண்டும்.

5. **வெங்கண் திண் களிறடர்த்தாய்**
   **விற்றுவக் கோட்டம்மானே**
   **எங்குப் போய் உய்கேன்**
   **உன் இணை அடியே அடையல் அல்லால்**
   **எங்கும் போய்க் கரை காணாது**
   **எறி கடல் வாய் மீண்டேயும்**
   **வங்கத்தின் கூம்பேறும்**
   **மாப் பறவை போன்றேனே.**

**விளக்கம்** : சுற்றும் அலைகளை தூக்கி எறிந்து கொண்டு இருக்கிற கடலில் நான்கு திசைகளிலும் அலைந்து திரிந்து எங்கும் கரையை காண முடியாமல், தான் இருந்த இடமான கப்பலுக்கே, திரும்பி வரும் பெரிய பறவைப் போன்று, தானும் வித்துவக்கோட்டு அம்மானின் பாதங்களில் சரண் அடைவதாக ஆழ்வார் இந்த பதிகத்தின் ஐந்தாவது பாசுரத்தில் தெரிவிக்கின்றார். சம்சார சாகரத்தை (சுமுத்திரத்தை) கடப்பதற்கு எம்பெருமான் உகந்து அருளின தேசமான திருவித்துவக்கோடு திவ்ய தேசத்தை அல்லால் வேறு ஒரு உபாயமும் இல்லை என்றும், இந்த திவ்ய தேசத்தை தவிர மற்றதெல்லாம் இந்த பறவைக்கு சமுத்திரம் போல ஆகும் என்கிறார்.

6. **செந்தழலே வந்து**
   **அழலைச் செய்திடினும்**
   **செங்கமலம் அந்தரம் சேர்**
   **வெங்கதிரோற் கல்லால் அலராவால்**
   **வெந்துயர் வீட்டாவிடினும்**
   **விற்றுவக் கோட்டம்மா**
   **உன் அந்தமில் சீர்க்கல்லால்**
   **அகம் குழைய மாட்டேனே.**

**விளக்கம்** : இது வரையில், நீ என்ன செய்தாலும் உன்னை விட்டு அகலமாட்டேன் என்று உரைத்த ஆழ்வார், இனி வேறு யார் எதைச்செய்தாலும், அவர்களிடம் செல்ல மாட்டேன் என்றும்

சொல்வது போல் பாடல்களை அமைத்து உள்ளார். தாமரை, சூரியனை பாரத்தால் மட்டுமே மலரும், தீயோ அல்லது மற்ற எந்த விதமான வெப்பத்தைத் தருகின்ற உபாயத்திலும் மலராது, அது போல் உன்னுடைய உயர்ந்த குணங்களுக்கு மட்டுமே நெஞ்சு உருகுவேனே தவிர, மற்றவைகளுக்கு நெஞ்சு உருக மாட்டேன் என்று வித்துவக்கோட்டு அம்மானிடம் தெரிவிக்கின்றார். தாமரைக்கு வெகு தூரத்தில் சூரியன் இருந்தாலும், அக்னியை வெகு அருகே கொண்டு வந்தாலும் அக்னியை சாதனமாக கொண்டு தாமரை அலராது என்பது போல பாவங்களை போக்கி மோக்ஷத்தை கொடுக்க கூடிய எம்பெருமான் துயர் கொடுத்தாலும் கல்யாண குண நலன்களை கொண்ட எம்பெருமானை தவிர வேறு எங்கும் தன் நெஞ்சு செல்லாது என்கிறார்.

7. **எத்தனையும் வான் மறந்த காலத்தும்**
   **பைங்கூழ்கள்**
   **மைத்தெழுந்த மா முகிலே**
   **பார்த்திருக்கும் மற்றவை போல்**
   **மெய்த் துயர் வீட்டாவிடினும்**
   **விற்றுவக் கோட்டம்மா**
   **என் சித்தம் மிக உன் பாலே**
   **வைப்பன் அடியேனே.**

**விளக்கம்** : மேகம், தொடர்ந்து பலகாலம் மழையை தராவிட்டாலும், பசுமையான பயிர்கள், தனக்கு வேண்டிய நீருக்காக, அந்த மேகத்தை எதிர்பார்த்து கொண்டு இருக்குமே தவிர வேறொன்றையும் எதிர்பார்க்காது இருப்பது போல், ஆழ்வாரும், பரமாத்மாவாகிய வித்துவக்கோட்டு அம்மான், தன்னுடைய துன்பங்களை போக்காமல் விட்டாலும், தான் தொடர்ந்து அந்த பெருமானையே வேண்டி இருப்பேன் என்று கூறுகிறார். பாவத்தை போக்கி சம்சார சாகரத்தில் இருந்து விடுதலை வாங்கி கொடுக்க வந்திருகின்ற நீ, அது செய்யவில்லை என்றாலும், என் பாதுகாப்பில் நெகிழ்ந்தாய் என்று உன்னிடம் தோற்று உன் பக்கம் நெஞ்சு நிலையாக இருக்கிறது என்று சொல்கிறார்.

8. **தொக்கிலங்கு யாறெல்லாம்**
   **பரந்தோடித்**
   **தொடுகடலே புக்கன்றி புறம் நிற்க**
   **மாட்டாத மற்றவை போல்**
   **மிக்கிலங்கு முகில் நிறத்தாய்**
   **விற்றுவக் கோட்டம்மா**
   **உன் புக்கிலங்கு சீர் அல்லால்**
   **புக்கிலன் காண் புண்ணியனே.**

**விளக்கம்** : கரை புரண்டு ஓடுகின்ற நதியானது, கண்டவிடமெல்லாம் ஓடி, கடைசியில் அது ஆழமான கடலிடத்தில் சென்று அடையுமே தவிர வேறு எங்கும் சென்று முடியாது என்பது போல், தானும் வித்துவக்கோட்டு அம்மானின் திவ்யகுண நலன்களில் மூழ்கி இருப்பேனே தவிர வேறுஎங்கும் தனது கவனத்தை திருப்ப மாட்டேன் என்று இந்த பதிகத்தின் எட்டாவது பாடலில் தெரிவிக்கின்றார். இந்த நதிகள் புகுந்தால் தான் கடல் நிறைந்து காணபடுகிறது என்றோ, இவை புகாவிட்டால் கடல் குறைந்துவிடும் என்றோ கிடையாது. இந்த நதிகளுக்கு வேறு வழியில்லாமல் கடலில் புகுகின்றன, அது போல, உன் கல்யாண குணங்களை தவிர வேறு எங்கும் புக எங்களுக்கு வழி இல்லை என்கிறார்.

9. **நின்னையே தான் வேண்டி**
   **நீள் செல்வம் வேண்டாதான்**
   **தன்னையே தான் வேண்டும்**
   **செல்வம் போல் மாயத்தால்**
   **மின்னையே சேர் திகிரி**
   **விற்றுவக் கோட்டம்மா**
   **நின்னையே தான் வேண்டி**
   **நிற்பன் அடியேனே.**

**விளக்கம்** : உலகத்தில் உள்ள செல்வங்களை விரும்பாமல். பெருமானையே வேண்டி நிற்பவனை செல்வம் தானாக வந்தடையும் என்பது உலக நியதி. எவனொருவன் ஆண்டவனிடம் அன்பு கொண்டு அவனை மட்டுமே விரும்பி, இந்த உலக ஐஸ்வரியம் மற்றும் பிற பொருள்களை விரும்பாதவனுக்கு, பகவான் எப்படி தொடர்ந்து அன்பு காட்டி அவனுக்கு மேலும் மேலும் எல்லா செல்வங்களும் தருகிறார் என்பது உதாரணத்தின் ஒரு பகுதி. இது, ஆழ்வார் தன்னுடைய வாழ்க்கையே சொல்வது போல் உள்ளது. சிறந்த வீரரும், மன்னருமாய் விளங்கும் ஆழ்வார், இந்த உலக செல்வம் வேண்டாம், ராஜ்ஜியம் வேண்டாம் என்றும் மோட்சம் தான் வேண்டும் என்ற போதும், அவருடைய ராஜ்ஜியம் சேர நாட்டில் இருந்து மேலும் மேலும் சோழ, பாண்டிய நாடுகளாக விரிவு அடைந்து கொண்டே இருந்தது.

10. **விற்றுவக் கோட்டம்மா**
    **நீ வேண்டாயே ஆயிடினும்**
    **மற்றாரும் பற்றிலேன் என்று**
    **அவனைத் தாள் நயந்த**
    **கொற்ற வேல் தானைக்**
    **குலசேகரன் சொன்ன**

**நற்றமிழ் பத்தும் வல்லார்**

**நண்ணார் நரகமே.**

**விளக்கம்** : இந்தப் பத்துப் பாடல்களிலும் இதே தொனியில் எந்தத் துயரம் தந்தாலும் உன்னை விட மாட்டேன் என்பது பல வித படிமங்களில் விரிகிறது. மேலே சொன்ன பாசுரங்களை படிப்பவர்களுக்கான பலனை இறுதி பாசுரத்தில் வெளியிட்டு, இந்த பதிகத்தினை ஆழ்வார் முடிக்கிறார். வித்துவக்கோட்டு அம்மான் ஆழ்வாரை வேண்டாம் என்று ஒதுக்கி வைத்தாலும் தான் வேறு யாரையும் சரண் அடைய மாட்டேன் என்றும், அந்த பெருமானின் திருவடிகளிலேயே பக்தி கொண்டு காத்து இருப்பேன் என்றும் சொல்லும் ஆழ்வார் இந்த பதிகத்தைப் படிப்பவர்கள் எத்தனை கொடிய பாவங்கள் செய்து இருந்தாலும் நரகத்தை அடைய மாட்டார்கள் என்றும் இந்த சம்சார வாழ்க்கைக்கு திரும்ப வர மாட்டார்கள் என்றும் சொல்லி முடிக்கிறார்.

## பேயாழ்வார்

- பிறந்தது மயிலாப்பூர். திருமாலின் மீது மயக்கம் வருமளவிற்கு மிகுதியான பக்தி கொண்டு பேய் போல் ஆடிப் பாடித் திரிந்ததால் இப்பெயர் பெற்றார்.
- ஐப்பசித் திங்கள் சதய நாளில் பிறந்தார்.
- காலம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு
- இவர் பாடியது மூன்றாம் திருவந்தாதி. இதில் 100 பாடல்கள் உள்ளன.
- திருக்கோவிலூரில் இம்மூன்று ஆழ்வார்களும் சந்தித்துத் திருமால் பெருமையைப் பாடியதாகக் கூறுவர். இங்கு திருமாலின் கோலத்தைப் பாடும் பாடல் நயமிக்கதாக அமைந்துள்ளது.
- ‘திருக் கண்டேன் பொன்மேனி கண்டேன்’ எனப் பாடுகின்றார்.
- ஆழ்வார்களில் வைணவம், சைவம் என்ற வேறுபாடின்றி திருமாலோடு , சிவபெருமானையும் இணைத்துப் பாடிய பெருமைக்குரியவர்.
- காலத்தால் மற்ற ஆழ்வார்களுக்கு முற்பட்டவர்.
- திருமாலின் செவ்வல்லி யின் அம்சமாய் அவதரித்தவர்.
- மூவர் சந்திப்பு:
- பொய்கையார் ஒருமுறை திருக்கோவிலூரில் ஒரு வீட்டின் இடைக்கழியில் துயில, அப்போது பூதத்தார் சென்று இடம் வேண்ட, பொய்கையார் ‘இங்கே ஒருவர் படுக்கலாம்’ இருவர் இருக்கலாம்’ என்று இடம் தர, இருவரும் இருந்தனர். அத்தருணம் பேயாழ்வார் அங்கு வந்து இடம் தேட , இருவரும் இங்கு ஒருவர்

படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்' என்று கூறி மூவரும் நின்று மாலின் திறம் பேசி மகிழ்ந்தனர் என்பர்.

## மூன்றாம் திருவந்தாதி

1. **திருக் கண்டேன்பொன்மேனி கண்டேன்திகழும்**
   **அருக்கன் அணி நிறமும் கண்டேன் செருக் கிளரும்**
   **பொன் ஆழி கண்டேன் புரி சங்கம் கைக் கண்டேன்**
   **என் ஆழி வண்ணன் பால் இன்று.**

**விளக்கம்** : இறைவனின் திருவுருவத்தினைக் கண்டேன். அவனுடைய அழகிய மேனி கண்டேன். அருகி இருக்கும் அழகிய திருமாலின் நிறத்தினைக் கண்டேன். செருக்கு மிக்க பொன்னால் ஆன கையில் வைத்திருக்கும் சக்கராயுதத்தைக் கண்டேன். திருப்பாற்கடலில் பள்ளி கொண்டருளும் மணிவண்ணனின் அன்பினை இதன்மூலம் கண்டதாகப் பேயாழ்வார் குறிப்பிடுகிறார்.

2. **இன்றே கழல் கண்டேன் ஏழ்பிறப்பும் யான அறுத்தேன்**
   **பொன் தோய் வரை மார்பில் பூந்துழாய் அன்று**
   **திருக் கண்டு கொண்ட திருமாலே உன்னை**
   **மருக்கண்டு கொண்டென் மனம்.**

**விளக்கம்** : பொன் போன்ற திருமார்பில் துளசி மாலையை அணிந்திருக்கும் திருமாலே, இன்று உன் திருவடிகளைக் கண்டு என் ஏழு பிறவித் துன்பங்களையும் அழித்தேன். என் மனம் உன்னை மறக்காமல் கண்டுகொண்டது என்பதாகும்.

3. **மனத்துள்ளான் மா கடல் நீர் உள்ளான் மலராள்**
   **தனத்துள்ளான் தண் துழாய் மார்பன் சினத்துச்**
   **செருநர் உகச் செற்றுகந்த தேங்கோத வண்ணன்**
   **வரு நரகம் தீர்க்கும் மருந்து.**

   **விளக்கம்** : திருமால், மனங்களில் உறைபவர், பெரிய கடல் நீரில் வசிப்பவர். தாமரை மலரில் வசிக்கும் திருமகளின் கணவர், குளிர்ந்த துளசி மாலை அணிந்த மார்பினர். பகைவர்களை அழிப்பதில் மகிழ்ச்சி கொள்பவர். தேன் போன்ற மேனி நிறம் கொண்டவர் . அவரே வரக்கூடிய நரக துன்பங்களைப் போக்கும் மருந்து ஆவார்.

4. **மருந்தும் பொருளும் அமுதமும் தானே**
**திருந்திய செங்கண் மால் ஆங்கே பொருந்தியும்**
**நின்றுலகம் உண்டுமிழ்ந்தும் நீா் ஏற்று மூஅடியால்**
**அன்றுலகம் தாயோன் அடி.**

**விளக்கம்** : திருமால், தனது அவதாரங்களில் ஒன்றான வாமன அவதாரத்தில், மூவுலகையும் அளந்தவா். இந்த பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள' செங்கண்மால்' என்பது திருமாலைக் குறிக்கிறது. அவா் மருந்தாகவும், பொருளாகவும், அமுதமாகவும் கருதப்படுகிறாா்.

5. **அடி வண்ணம் தாமரை அன்று உலகம் தாயோன்**
**படி வண்ணம் பாா்க் கடல் நீா் வண்ணம் முடி வண்ணம்**
**ஓா் ஆழி வெய்யோன் ஒளியும் அ∴து அன்றே**
**ஆா் ஆழி கொண்டாற்கு அழகு.**

**விளக்கம்** : திருமாலின் திருவடிகள் தாமரை மலா் போன்றும், திருமேனி பரந்த கடல் நீா் போன்றும் திருமுடி 'சூரியனின் ஒளி போன்றும் அழகாக இருக்கின்றது. திருமாலின் நிறம், வடிவம், மற்றும் அவரது சக்கரம் சிறந்ததாக காணப்படுகின்றது. திருமால் உலகை அளந்தபோது அவரது திருவடி தாமரை நிறமாக இருந்தது. அவா் சக்கரத்தைக் கையில் ஏந்திய அழகு வா்ணிக்க இயலாதது.

6. **அழகு அன்றே ஆழிநீா் வண்ணம்?**
**அழகு அன்றே அண்டம் கடத்தல்? அழகு அன்றே**
**அங்கை நீா் ஏற்றாற்கு அலா் மேலோன் கால் கழுவ**
**கங்கை நீா் கான்ற கழல்?**
**விளக்கம்** : இப்பாடல் ஆழ்வாா்களின் பாடல்களில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு கருத்தியல் சாா்ந்த வினாவாகும். அழகு என்பது திருமாலின் திருமேனி நிறமாகிய கடல்நீா் வண்ணம் உடையது. மேலோனாகிய பெருமாளின் கால் கழுவ கங்கைநீா் போதுமானதாக இல்லை.

7. **கழல் தொழுதும் வா நெஞ்சே ! காா்க் கடல் நீா் வேலைப்**
**பொழில் அளந்த புள் ஊா்திச் செல்வன் எழில் அளந்துஅங்கு**
**எண்ணற்கு அரியானை எப் பொருட்கும் சேயானை**
**நண்ணற்கு அரியாணை நாம்.**

**விளக்கம்** : ஓ மனமே! கருத்த கடலின் நீரோடு கூடிய கரையை உடைய பூமியை அளந்து கொண்டவனும், கருடனை வாகனமாகக் கொண்டவனும், ஐஸ்வரியம் உடையவனும், அழகை

எல்லை கண்டு நினைப்பதற்கும் முடியாதவனும், எல்லா வஸ்துக்களுக்கும் நெடுந்தூரத்திலிருப்பவனும் கிட்ட முடியாதவனுமான இறைவனின் திருவடிகளைத் தொழுவோம் வா! என்கிறார்.

8. **நாமம் பல சொல்லி நாராயணா என்று**
**நாம் அங்கையால் தொழுதும் நல் நெஞ்சே வா மருவி**
**மண்ணுலகம் உண்டு உமிழ்ந்த வண்டு அறையும் தண் துழாய்**
**கண்ணனையே காண்க நம் கண்.**

**விளக்கம்** : **'**நாராயணா'என்று நாமம் பல உச்சரித்து,கைகளைக் கூப்பி, நல்ல மனதுடன் அவரை வணங்குங்கள். துளசிமாலை அணிந்த கிருஷ்ணரை நம் கண்களால் பாருங்கள். அவர் உலகை விழுங்கி பின்னர் உலகை விடுவித்தார். கிருஷ்ணரை வழிபடுவதை ஊக்குவிக்கிறது.

9. **கண்ணும் கமலம் கமலமே கைத் தலமும்**
**மண் அளந்த பாதமும் மற்று அவையே எண்ணில்**
**கருமா முகில் வண்ணன் கார்க் கடல் நீர் வண்ணன்**
**திருமா மணி வண்ணன் தேசு.**

**விளக்கம்** : தெய்வத்தின் உடல் பண்புகளைக் குறிக்கிறது. விஷ்ணுவின் வடிவம் தாமரைகளுடனும், கருமேகங்களுடனும், கடலின் நிறத்துடனும் ஒப்பிடப்படுகிறது. கண்கள், கைகள், பாதங்கள் ஆகியன அனைத்தும் தாமரை மலரை ஒத்திருக்கின்றது.

10. **தேசும் திறலும் திருவும் உருவமும்**
**மாசு இல் குடிப்பிறப்பும் மற்றவையும் பேசில்**
**வலம்புரிந்த வான் சங்கம் கொண்டான் பேர் ஓத**
**நலம் புரிந்து சென்று அடையும் நன்கு.**

**விளக்கம்** : வெண்மையான சங்கினை ஏந்திய இறைவனின் நாமத்தை உச்சரிப்பதால் தேஜஸ், வலிமை, செல்வம், அழகு மற்றும் குறைபாடற்ற பரம்பரை போன்ற குணங்கள் அனைத்தும் அடையப்படுகின்றன என்பதைக் குறிக்கிறது. அவருடைய நாமத்தை உச்சரிப்பதால் எல்லா நன்மைகளும் கிடைக்கப்பெறுகின்றன.

பாட வினாக்கள் :

1. ஆண்டாள் - குறிப்பு வரைக

2. பாவை நோன்பின் சிறப்பினை ‘திருப்பாவை’ வழி எடுத்துரைக்க.
3. பாவை நோன்பு என்றால் என்ன?
4. குலசேகர ஆழ்வாரின் ‘பக்தித்திறத்தை’ விவரிக்க.
5. திருவித்துவக் கோட்டம்மானை குலசேகர ஆழ்வார் எவ்விதம் சிறப்பிக்கிறார்?
6. பேயாழ்வாரின் ‘மூன்றாம் திருவந்தாதி’ எடுத்துரைக்கும் செய்திகளை விவரி?
7. பேயாழ்வார் - குறிப்பு வரைக.
8. முதல் ஆழ்வார்கள் பற்றி எழுதுக
9. வைணவ இலக்கியம் பற்றி எழுதுக.

## அலகு – 3

## இரட்சணிய மனோகரம்

- ‘இரட்சணிய மனோகரம்’ நூலின் ஆசிரியா் ஹென்றி ஆல்பிரட் கிருஷ்ணப்பிள்ளை. இது முக்கியமான ஒரு இலக்கியப் படைப்பாகத் திகழ்கிறது. திருவாசகத்தைப் பின்பற்றி எழுந்த ஒரு காப்பியம். இது இரட்சிப்பின் கருத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட ஒரு காப்பியமாகும்.
- இரட்சண்ய மனோகரம் - கிருட்டிணப்பிள்ளை பிற இலக்கியத்தில் இருந்து செய்திகள், மற்றும் தொடா்களை எடுத்தாண்டுள்ளாா். கிறித்துவக் கொள்கைகளைக் கவிதை வடிவில் பாங்குற எடுத்துரைக்கிறாா் எனலாம். இரட்சண்ய யாத்திரிகத்திற்கு அடுத்த நிலையில் போற்றத்தக்கதாக இரட்சண்ய மனோகரம் அமைந்துள்ளது. படிப்பதற்கு எளிமையானது.
- கல் மனதையும் உருகச் செய்யும் உருக்கமானப் பாடல்களைக் கொண்டது. ‘தமிழ்க் கிறித்தவத் திருவாசகம்’ எனப் போற்றும் வகையில் இரட்சண்ய மனோகரம் சிறப்புப் பெற்று விளங்குகிறது. சைவ நாயன்மாா்களும், வைணவ ஆழ்வாா்களும் பாடிய திருப்பாசுரங்களின் மணம் இதில் வீசுகிறது எனலாம். கிருட்டிணப்பிள்ளை தாம் பெற்ற இரட்சிப்பின் மகிழ்ச்சியினால் இந்நூலைப் பாடியுள்ளாா்.
- சிலுவைத் திருக்காட்சியில் மனத்தை ஈடுபடுத்துவது என்பது மனிதப்பிறவியில் தலைமைப் பேறாகக் கருதப்படுகிறது. பவுல் “ நானோ நம்முடைய கா்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டதிருப்பேனாக” என்று கூறுகிறாா். விசுவாசமும் மெய்யன்பும் நிறைந்த மனக்கண்ணால் சிலுவையில் இயேசு பெருமானைக் காணும் காட்சி இப்பதிகத்தில் விளக்கப்படுகிறது.
- விசுவாசக் காட்சி என்னும் இத் தேவாரம் ‘நற்போதகம்’ இதழில் முதன்முதலில் கொளு இல்லாமல் ˙வெளிவந்தது. இரட்சண்ய யாத்திரிகத்திலும் வழங்கப்பட்டுள்ளது. துன்பமலையின் அடிவாரத்திலுள்ள சோலையில் அமைந்திருந்த சீவநீா்த்தடாகத்தில் நீா்

அருந்திய யாத்திரிகன் ஆத்தும தாகம் தணியப் பெற்றான். அவன் மனம் தெளிந்தது ; புத்துயிர் பெற்றான்; புனிதமடைந்தான். இறைவனின் நீடிய அருளை அவளை மனமுருகுகிறான். சிலுவைத் திருக்குன்றில் அவன் கண்ட காட்சி அகத்தே தோன்றியது. அதனைக் கண்டவாறே திருச்சிலுவைக் காட்சியைப் பார்த்து, துதித்து இத்தேவாரம் பாடினான் என்ற ஒரு குறிப்பு காணப்படுகிறது.

- இரட்சணிய மனோகரம் என்னும் சொற்றொடருக்கு மீட்பின் மகிழ்ச்சி நிலை அல்லது திருமீட்பின் பேரின்ப கீதம் எனப் பொருள் கொள்ளலாம். இதனை முக்திவழிப் பாமாலை எனவும் வழங்குவர்.
- தமிழ்ப் பண்பாட்டு மணமும் , தமிழிசை வளமும் பக்திச் சுவையும் செறிந்தப் பாடல்களைக் கொண்டது. இந்நூலில் இயேசு கிறிஸ்துவின் பெருமைகள், கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகள் , ஆசிரியரின் வாழ்க்கை அனுபவங்கள் ஆகியன உள்ளடக்கமாகக் காணப்படுகின்றன.
- இரட்சண்ய மனோகரம் 1899 ஆம் ஆண்டு முதல் பதிப்பாகவும், 1925 ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாகவும் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் மூலம் வெளிவந்தது. பின்னர் 1951, 1978,2002 ஆகிய ஆண்டுகளில் வெவ்வேறு அறிஞர்களால் இந்நூல் வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.
- இக்காப்பியத்தின் சிறப்பு அம்சங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.
- **இலக்கிய வளம்** - செய்யுள் நடையில், இலக்கிய நயத்துடன் எழுதப்பட்டுள்ளது. இது கவிதைநடைக்கு ஒரு உதாரணமாகத் திகழ்கிறது.
- **மதச் சிந்தனை** : கிறித்துவ இரட்சிப்பின் மகிமையை எடுத்துக்காட்டும் விதமாக அமைந்துள்ளது. மேலும் திருவாசகத்தின் போக்கை கொண்டிருப்பதால் தமிழ் இலக்கிய மரபில் முக்கிய இடத்தைப் பெறுவனவாக காணப்படுகிறது.

### விசுவாசக் காட்சி

1. **கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை**
**வெள்ளமுகந் தருள்பொழியும் விமலலோ சனநிதியை**

**உள்ளமுவப் புறுதேனை யுயிர்க்குயிரை யுலவாத**
**தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவைமிசைக் கண்டேனே.**

**விளக்கம்** : கவிஞர் தனது பாவங்களை நீக்கி, இரட்சிப்பைப் பெறுவதற்காக, சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவின் மீது பொழியும் எல்லையற்ற கருணையையும், அன்பையும் , இனிமையையும் கண்டு அனுபவிப்பதாகக் கருதுகிறார். இயேசு தூய கண்களின் செல்வம், மனம் மகிழும் தேன், உயிரின் உயிர், அழியாத தெளிந்த அமுதம் மற்றும் இனிய தீங்கனி என்று வர்ணிக்கிறார். இவை அனைத்தையும் மீது கண்டதாகக் குறிப்பிடுகிறார்.

2. **படிசாய்த்த பெரும்பாவப் பரஞ்சுமந்து பரமர்திரு**
   **மடிசாய்த்த திருமேனி வதைந்திழிசெங் குருதியுக**
   **முடிசாய்த்த பெருமானை மூதலகை தலைநசுக்கிக்**
   **கொடிசாய்த்த கொற்றவனைக் குருசின்மிசைக் கண்டேனே.**

**விளக்கம்** : பலரின் பாவங்களைச் சுமந்து, சிலுவையில் அறையப்பட்டு , இரத்தம் சிந்தப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் திருமேனி எவ்வாறு காணப்பட்டதோ அத்தகைய அளவில் கொடி சாய்ந்த கொற்றவனான பாம்பை, சாத்தானை சிலுவைமீதில் கண்டேன். இயேசுவின் தெய்வீகத் தன்மையை விவரிக்கிறது.

3. **பொய்த்திருக்கும் வஞ்சனையும் பொல்லாங்கும் புறங்கூற்றும்**
   **எத்திருக்கு முடையேமை யெண்ணியொரு பொருட்டாகப்**
   **பத்திருக்கும் பிரமாணப் படியொழுகி வினைமுடித்த**
   **சித்திருக்குஞ் செழுந்தவனைச் சிலுவைமிசைக் கண்டேனே**

**விளக்கம்** : பொய்யான வஞ்சனை, பொல்லாப்பு , புறம் கூறும் தன்மை போன்றவை இருந்த போதிலும் சிலுவையில் இருந்த வளமான துறவியைக் கண்டேன். அவர் பிரம்மாவின் பாதையைப் பின்பற்றி தனது வேலையை முடித்தார். இதன் உள்ளடக்கம் மதம், மற்றும் ஆன்மீகம் தொடர்புடையதாக இருக்கிறது.

4. **மூவினைக்கு மும்முதலாய் மும்முதலு மொருமுதலாந்**
   **தேவினைக்கை தொழுதேத்துந் திரிகரண சுத்தருந்தம்**
   **நாவினைக்கொண் டேத்தரிய நல்லறத்தின் றனித்தாயைத்**
   **தீவினைக்கோ ரருமருந்தைச் சிலுவைமிசைக் கண்டேனே.**

**விளக்கம்** : நல்வினை, தீவினை, கலப்பு வினை மும்முதலாய் (இறைவன், உயிர், தலை) இருக்கும் இறைவனைப் பற்றியது. ஒரு முதலாகிய இறைவனிடமிருந்து தோன்றியவை. இத்தகைய இறைவனை மனம், வாக்கு, காயம், ஆகிய திரிகரணங்களாலும் தொழுது ஏத்தும் தூய உள்ளம் கொண்டவர்கள். தங்கள் நாவினால் ஏத்த முடியாத நல்லறத்தின் தனித்தாயான இறைவனை தீவினைகளுக்கெல்லாம் அரிய மருந்தான இறைவனை சிலுவையின் மீது கண்டேன்.

5. **மூவாத முதலவனை முதுசுருதி மொழிப்பொருளை**
   **ஓவாத பெருங்குணத்த வுத்தமனை யுலகனைத்தும்**
   **சாவாத படிகாக்கத் தநுவெடுத்துத் துசங்கட்டுந்**
   **தேவாதி தேவனையான் சிலுவைமிசைக் கண்டேனே.**

**விளக்கம்** : அழிவில்லாத முதல்வன், வேதங்களுக்கெல்லாம் தலைவன், முடிவில்லாத நற்குணங்களைக் கொண்ட உத்தமன், உலகைக் காக்க வேண்டி, சிலுவையில் அறையப்பட்ட வேதனையைத் தாங்கிக் கொண்ட தேவாதி தேவனை சிலுவையின் மீது கண்டேன். சிலுவையில் மரித்த இயேசுபெருமானின் தன்மைகளை விளக்குகிறது.

6. **துன்னெறிபுக் குழல்கின்ற தூர்த்தரிலுந் தூர்த்தனாய்ப்**
   **பன்னெறிகொள் பரசமயப் படுகுழிவீழ்ந் தழிவேற்கு**
   **நன்னெறியின் றுணிபுணர்த்தி நயந்திதயக் கண்டிறந்து**
   **செந்நெறிகாட் டியகுருவைச் சிலுவைமிசைக் கண்டேனே.**

**விளக்கம்** : பொய்யான மதங்களின் குழியில் விழுந்து இலக்கின்றி அலைந்து திரியும் பொல்லாத நபரைக் குறிப்பிடுகிறது. நல்ல நெறியைக் காட்டி அவர்களின் பொல்லாத நெறியை அகற்றி நெறிகாட்டியவராக இயேசு பெருமான் காணப்படுகிறார். அத்தகைய குருவானவரை சிலுவையில் கண்டேன்

7. **அந்தரதுந் துமிமுழங்க வமரரெலாந் தொழுதேத்தத்**
   **தந்தைதிரு முனமகிமைத் தவிசிருந்த தற்பரனை**
   **நந்தம்வினை தொலைத்திடற்காய் நரனாகி நலிந்திரத்தஞ்**
   **சிந்தியுயி ரவஸ்தையுறச் சிலுவைமிசைக் கண்டேனே.**

**விளக்கம்** : வானம் பிளந்து இடிமுழக்கம் உண்டாக, தேவதூதர்கள் அனைவரும் தொழுகை செய்து போற்ற, தனது தந்தையின் மகிமையான சிம்மாசனத்தில் வீற்றிருந்த பரம்பொருளை ,

நமது பாவங்களை நீக்குவதற்காக அவதரித்து வேதனைப்பட்டு, இரத்தம் சிந்தி உயிரை விடும் நிலையில் சிலுவையில் கண்டேன். அவரது தியாக மனப்பான்மையை விவரிக்கிறது.

8. **நிந்தனைசெய் திருப்பாணி நிரையழுத்திக் கொலைபுரியும்**
**வெந்தொழிலர் செய்வினையின் விளைவறியார் பொறுத்தருளும்**
**எந்தையென வெழிற்கனிவா யிதழவிழெம் பெருமானைச்**
**செந்தனிக்கோல் கொளுந்தேவைச் சிலுவைமிசைக் கண்டேனே.**

**விளக்கம்** : தேவர்களை தேவ தூதஷணம் செய்பவன், ஆணிகளை அடிப்பவன், கொலை செய்பவன், போன்றவைகளை பொறுத்தருளும். 'என் தந்தையே, அவர்களை மன்னியுங்கள்' இறைவன் அழகான, .மலர்ந்த, தேன் நிறைந்த உதடுகளுடன் கூறினார். சிலுவையில் நீதியுள்ள செங்கோலைக் கொண்டவரைக் கண்டேன்.

9. **மறம்வளர்க்குங் களருளத்தை வளமலிதண் பணையாக்கி அறம்வளர்க்கு**
**மருண்முகிலி னன்புமழை மாரிபெய்து புறம்வளர்க்கு மிரட்சிப்பின் புகழமைந்த**
**புண்ணியத்தின் திறம்வளர்க்குஞ் செழுங்கிரியைச் சிலுவைமிசைக் கண்டேனே.**

**விளக்கம்** : சிலுவையில், வளமான மலையை வளர்க்கும் நல்லொழுக்கத்தின் சக்தியைக் கண்டேன். நல்லொழுக்கத்தை வளர்க்கும் கடவுளின் அன்பு, மழையைப் போலப் பொழிந்தது. என்னுடைய தரிசு இதயத்தை வளமான வயலாக மாற்றியது. வளர்த்தது. வெளியில் இருந்து இரட்சிப்பை வளர்த்தது.

10. **காயொளியிற் கதிர்பரப்புங் களங்கமினீ தியின் சுடரைப் பாயொளிகொள்**
**பசும்பொன்னை பணிக்கருஞ்சிந் தாமணியைத் தூயொளிகொ ணிதிதிலத்தைத்**
**தூண்டாத சுடர்விளக்கைச் சேயொளிகொள் செம்மணியைச் சிலுவைமிசைக்**
**கண்டேனே.**

**விளக்கம்** : சிலுவையில் நான் ஒளிக்கதிர்களைப் பரப்பும் கறையற்ற சூரியச் சுடரையும், பிரகாசமான பிரகாசிக்கும் தூய தங்கத்தையும், விலைமதிப்பற்ற சிந்தாமணி இரத்தினத்தையும், தூய பிரகாசிக்கும் திலக இரத்தினத்தையும் , திரி இல்லாமல் எரியும் விளக்கையும், தொலைதூர ஒளியுடன் கூடிய சிவப்பு ரத்தினத்தைக் கண்டேன்.

## குணங்குடி மஸ்தான் சாகிபு

- குணங்குடி மஸ்தான் சாகிபு இசுலாமிய தமிழ் அறிஞர்.
- இவரது காலம் 1792 – 1838.
- இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி அருகே குணங்குடி என்னும் சிற்றூரில் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் 'சுல்தான் அப்துல் காதிர்' என்பதாகும். இளமையிலேயே குர்ஆன் மற்றும் இசுலாமிய சமய சாத்திரங்களைக் கற்றுக் கொண்டு 'ஆலிம்' ( சமயக் கல்வி அறிஞர்) என்னும் பட்டம் பெற்றார். பல இசை உணர்வு மிக்க பாடல்களை எழுதியவராகவும், தமிழ் சித்த மரபினரில் ஒருவராகவும் அறியப்படுகிறார்.
- 1813 ஆம் ஆண்டு திரிசிரபுரம் என்ற ஊரில் மௌலவி ஷாம் சாஹிப் என்பவரிடம் தீட்சை பெற்று ஞானயோக நெறியில் வாழ்ந்தவர் இவர் சதுரகிரி, புறாமலை, நாகமலை, ஆனைமலை போன்ற பல்வேறு மலைகளில் தங்கியிருந்து தவம் புரிந்துள்ளார். உலக நடை நீங்கி பித்தநடை கொண்டவராக விளங்கினார். மக்கள் இவரது நடையையும், இவரது சித்துக்களையும் கண்டு 'மஸ்தான்' என அழைக்கலாயினர்.
- (மஸ்த் என்ற பாரசீகச் சொல்லுக்கு போதைவெறி என்று பொருள். இறைகாதல் போதையில் வெறி பிடித்த ஞானியரை 'மஸ்தான்' என்று அழைப்பது மரபாகக் காணப்படுகிறது) இவருடைய இறைப்பணியில் களிப்படைந்தவர்கள் இசுலாமியர் மட்டுமல்லாமல் இந்துக்களும் அடங்குவர்.
- மஸ்தான் சாகிபு 1838 ஆம் ஆண்டு ஹிஜ்ரி வருடம் ஜமாதுல் அவ்வல் 14 ஆம் நாள் திங்கட்கிழமை தனது நாற்பத்தேழு வயதில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். இவரை மக்கள் தொண்டியார் என்று செல்லமாக அழைப்பர். அவரிருந்த அந்த இடம் தொண்டியார் பேட்டை என தற்போது அழைக்கப்படுகிறது. இவரின் படைப்புக்களாக நிராமயக் கண்ணி, மனோன்மணிக்கண்ணி, றகுமான் கண்ணி, போன்றவை காணப்படுகின்றன.

## ரகுமான் கண்ணி – 50 பாடல்கள்

பாடல்கள்

1. **பார்க்கப் பலவிதமாய்ப் பல்லகண்டந் தன்னையடை**
   **சாச்குந் திருக்கருணைக் கண்ணே ரகுமானே.**

விளக்கம் : ரகுமானே ! பார்ப்பதற்குப் பல வழியாகப் பல அகண்டங்களை அடைகாத்து படைக்கின்ற கண்ணே !

2. **ஈறுமுதலுமற்றே யியங்குகின்ற முச்சுடராய்க்**
   **காரணிக்கும் பூரணமே கண்ணே ரகுமானே!**

விளக்கம் : ரகுமானே! என்னுடைய கண்ணே ! அந்தமும், ஆதியுமற்று சஞ்சரிக்கின்ற மூன்று சுடராய்க் காணப்படுகின்ற பூரணவஸ்துவே !

3. **பாணிக்க வொண்ணாப் பதம்பெறுதற் கென்சிரசைக்**
   **காணிக்கை வைத்தே னென்கண்ணே ரகுமானே .**

விளக்கம் : என்னுடைய கண்ணே ! ரகுமானே ! அளவிடுவதற்கு முடியாத பதவியைப் பெறுவதற்பொருட்டு என்னுடைய சிரசை உனக்குக் காணிக்கையாக வைத்தேன்.

4. **பொய்யடிமை யாயினுமுன் பொன்னடிக்கா ளாக்கியெனைக்**
   **கையைக் கொடுத்தணைத்தாள் கண்ணே ரகுமானே !**

**விளக்கம்** : என்னுடைய கண்ணே ! ரகுமானே ! நான் தேவரீருக்குப் பொய்யடிமைப் பட்டவனானாலும் உன்னுடைய பொன்னைப் போலும் திருவடிகளுக்கு அடிமைப்படுத்தி என்னைக் கைகொடுத்து ஆள வேண்டும் .

5. **பெண்டுபிள்ளை யென்றே பிதற்றுதல்பொய் யல்லாமற்**
   **கண்டபல னொன்றுமில்லை கண்ணே ரகுமானே .**

**விளக்கம்** : என்னுடைய கண்ணே ! ரகுமானே !பெண்டு பிள்ளைகள் என்று பிதற்றுவது பொய்யே யல்லாமல் அவர்களால் அடைந்த பலன் ஒன்றுமில்லை.

6. **பேதலித்தே னுன்னடிமை பேதகமில் லாமலுனைக்**
   **காதலித்தே னாண்டருள்செய் கண்ணே றகுமானே .**

விளக்கம் : என்னுடைய கண்ணே ! றகுமானே ! உன்னுடைய அடிமையாகிய நான் பேதகங்கொண்டேன். ஆனாலும் பிறகு அப்பேதம் உண்டாகதபடி உன்னை விரும்பினேன். ஆகையால் தேவரீர் என்னை ஆண்டருள வேண்டும்.

7. **ஏகப் பெருவெளியி லிருட்கடலிற் கம்பமற்ற**
   **காகமது வானேனென் கண்ணே றகுமானே.**

விளக்கம் : என்னுடைய கண்ணே ! றகுமானே ! ஒரே வஸ்துவான பெருவெளியின், இருட்கடலின் கலக்கமற்ற காகத்தைப் போல் ஆனேன்.

8. **ஐயோ வுனதருளி லாசையற்ற பாவியென்னைக்**
   **கையை நெகிழ்த்தாதருளென் கண்ணே றகுமானே.**

விளக்கம் : என்னுடைய கண்ணே ! றகுமானே ! ஐயோ ! உன்னுடைய திருவருளின்கண் ஆசைவைக்காத பாவியாகிய என்னைக் கை விட்டுவிடாமல் திருவருள் செய்ய வேண்டும்.

9. **போதமய மாகவெங்கும் பூரணித்த காரணத்தைக்**
   **காதலித்து நின்றேனென் கண்ணே றகுமானே.**

**விளக்கம்** : என்னுடைய கண்ணே ! றகுமானே ! போதமே வடிவாக எங்கும் நிறைந்திருக்கின்ற காரண வஸ்துவை அடைய நான் ஆசைப்பட்டிருந்தேன்.

10. **எல்லார்க் கமுதளிக்கு மியல்புபோற் றேரைகட்கும்**
    **கல்லுள் ளமுதளிக்குங் கண்ணே றகுமானே.**

விளக்கம் : றகுமானே ! யாவர்க்கும் அமுதுகொடுக்குந் தன்மையைப் போல தேரைகளுக்கும் அவைகளிருக்கின்ற கல்லுக்குள் அமுதம் அளிக்கின்ற கண்ணே !

11. **சொல்லுட் பதர்நீக்கிச் சும்மா விருந்தருளைக்**
    **கல்லாருங் கல்லேயென் கண்ணே றகுமானே.**

விளக்கம் : நகுமானே ! சொல்லுக்குள் இருக்கின்ற பதர்களை நீக்கிச் சும்மாயிருந்து திருவருளைக் கல்லாதவர்களுக்குக் கல்லே ! என்னுடைய கண்ணே.

**12. வெட்டவெறும் பாவியென்ன வீணிலெனைத் தள்ளாமற்**
**கட்டியணைத் தாண்டருள்செய் கண்ணே நகுமானே**

விளக்கம் : என்னுடைய கண்ணே ! நகுமானே ! என்னை வெறும் பாவி என்று எண்ணி வீண் காரியங்களில் தள்ளாமல் கட்டியணைத்து ஆண்டருள வேண்டும்.

**13. யானைரத மேறு மரசர்பெரு வாழ்வுமுதற்**
**கானற் சலமன்றோ கண்ணே நகுமானே**

விளக்கம் : என்னுடைய கண்ணே ! நகுமானே! யானை, தேர் முதலியவைகளில் ஏறுகின்ற ராஜாக்களுடைய பெரியவாழ்வு முதலியயாவும் கானற்சலம் போல் காணப்படுவன வல்லவோ?

**14. எவருடைமை யும்மெடுத்திட் டென்னுடைமை யென்பவர்க்குக்**
**கவறில் வருந்துணையே கண்ணே நகுமானே**

விளக்கம் : என்னுடைய கண்ணே ! நகுமானே! யாவருடைமைகளையும் எடுத்து என் உடைமை என்று சொல்பவர்களுக்குக் கவறில் வருகின்ற துணையே !

**15. ஊனெடுத்த நாண்முதலா வுபயோக மற்றயான்**
**கானினில வானேனென் கண்ணே நகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! நகுமானே ! சரீரம் எடுத்த நாள் முதலாக உபயோகமில்லாதவனாயிருக்கின்ற நான் காட்டில் பிரகாசிக்கின்ற சந்திரனைப் போலானேன்.

**16. வாசிதனி லேறி மனமகிழ்ந்து வாழாமற்**
**காசாசை கொண்டேனென் கண்ணே நகுமானே.**

விளக்கம் : என்னுடைய கண்ணே ! நகுமானே! சரமென்கிற குதிரையின் மேல் ஏறி மனம் சந்தோஷித்து வாழாமல் பணத்தாசை கொண்டவனானேன்.

**17. விடாவென் றேகம் விழுமிடந்தான் வீதிகளோ**
**காடோ செடியோவெண் கண்ணே நகுமானே.**

விளக்கம் : என்னுடைய கண்ணே ! நகுமானே! என்னுடைய சரீரம் இறந்துபடும் இடமாயுள்ளது வீடோ ? தெருக்களோ? காடோ? செடியோ?

18. **பாகமுடன் வளர்த்த பாழுடறா னாய்க்கிரையோ**
    **காகங் கழுக்கிரையோ கண்ணே நகுமானே.**

விளக்கம் : என்னுடைய கண்ணே ! நகுமானே!மிகவும் பக்குவமாக வளர்த்த பாழாகிய இந்த சரீரமானது நாய்க்கு இரையாகுமோ? அல்லது காகத்திற்கோ? கழுகுக்கோ?

19. **ஏங்காம லங்குமிங்கு மேகாந்த மாகவுனைக்**
    **காண்கவந்து பாங்கருள்செய் கண்ணே நகுமானே.**

விளக்கம் : என்னுடைய கண்ணே ! நகுமானே! அவ்விடத்திலும், இவ்விடத்திலும் ஏங்காமல் ஏகாந்தமாக உன்னைக் காண்பதற்கு எழுந்தருளி வந்து நற்குணமருள வேண்டும்.

20. **தொண்டுசெய்ய நின்ற துறவியர்க ளேயருளைக்**
    **கண்டுகொள்ளக் கண்டாயென் கண்ணே நகுமானே.**

விளக்கம் : என்னுடைய கண்ணே ! நகுமானே! அடிமை செய்வதன் பொருட்டு இருந்த துறவியர்களே திருவருளைத் தெரிசிக்கச் செய்தாய்.

21. **அல்லும் பகலு மடிமைமனந் தேம்புதற்குக்**
    **கல்லுங் கரைந்திடுமென் கண்ணே நகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! நகுமானே! அடியேனுடைய மனமானது இரவும் பகலுமாக தேம்புவதன்பொருட்டு கல்லுங் கரையும்.

22. **வேட்டை பெரிதென்றே வெறிநாயைக் கைப்பிடித்துக்**
    **காட்டிற் புகலாமோ கண்ணே நகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! நகுமானே! வேட்டையைப் பெரிதென்று வெறிபிடித்த நாயைக் கைப்பிடித்து காட்டினுள் புகலாமோ?

23. **அடைத்த மனக்காட்டை யாளுமைந்து கள்வரையுங்**
    **கடத்த முடிவதில்லை கண்ணே நகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! நகுமானே!சேர்ந்த மனமென்னுங் காட்டையாள்கின்ற பஞ்சபூதங்களையும் அழிக்க முடியவில்லை.

24. மடம்புகு நாய்போல மயங்குமென்னை யுன்னைவிடக்
கடத்துவாரைக் காணேனென் கண்ணே றகுமானே.

விளக்கம்: என்னுடைய கண்ணே ! றகுமானே! மடத்திற் புகுந்த நாயைப் போல மயங்குகின்ற என்னை உன்னைவிட நடத்துபவரைக் காணேன்.

25. வையம்பொய் யென்றே மறைபோல மிட்டதெல்லாங்
கையுமெய்யு மாச்சுதென்றன் கண்ணே றகுமானே.

விளக்கம்: என்னுடைய கண்ணே ! றகுமானே! வேதமானது உலகம் பொய்யென்று முறையிடுவது உண்மையானது.

26. சொல்லறுமெய்ஞ் ஞானச் சுடரொளிகண் டாலென்மனக்
கல்லுங் கரைந்திடுமென் கண்ணே றகுமானே.

விளக்கம்: என்னுடைய கண்ணே ! றகுமானே! சொல்லுதலற்ற உண்மை ஞானச்சுடரொளியைக் கண்டால் என்னுடைய மனமாகிய கல்லானது கரையும்.

27. மாதாபிதாவு மென்னை மயக்கி மயக்கி யுன்னைக்
காதலிக்க வொட்டாரென் கண்ணே றகுமானே.

விளக்கம்: என்னுடைய கண்ணே ! றகுமானே! மாதா, பிதாக்கள் என்னைப் பலகால் மயக்கி உன்னை விரும்பவொட்டார்கள்.

28. வெற்றிதரு மெய்ப்பொருளை வேதாந்தத் துட்கருவைக்
கற்றோர்க் கருள்புரியுங் கண்ணே றகுமானே.

விளக்கம்: என்னுடைய கண்ணே ! றகுமானே! ஜெயம் கொடுக்கின்ற உண்மைப் பொருளை, வேதாந்தத்தின் உட்பொருளை, கற்றவர்களுக்கு அருள் செய்யுங் கண்ணே.

29. உடையா பரணமென வுன்னியுன்னிப் பாவிமனங்
கடையா விடலாமோ கண்ணே றகுமானே.

விளக்கம்: என்னுடைய கண்ணே ! றகுமானே! உடை, ஆபரணம் என்று நினைந்து நினைந்து பாவியின் மனமானது கடைப்பட்டு விடலாமோ?

30. ஓயாக் கவலையினா லுள்ளுடைந்து வாடுதற்கோ
காயமெடுத்தேனென் கண்ணே றகுமானே.

விளக்கம்: என்னுடைய கண்ணே ! ரகுமானே! ஒழியாத துன்பத்தினால் மனம் இளகி வாடுவதற்கோ நான் சரீரம் எடுத்தேன்.

**31. நேசம்வைத்த துன்னடிமை நின்பதத்திற் கல்லாது**
**காசுதனக் கோவென் கண்ணே ரகுமானே**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! ரகுமானே! உன்னுடைய அடிமையானவன் உன்னுடைய திருவடிகளுக்கு இஷ்டம் வைத்ததே அல்லாமல் காசுக்கன்று.

**32. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணியுன்னடிமை**
**கண்ணிக்குட் கிட்டானேன் கண்ணே ரகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! ரகுமானே! எண்ணாத எண்ணங்களையெல்லாம் எண்ணி எண்ணி உன்னுடைய அடிமையான நான் வலைக்குட்பட்டவனானேன்.

**33. பொய்யெடுத்தா னென்று புறக்கணித்தா யாகிலெனைக்**
**கையணைப்பா ருண்டாவென் கண்ணே ரகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! ரகுமானே! பொய்யுடையவனென்று என்னைத் தள்ளிவிட்டால் வேறு யார் ஆதரிப்பவர் யார் உள்ர்.

**34. விண்ணாடர் காணா விரி கருணைச் செஞ்சுடரைக்**
**கண்குளிரத் தந்தருள்செய் கண்ணே ரகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! ரகுமானே! தேவர்களால் காணப்படாத விரிந்த கருணையையுடைய தேஜோமயத்தைக் கண் குளிரத் திருவருள் செய்.

**35. தங்குபே ரின்பமதைச் சார்ந்தகுரு நாதனுக்கே**
**கங்குல்பகற் றானறுமென் கண்ணே ரகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! ரகுமானே! நிலைபெற்ற பேரின்பத்தை அடைந்த ஞானாசிரியனுக்கு இரவு பகல் ஒழியும்.

**36. தூங்காமற் றூங்கித் தொழுது தொழு துன்னருளைக்**
**காண்க வெனக்கருள்செய் கண்ணே ரகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! ரகுமானே! தூங்காமல் தூங்கி வணங்கி உன்னுடைய திருவருளைக் காண எனக்கு அருளிச் செய்.

37. **இன்றுள்ளோர் நாளைக் கிருப்பது பொய் யென்பதையான்**
**கண்டுகொண்டே னையாவென் கண்ணே றகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! றகுமானே! இன்றைக்கு இருப்பவர்கள் நாளைக்கு இருப்பது பொய் என்று சொல்லுவதை நான் உணர்ந்து கொண்டேன்.

38. **பீற்றற் றுருத்திதனைப் பீக்குழியைச் சாக்கடையைக்**
**காத்தேன் வளர்த்தேனென் கண்ணே றகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! றகுமானே! பீற்றற்றுருத்திவும், பீக்குழியுமான சரீரத்தை நான் காத்துக் கொண்டிருந்தேன்.

39. **போதத் தனம்படைத்த புல்லர்க் கிருப்பூச்சி**
**காதற் றதும்வருமோ கண்ணே றகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! றகுமானே! மாய்கையுள்ளவர்க்கு காதற்ற இரும்பூசியும் வருமோ?

40. **பாடிப் படித்தறிந்தும் பற்றார் பாசவலைக்**
**காடுகொண்டு போவாரென் கண்ணே றகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! றகுமானே! பாடியும், படித்தறிந்தும், பாசம் நீங்காதவர்கள் சுடுகாட்டுக்குக் கொண்டுபோகப் படுவார்.

41. **நிறைந்தபரி பூரணமே நிர்க்குணமே நிர்மலமே**
**கருணைக் கடலேயென் கண்ணே றகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! றகுமானே!குணமே ! கீதமே! பரிசுத்தமே ! கிருபையென்னும் கடலே! கருணையானவனே.

42. **பார்ப்பாயோ வென்றன்முகம் பாவியா காமலெனைக்**
**காப்பாயோ வையாவென் கண்ணே றகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! றகுமானே! என்னுடைய முகத்தைப் பார்ப்பாயோ? பாவியாகாமல் என்னைக் காப்பாற்றுவாயோ?

43. **மெய்யெடுத்த நாண்முதலா மெய்யறியாப் பாவியெனைக்**
**கைவிடவும் வேண்டாமென் கண்ணே றகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! ரகுமானே! நான் சரீரமெடுத்த நாள் முதல் உண்மையை அறியாத பாவியானேன். ஆயினும் என்னைக் கை விட வேண்டாம்.

**44. சோற்றுப் பொதியைச் சுமந்தே அலைந்து சுழற்**
**காற்றுத் துரும்பானேன் கண்ணே ரகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! ரகுமானே! சோற்றுப் பொதியான சரீரத்தைச் சுமந்து சுழல்காற்றைப் போன்று காணப்படுகிறேன்.

**45. சேர்ந்தசுற்றந் தன்னைச் சிதறவிட்ட சிந்தையர்க்குக்**
**காந்த மலையேயென் கண்ணே ரகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! ரகுமானே! கூடிய சுற்றத்தாரைச் சிதறவிட்டவர்களுக்குக் காந்தமலையே!

**46. உலை யிலிடுமெழுகி னொப்பாக வென்றனுள்ளம்**
**கலை தலது காரியமோ கண்ணே ரகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! ரகுமானே! உலையிலிட்ட மெழுகைப் போல என்னுடைய மனம் கலைவதும் உன்னுடைய காரியந்தானோ?

**47. ஆவி தனைக்குரங்கா வாட்டுகின்ற வையறிவைக்**
**காவ லிடவருள்செய் கண்ணே ரகுமானே .**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! ரகுமானே! உயிரைக் குரங்காக வாட்டுகின்ற பஞ்சறிவையும் காவலாக வைக்க அருள்செய்ய வேண்டும்.

**48. வேஷந் தனைப் போட்டு மெய்ம்மயக்கும் பொய்க்குருவாய்க்**
**காசுபணம் பறித்தேன் கண்ணே ரகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! ரகுமானே! நான் பொய்க்குருவின் வேஷம் போட்டுக் காசு பறித்தேன்

**49. எட்டிப் பிடிக்கு மிதமறிந்தா லுன்பதத்தைக்**
**கட்டிப் பிடித்திடுவேன் கண்ணே ரகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! ரகுமானே! உன்னுடைய திருவடிகளை எட்டிப்பிடிக்கக் கூடிய உளவையறிந்தால் கட்டிப்பிடிப்பேன்.

**50. அவியா மனமவிய வாயுங்கலை யோர்கடமைக்**
**கவியுந் திருக்கருணைக் கண்ணே றகுமானே.**

விளக்கம்: என்னுடைய கண்ணே ! றகுமானே! அழியாத மனம் அடங்க ஆய்கின்ற சாஸ்திர வாதிகளை கவிகின்ற திருக்கருணையுடைய கண்ணே. றகுமானே

குணங்குடி மஸ்தான் தனது இறை நெறியை றகுமான் கண்ணி மூலம் எடுத்துக் கூறியுள்ளார்.

**பாடவினாக்கள் :**

1. இரட்சண்ய மனோகரம் - நூற் குறிப்பு தருக
2. எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை – ஆசிரியர் குறிப்பு தருக
3. 'இரட்சண்ய மனோகரம்' எடுத்துரைக்கும் சிலுவைக்காட்சி செய்தியினை கட்டுரைக்க.
4. விசுவாசக் காட்சி – விளக்குக.
5. குணங்குடி மஸ்தான் சாகிபு – விளக்குக
6. றகுமான் கண்ணி பாடலின் பொருளை எடுத்துரைக்க.
7. நபியின் பெருமைகளை குணங்குடி மஸ்தான் எவ்விதம் புலப்படுத்துகிறார்?

## அலகு எண் - 4

## திருவரங்கக் கலம்பகம்

- ❖ திருவரங்கக் கலம்பகத்தின் ஆசிரியர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.
- ❖ சோழ நாட்டைச் சார்ந்தவர். திருவரங்கத்தில் வாழ்ந்தவர்.
- ❖ இவர் வைணவ அந்தண மரபைச் சார்ந்தவர். சிலேடை, யமகம், திரிபு போன்ற அணி அமைப்பு பாட வல்லவராகத் திகழ்கிறார்.
- ❖ இவர் திருமலை நாயக்க மன்னரின் அவைப்புலவராக இருந்தார் எனக் கூறுவர்.
- ❖ திருவரங்கப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பல்வேறான வைணவ நூல்களை எழுதியுள்ளார்.
- ❖ 'அழகிய மணவாளதாசர்' என்றும் அழைக்கப்படுகிறார். 'அஷ்டப்பிரபந்தம்' எனப்படும் எட்டு வகையான நூல்களை இயற்றி வைணவ இலக்கியத்திற்கு பெருமை சேர்க்கும் விதமாக காணப்படுபவர். அவற்றில் ஒன்றாக அமைந்திருப்பது தான் திருவரங்கக் கலம்பகம்.
- ❖ இந்நூல் ஓலைச்சுவடியில் இருந்து பெயர்த்து எழுதப்பட்டு வை.மு. சடகோபராமாநுஜாசாரியார், சே.கிருஷ்ணமாசாரியார், வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியார் ஆகியோரால் விரிவான உரை எழுதப்பட்டு 1914 இல் வெளிவந்த அஷ்டபிரபந்தம் என்னும் நூலில் உள்ள திருவரங்கக் கலம்பக உரையை முதன்மையாகக் கொண்டு எளிய உரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது.
- ❖ 107 செய்யுட்கள் காணப்படுகின்றன.

**நூற்குறிப்பு :**

திருவரங்கக் கலம்பகம் திருவரங்கத்தில் வீற்றிருக்கும் ரங்கனின் பெருமை, திருவரங்கக் கோயிலின் பெருமை போன்றவற்றை பேசுகிறது.

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் ‘மறந்தும் புறம் தொழா’ இயல்பினர் என்பதால் திருமாலை உயர்த்தியும், சைவம், சமணம் முதலிய மதங்களைத் தாழ்த்தியும் எழுதியுள்ள பாடல்கள் பல கிடைக்கின்றன.

அம்மானை, இரங்கல், ஊசல், கார், களி, காலம், குறம், கைக்கிளை, சம்பிரதம், சித்து, தவம், தழை, நாரை, பண், புயவகுப்பு, மடக்கு, மதங்கு, மறம், மேகம், வண்டு முதலிய பதினெட்டு உறுப்புகள் அமைந்துள்ளது.

அகப்பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பாடப்பட்டுள்ளது என்பர். இது தொடர்நிலைச் செய்யுள் வகையைச் சார்ந்த நூலாகும். ‘சீர் பூத்த செங்கமல’ எனத் தொடங்கி ‘சீரியோரே’ என முற்றுப் பெறுகிறது.

கலம்பகம் என்பது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகும்.

சமயம் (மதம்) சார்ந்த கலம்பகங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திருவரங்கக் கலம்பகம் காணப்படுகின்றது.

**மேகவிடுதூது :**

தலைவி தன்னுடைய காதலின் வெளிப்பாட்டை, பிரிவின் துயரத்தை, மேகத்திடம் கூறி திருவரங்கத்தில் வீற்றிருக்கக் கூடிய திருவரங்கப் பெருமானிடம் மேகத்தை தூது அனுப்புவதாக அமைந்த பாடல்

**கொண்டல் காளும்மைக் குறித்தே தொழுகின்றேன்**

**அண்டர் காணா அரங்கத் தம்மானைக் - கண்டு**

**மனத்துளவத்தைப் படுமென்மை யலெல்லாஞ் சொல்லி**

**புனத்துளவத்தைக் கொணரீர் போய்.**

**விளக்கம்** : வாருங்கள் மேகங்காள் ! உங்களைக் குறித்துத் தொழுகிறேன். எவர்களாலும் அளவிட்டுக் காண்பதற்கு அரிய திருவரங்கத்திலே எமக்குச் சுவாமியாயிருந்துள்ளவனை நீங்கள் போமளவிற் கண்டு சந்தித்து எனக்கெய்தாமையினால் இருதயத்தில் இடர்ப்படலாகிய எனது

மையலாகிய ஆசையைத் தெரியப்படுத்தி அவரணித்த புனத்திற் பச்சென்ற பசுந்துழாய் மாலையைக் கொண்டு வரவேண்டும்

**பெருமாலையார்க் குரைப்பேணுமக் கேவிண்டு பேசினல்லால்**

**மருமாலையா யெழுங் கார்க்குலங்கா தொண்டர்காற்பொடித்**

**திருமாலைகொண்ட திருமாலரங்கர் தந்தெய்வத் துழாய் (ன்)**

**மருமாலை வாங்கி வம்மின்னந்தி மாலை வருமுன்னமே.**

**விளக்கம்** : நான் கொண்ட பேராசையைக் கரியவொழுங் காயெழா நின்ற கார்குலங்காள்! உங்களுக்கே வாய்விட்டு உரைப்பதல்லாமல் உங்களையன்றி யார்க்கு உரைக்கப்போறேன். தொண்டரடிப் பொடியாழ்வார் சொல்லியருளிய திருமாலையைக் கொண்டருளிய திருமாலாகிய அரங்கருடைய திவ்வியமாகிய மணம்பொருந்திய திருத்துழாய் மாலையை வாங்கி வாருங்கள். அந்திமாலையானது வருவதற்கு முன்னமே வாங்கிக் கொண்டு வாருங்கள்.

**ஊசல்**

கலம்பகத்தில் ‘‘ஊசல்’’ ஒரு முக்கியமான பகுதியாகக் கருதப்படுகிறது. ஊஞ்சல் ஆடுவது தான் ஊசல் என்று கூறப்படுகிறது. மகளிர் ஊஞ்சல் ஆடும் போது பாடக்கூடிய பகுதி தான் இங்கு பாடலாக அமைந்துள்ளது. அரங்கநாதர் மீது கொண்ட காதல், அவர் குடிகொண்டிருக்கும் திருவரங்கத்தின் சிறப்பு, அரங்க நாயகியின் பிரிவு போன்றவற்றை சேர்த்து மகளிர் ஊஞ்சலாடும் போது பாடுவர்.

**உருமாறிப் பல பிறப்பும் பிறந்துஞ் செத்தும்**

**ஊசலாடுவதடி யேனாழியும் வண்ணம்**

**கருமாயத் தென் நெஞ்சைப் பலகையாக்கிக்**

**கருணையெனும் பாசத்தைக் கயிறாப் பூட்டி**

**மருமாலைத ̇துள வசைய வாடிரூசல்**

**மணிமகரக் குழையசைய வாடி ஊசல்**

**திருமாது புவிமா தோடாடி ஊசல்**

திருவரங்க ராசரே ஆடி ஊசல்

**விளக்கம்** : உருவமானது மாறி மாறிப் பலப் பல பிறவியாகிய யோனி தோறும் பிறந்து இறந்து ஊசலாடுதலை அடியேன் ஒழித்து விடும்படிக்குக் கருமையாய் மாயையோடுங் கூடின என் நெஞ்சைப் பலகையாகச் செய்து தேவரீருடைய கருணையாகியப் பாசத்தைக் கயிறாகப் பூட்டி நறுநாற்றமிக்க துளவமாலை அசைய இவ்வூசலை ஆடக்கடவீர்! மணி மகரக் குண்டலங்கள் அசைய இவ்வூசலை ஆடக்கடவீா ! சீதேவி, பூதேவியோடும் இவ்வூசலை ஆடக்கடவீா! திருவரங்க ராசனே இவ்வூசலை ஆடக்கடவீா !

**ஊசல் வடம் போலூர்ச் சகடம்போ லொழியாமே**

**நாசவுடம் போடா விசுழன் றேநலிவேனோ**

**வாசவனும் போதாசன னுங்கூர் மழுவோனும்**

**நேசமுடன் சூழ் கோயிலரங்கா நெடியோனே.**

**விளக்கம்** : ஓடியோடி வருவனவும் போவனவுமான ஊசல் கயிறு போல் ஊரமூட்டப்பட்ட சகடக்கால் போல் ஓய்வில்லாமல் அனந்தஞ் செனனங்கடோறு மெடுத்தெடுத்து நசிக்கப்பட்ட உடம்பினுடனே கூட ஆவியானது சுழன்று நலியக் கடவேனோ! வாசவானாகிய இந்திரனும், போதாசனனாகிய பிரம்மதேவனும் ˙கூரிய மழுவாயுதத்தை உடைய உருத்திரனும், நேசமுடனே சூழ்ந்து துதிக்குங் கோயிலாகிய அரங்கத்தையுடையவனே ! நெடிய மாலவனே !

**வண்டு**

‘வண்டு’ தூதுப் பொருளில் முக்கியமாகச் செயல்படுகிறது. தலைவி தனது பிரிவினை, ஏக்கத்தினை வண்டிடம் தூது சொல்வது போல் பாடல் அமைந்துள்ளது. தன்னைப் பிரிந்து சென்ற அரங்கநாதர் மீது காதல் கொண்ட தலைவி வண்டினைத் தூதாக அனுப்பி தனது பிரிவுத் துயரைத் தெரிவிக்கிற பாங்கு வெளிப்படும். இது அகப்பொருளில் அடங்கும். வண்டுகள் தேன் மொய்க்கின்ற அழகையும், அரங்கரின் திருமேனியில் வண்டுகள் ரீங்காரமிடுவதையும் இணைத்து பாடல்கள் புனையப்பட்டுள்ளது.

**பண்கொண்ட வேயூது செவ்வா யரங்கேசர்**

**பைம்பொன்னிநாட்**

**டெண் கொண்ட பேராசை தந்தார் மறந்தார்கொ**

**லிசைவண்டுகாள்**

**விண்கொண்ட மலைமீது விண்மாரி பொழிகின்ற**

**விசைபோலவென்**

**கண்கொண்ட முலைமீது கண்மாரி பொழிகின்ற**

**கார்காலமே.**

**விளக்கம்** : பண்ணாகிய இசை பொருந்திய வேய்ங்குழலை ஊதப்பட்ட சிவந்த வாயையுடைய அரங்கநாதருடைய செழுமை பொருந்திய காவேரி நதி சூழ்ந்த நாட்டிலே எண்ணுதலை எய்தி பேராசையைக் கொடுத்த தலைவரானவர் மறந்துவிட்டாரோ ! பண்கள் மொழியத்தக்க வண்டினங்களே ! விண்ணளாவிய வெற்பின்மேலே விண்ணிலிருந்து விண் மழை பொழிகின்ற விசையைப் போலே என்னுடைய கண்பொருந்திய மார்பின் மேலே கண்ணிலிருந்து கண் மழை பொழிகின்ற கார்காலமே.

**அம்மானை**

**தேனமருஞ் சோலைத் திருவரங்கரெப் பொருளும்**

**ஆனவர் தாமாண் பெண்ணலியலர் காணம்மானை**

**ஆனவர் தாமாண் பெண்ணலியலரே யாமாகில்**

**சானகியைக் கொள்வாரோ தாரமா யம்மானை**

**தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தால் அம்மானை.**

**விளக்கம்** : வண்டு சாதிகள் மருவா நின்ற பூங்காவனம் சூழ்ந்த திருவரங்கத்தினிடத்திலே எம்பெருமானார் எழுந்தருளி இருக்கப்பட்டவர் ஆணுமல்லாத பெண்ணுமல்லாதவர். அலியுமல்லாதவராகில் சானகியாகிய சீதையைத் தாரமாய்க் கொள்கைக்குத் தகுமோவென்றில் அம்மானையப் படித் தாரமாகக் கொண்டது ஒரு சாபமாகிய வில்லை ஒடித்ததன் விளைவாகும்.

இரங்கல்

நிமித்தம் என்பது சகுனம் பார்த்தல் என்னும் பொருளில் வழங்கப்படுகிறது. இரங்கலைக் குறிக்கும் . தலைவி தலைவனைக் காணாது காத்திருக்கும் போது ஏதேனும் ஒரு சகுனம் கிடைக்கப்பெற்றால் அதனை தனக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டு தலைவன் வருவான் என்று நம்பிக்கை கொள்வாள். இங்கு திருவரங்க அரங்கனை எண்ணி நல் நிமித்தம் ஏற்படுமாறும், தீ

நிமித்தம் ஏற்படாதவாறும் தனது நெஞ்சை இரங்கும் விதமாகப் பல்வேறு பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ளது.

**வாயினி ரங்கீனையா ரமறிந்தனை**

**வால்வளைசிந்தினை தண்**

**பாயலையுந் தினைமாலை அடைந்தனை**

**பாரிலுறங்கிலையால்**

**கோயிலரங்கனை மாகன கந்திகழ்**

**கோகனகம்பொலியும்**

**ஆயிழை நண்பனை நீயும் விரும்பினை**

**யாகு நெடுங்கடலே.**

**விளக்கம்** : வாராய் நெடிய கடலே ! என்னைப் போலவே நீயும் கோயிலாகிய திருவரங்கத்திலுள்ள வரங்க நாயகனைப் பெருமைமிக்க கனகமயமாய்க் கதிர்விட்டிலங்குங் கமலமலரிற் பொலிவு பெற்ற வாயிழையாகிய கமலைக்கு நட்பான காதலனை விரும்பினவளாக வேண்டும். அஃதெத்தன்மைத் தென்டையாகில் , அவர் வந்தணையாத ஆற்றாமையினால் நான் வாயினால் இரங்கிப் புலம்புகிறது போல நீயும் முன் வாயினால் இரங்கிப் புலம்புகிறாய். அதுவுமன்றி யான் ஆபரணமான முத்தங்களை வெறுத்தெறிவது போல நீயும் ஆரமான முத்தங்களை வெறுத்தெறிகிறாய். அதுவுமன்றி யான் வால்வளையாகிய கையிலணிந்த வெள்வளைகளைச் சிந்திவிடுகிறாய். அதுவுமன்றி யான் கண்படை கொள்ளுந் தண்மை பொருந்திய பாயலை விரும்பாமல் தள்ளிவிடுகிறது போல நீயும் பாயப்பட்ட அலைகளைத் தள்ளி விடுகிறாய். அதுவுமன்றி யான் மயலாகிய மாலையை அடைந்தது போல நீயும் அருளின ஒழுங்காகிய மாலையை அடைந்தாய். அதுவுமன்றி நான் இரவு உறங்காமல் இருப்பது போல் நீயும் உறங்காமல் இருக்கின்றாய். ஆகையால் யானொருத்தி இவ்வாறு இருக்கிறேனென்று இருந்தேன். ஆனால் நீயும் என்னோடு ஒரு சேர இருக்கிறாய். இது தலைவி கடலின் மேல் இரக்கம் கொண்ட நிமித்தமாக கருதப்படுகிறது.

**மாலையெய்தவ ரின்னமென்மட மானையெய் திலர் நேமியா**

**மாலை தந்தவர்பைந் துழாய் மதுமாலைத் தந்திலரிந்திரன்**

**சோனை மாரி விலக்கிவிட்டவர் சொரிகண் மாரி விலக்கிலார்**

**சுரர்களுக்கமுதங் கொடுத்தவர் சோதிவாயமுதங்கொடார்**

**தானையவர் கொடிக்களித்தவர் தானை கொண்ட தளிக்கிலா**

**சங்கிற்கிரவைத் தடுத்தவர் தையலுக்கிரவைத தடார்**

**ஆனை முன் வருமுன் புளார்முலையானை முன் வருமன்பிலார்**

**அணியரங்கர் நடத்து நீதிய நீதியாகவிருந்ததே.**

**விளக்கம்** : முன்பு மாரீசனாகிய மானை அம்பினால் எய்தியவர் இப்போது இன்னமுமென்னுடைய மடமானோக்கத்தினாலே மானை ஒப்பாளை எய்திலரென்னவே எய்தப்பொறுகின்றில் என்பதாயிற்று. அன்றியுஞ் சக்கராயுதத்தினாற் பொழுதை மறைத்து மாலையாகிய செவ்வந்தி மாலையைத் தந்தவர் பசுமை பொருந்திய துளவ மாலையைத் தந்திலர்.அன்றியுந் தேவேந்திரனால் விடப்பட்டு வந்து பொழியப்பட்ட சோனை மழையை விலக்கிவிட்டவர் சொரியப்பட்ட கன்மாரியை விலக்கி விடுகின்றீலர். அன்றியுந் தேவர்களுக்கெல்லா அமிர்தத்தைக் கொடுத்தவர் செவ்விய ஒளி சிறந்த தமது திருவாய்மலரிடத்து துண்டாக்கிய அமிர்தத்தைக் கொடுக்கிலர். அன்றியும் ஐவர் கொடியாகிய துரோபதைக்கு மாளாத் துகிலை அளித்தவர். இங்ஙனமென் சிறிய பேதைத் தன்மையுடையவட்குச் சரிந்து சோர்ந்து துகிலையளித்திலர், சங்கரருக்கிரவச்சத்தைத் தடுத்தவர். தையலானவள் இரவு நீட்டிக்குமச்சத்தைத் தடுக்கிலர். அன்றியுங் கஜேந்திரனாகிய யானைக்கு முற்பட்டு வரும்படிக்கு அன்புண்டானவர். முலையாகிய கொங்கைப் போராணைக்கு முற்பட்டு வரும்படிக்கு அன்பில்லாதவராயிருந்தார். ஆகையால் அழகிய திருவரங்கேசர் நடத்துகின்ற நீதியெல்லா மனீதியாயிருந்தது.

**வாடியோடவனச மன்னவிருகண் வெள்ளமருவிபோல்**

**மருளியோடமதனன் வாளியுருவியோட வாடைஷயூ**

**டாடி யோடவன் றிலோசை செவியிலோட வண்டுழாய்**

**ஆசையோடு மெங்கள் பேதையாவி யோடனீதியோ**

**மோடியோட வங்கி வெப்பு மங்கியோட வைங்கரன்**

**முடுகியோட முருகனோட முக்கணீசன் மக்களைத்**

**தேடியோட வாணனாயிரம் புயங்கள் குருதிநீர்**

**சிந்தியோட நேமிதொட்ட திருவரங்கராசரே.**

**விளக்கம்** : மோடியாகிய முதணங்கு தோற்றோடவும், அங்கியாகிய நெருப்பினுடைய வெப்பமும் அங்கியோடவும் , ஐந்து கரமுடைய யானை முகவன் முடுகியோடவும், அவன் தம்பியாகிய முருகனவன் பின்பு கடுகியோடவும், மூன்று கண்ணினையுடைய ஈசனானவன் மக்களைத் தேடி ஓடவும், வாணாசூரனுடைய ஆயிரம் புயங்களினுமிருந்து குருதிநீர் வெள்ளமானது குதித்தோடவும், சக்கராயுதத்தை விடுத்தருளிய திருவரங்கராசரே ! எங்கள் பேதத் தன்மையை உடையவளுடைய கமலம் போன்ற இரு கண் மலரும் வாடிப் போகவும், மன்மதனெய்யப்பட்ட வைங்கணையும் பட்டு உருவியோடவும், வாடையானது உவந்து இழைந்து ஓடவும், அன்றிலாகிய பட்சியின் இசை இரு செவியிலும் நுழைந்தோடவும், வண்மையுடைய உமது துளபமாலை மேல் வைத்த ஆசையுடனே கூட அளவளாவி கூட்டில் இராது நீங்கியோடவும் நீதியோ சொல்லும்.

**ஆடும்பட நாகணை மேலணையு**

**மமலன்கமலத்தவ னுஞ்சிவனும்**

**நாடுந் திருமா துயில் கோயிலின்வாய்**

**நறைவார் பொழி லூடுறைவா ரளகக்**

**காடுங் குழையைச் சாடுங்குவளைக்**

**கண்ணுங்கு தலைப்பண் ணுங்கரியின்**

**கொடுந்தரளத் தோடும்புருவக்**

**கோதண்டமுமே மூதண்டமுமே.**

**விளக்கம்** : எடுத்தாடும் படத்தினையுடைய பாம்பணையயிற் பள்ளிகொள்ளும் பரம புருஷோத்தமரானவா் உந்திக் கமலத் துதித்த வயனும் அரனும் ஆராய்ந்தறிதற்கு அரிய திருமாலானவா் திருக்கண் வளரும் திருவரங்கத்தினிடத்திலே நறுநாற்றங்கமழும் நந்தவனத்திலே நண்ணுந் தலைவியாருடைய அளகாடவியும், காதிலணிந்த குழையை வந்தலைக்குங் குவளை மலரை ஒத்த கண்ணும், குதலையாகிய பண்ணின் மொழியும், யானைக் கொம்பை ஒத்து அழகிய கொங்கையும், முத்தினாலேயமைத்த தோடும், புருவமாகிய வில்லுமாகவே ஒன்றா நின்றது மூதண்ட கோள முழுவதும்.

**சேவிக்க வாழ்விக்கு மெங் கோனரங்கன் றிருக்கோயில்சூழ்**

**காவிற்கலந் தாசை தந்தேகினாா் நெஞ்சு கன்னெஞ்சமோ**

**வாவிப்புறத் தன்ன மேயின்ன மேதோவரக்கண்டிலேன்**

**பாவிக்க நேகந்தனிக்காலமிந்தப் பனிக்காலமே.**

விளக்கம்: கண்ணினாற் கண்டு சேவிக்கப்பெறில், வாழ்விக்கும் எமக்கு இறைவனாகிய அரங்கநாதருடைய அழகிய கோயிலைச் சூழ்ந்த காவில் கூடிக் கலந்திருந்து கனவிலும் பிரியேனென்று காதலைக் கொடுத்துப் போன காதலா் நெஞ்சமானது கல் நெஞ்சோ? தடாகத்தின் பக்கத்தேசஞ்சரிக்கா ின்ற அன்னங்காளிந் நேரவரைக்கு மேது காரணமாகவோ வரக் காண்கிலேன் ! பாவியெனக்கு இந்தப் பனிக்காலம் பின்னிடுகிறது அநேகங்கோடி காலந் தனித்திருந்து தள்ளுதற்கரிய நெடுங்காலமாயிற்று.

**மானாா்கோன் மேலாா் மாலாா் வாழ்கோயில்**

**தேனாா் காவிற் பூவாராயுந் தேனே போல்**

**நானா போகத்தின் இன்பங் கண்டாா் நான்வாடப்**

**போனாா் வாராதேதோ வோதாய் போதாவே.**

**விளக்கம்:**

கங்கையாகிய பெண்ணானவள் நிறைந்த சடாகேசத்தை உடையவன் முதலாய் மேலோர் யாரும் அன்பாயடைந்து வாழும் திருவரங்கத்தினிடத்தின் தேன்கள் நிரம்பிய பூங்காவில் பூக்கள் தோறும் ஆராயப்பட்ட வண்டைப் போல் என்னிடத்தில் நானால் போகத் தினிடத்து இன்பம் நுகர்ந்து இப்போது நான் வாட்டமுறும்படி விட்டுப் பிரிந்து போன தலைவர் வாராமை ஏது காரணமோ எனக்குச் சொல்ல வேண்டும்.

## கம்பர்

தமிழ்க் கவிஞரும், நூலாசிரியரும் ஆவார். பிறப்பு சோழ நாட்டில் உள்ள திருவழுந்தூர். மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ளது.

இவர் சமஸ்கிருதத்தில் இயற்றப்பட்ட ‘வால்மீகி’ இராமாயணத்தைத் தழுவி ‘இராமாவதாரம்’ என்னும் நூலை இயற்றினார். பிற்காலத்தில் அது கம்பராமாயணம் என அழைக்கப்பட்டது. கம்பரின் காலம் கிபி. 9 ஆம் நூற்றாண்டு. 12 ஆம் நூற்றாண்டின் இறுதி என்றெல்லாம் கூறுவர்.

கம்பரின் பிற நூல்கள் :

1. ஏர்எழுபது
2. திருக்கை வழக்கம்
3. சரசுவதி அந்தாதி
4. சடகோபர் அந்தாதி

**கம்பர் என்ற பெயர்க்காரணம் :**

- ❖ கம்பங்கொல்லையில் பிறந்ததினால் கம்பர் எனப்பட்டார் என்பர்.
- ❖ கம்பமாகாளி என்னும் காளி கோயிலில் பிறந்ததால்
- ❖ கம்பத்தின் கீழ் கம்பர் கிடைத்ததால்

கம்பர் என்னும் உவச்சர் குலத்தில் பிறந்ததால் போன்ற காரணங்களால் கம்பர் என்று அழைக்கப்படுகிறார்.

- கம்பர் தனது கவித்திறமையால் அரசர்களிடம் இருந்து பரிசிலாக யானைகளைப் பெற்றார். எனவே கம்பர் வாழ்ந்த பகுதியில் அவர் வீட்டில் மட்டும் யானைகளைக் கட்டிப் போடும்

கட்டுத்தறி, நாட்டப்பட்டு இருந்தது. நாளடைவில் ‘கட்டுத்தறிக் கம்பம்’ அவருக்கு அடையாளமாக மாறியது.

- கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்றும் கம்பநாட்டாழ்வான் என்றும் கூறப்படுவது இக்காரணமே ஆகும். கம்பர் என்பது காரணப்பெயர். அவரது இயற்பெயர் அறியப்படவில்லை.

சிறப்புகள் :

கல்வியில் பெரியர் கம்பர்

கல்வியில் சிறந்த தமிழ்நாடு – புகழ்க்

கம்பன் பிறந்த தமிழ்நாடு

விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்

கவிச்சக்கரவர்த்தி

போன்ற சொற்றொடர்கள் கம்பரைச் சிறப்பிக்கின்றன.

தமிழில் கம்பராமாயாணமே மிகப்பெரிய இதிகாசம் ஆகும்.

**சடகோபர் அந்தாதி – நம்மாழ்வாரைப் பற்றியது.**

1. **வேதத்தின் முன்செல்க மெய்யுணர்ந் தோர்விரிஞ்சன் முதலோர்
கோதற்ற ஞானக் கொழுந்தின்முன் செல்க குணம்கடந்த
போதக்க டல்எங்கள் தென்குருகூர்ப் புனிதன் கவிஓர்
பாதத்தின் முன்செல்லுமே தொல்லை மூலப் பரஞ்சுடரே.**

விளக்கம்: பழமையும் எல்லாவற்றிற்கும் காரணமும், மேன்மையுமாகிய சோதி வடிவத்தில் இருக்கும் மாயோன், வேதங்களின் அளவைக் கடந்து போவனென்றாலும் போவானாக. உண்மை நிலையை அறிந்தவராகிய, பிரம்மா முதலான தேவருடைய, குற்றம் நீங்கிய ஞானத்தின் முடிபைக் கடந்து போவனென்றாலும் போவானாக. அழகிய குருகூரென்னும் பதியில் அவதரித்த , முக்குணங்களையுடைய ஞானசாகரமாகிய , எங்களுக்கு மேலாய் விளங்குகிற நம்மாழ்வாரது பாடல்களின், ஒரு அடிக்குமுன்னே போகும் தகுதியுடையவன் ஆவேனோ?

2. **சுடர்இரண் டேபண்டு மூன்றா யினதுகள் தீர்ந்துலகத்து**

**இடர்இரண் டாய்வரும் பேர்இருள் சீப்பன எம்பிறப்பை**

**அடர்இரண் டாம்மலர்த் தாள்உடை யான்குரு கைக்கரசன்**

**படர்இருங் கீர்த்திப் பிரான்திரு வாய்மொழிப் பாவொடுமே**

**விளக்கம்** : முற்காலத்தில் சூரியனும், சந்திரனுமாகிய இரண்டு சுடர்களென்றே நிலையிடப்பட்டன. எமது பிறவியை போக்கிய இரண்டாகிய தாமரை மலரை ஒத்த திருவடிகளையுடையவரும் , குருகூருக்கு தலைவரும், பரவிய பெரிய புகழையுடைய வருமாகிய நம்மாழ்வார் செய்தருளிய திருவாய்மொழி என்னும் பிரபந்தத்தினது, பாடல்களுடனே குற்றமின்றி உயிர்களிடத்தில், இரண்டு வகைத் துன்பமாகி வந்து பற்றிக் கொள்கின்ற, பெரிய மயக்கம் பற்றி வருகிற இருவினையாகிய இருளை, போக்குவனவாகி மூன்று சுடர்களென்று மேம்பட்டு விளங்கலாயின.

3. **பாவொடுக் கும்நுன் இசைஒடுக் கும்பலவும் பறையும்**

**நாவொடுக் கும்நல் அறிவொடுக் கும்மற்றும் நாட்டப்பட்ட**

**தேவொடுக் கும்பர வாதச் செருஒடுக் கும்குருகூர்ப்**

**பூவொடுக் கும்அமு தத்திரு வாயிரம் போந்தனவே.**

**விளக்கம்** : திருக்குருகூர்ப் பதியிலே மலரில் அடக்கப்பெற்றிருந்ததான, அமிர்தம் போன்ற சிறந்த ஆயிரம் பாடல்களும் வெளிவந்தவைகள் தாம், செய்யுட்களினிலக்கணங்களை எல்லாம் தம்முள் அடக்கிக் கொண்டு விளங்குவன. நுட்பமாக அறியத்தக்க இராகப் பகுதிகள் எல்லாவற்றையும், வேறாகிய பலவற்றையும,˙ மாறுபடக் கூறுகின்ற புறச்சமயிகளின் நாவினை, அடக்கிவிடும் ; நல்ல அறிவினை தன்னுள் அடக்கியிருக்கும் ; அன்றியும் நிலைநிறுத்தப்பட்டுள்ள, தேவனாகிய திருமால், தன்னுளடக்கிக் கொண்டிருக்கிற வேறாகிய விவகாரத்தினாலாகிய, போரை அடக்கிவிடும்.

4. **தனமாம் சிலர்க்குத் தவமாம் சிலர்க்குத் தருமநிறை**

**கனமாம் சிலர்க்குஅதற் குஆரண மாஞ்சிலர்க்கு ஆரணத்தின்**

**இனமாம் சிலர்க்குஅதற்கு எல்லையு மாம்தொல்லை ஏர்வகுள**

**வனமாலை எம்பெரு மான்குரு கூர்மன்னன் வாய்மொழியே.**

விளக்கம் : எமது தலைவராகிய, குருகூரிலவதரித்த நம்மாழ்வாரது , திருவாயிலிருந்து வந்த பாடல்கள் சிற்சிலருக்கு செல்வப்பொருளாகும்; சிலருக்குத் தவமேயாகும் ; சிலருக்கு புண்ணியம் மிகுந்த பெருஞ்சிறப்புமாகும் ; சிலர்க்கு அப்பெருஞ்சிறப்புக்குக் காரணமுமாகும் ; சிலர்க்கு வேதத்தின் பகுதியாகும்; அந்த வேதத்தின் பகுதிகள் அனைத்துக்கும் முடிவாகிய உபநிஷத்துக்களும் ஆகும்.

5. **மொழிபல ஆயின செப்பம் பிறந்தது முத்தியெய்தும்**

**வழிபல வாயவிட் டொன்றா அதுவமு வாநரகக்**

**குழிபல ஆயின பாழ்பட் டதுகுளிர் நீர்ப்பொருநை**

**சுழிபல வாய் ஒழுகுங்குரு கூர் எந்தை தோன்றலினே.**

விளக்கம் : குளிர்ந்த நீரையுடைய தாமிரபரணி நதியானது , பற்பலவாகச் சுழித்து , ஓடுகின்ற குருகூர் என்னும் பதியில் , எமது தந்தை போல்வராகிய சடகோபர், அவதரித்தலால், பற்பலவாகிய பாஷைகளுக்கெல்லாம், ஒழுங்கு உண்டாயிற்று; மோக்ஷவீட்டினை அடைகின்ற, மார்க்கங்கள், பலவாயினவை எல்லாம் ஒழிந்து, ஒருவழியாயிற்று ; நீங்காத நரகக்குழிகள் பலவாயின எல்லாம், பாழாயிற்று.

6. **தோன்றா உபநிட தப்பொருள் தோன்றலுற் றார்தமக்கும்**

**சான்றாம் இவைஎன் றபோதுமற் றென்பலகா லும்தம்மின்**

**மூன்றா யினவும் நினைந்து ஆரணத் தின்மும் மைத்தமிழை**

**ஈன்றான் குருகைப் பிரான்எம் பிரான்தன் இசைக்கவியே.**

விளக்கம் : பலதரமும், தமக்குள் மூன்று பகுதியாகி அமைந்தவற்றையும், நினைந்த வேதத்தினைப் போல மூன்று கூறுபாடாகிய , தமிழினாலாகிய பாடல்களை, அருளிச் செய்தவரும், குருகூரில் அவதரித்த, பெரியவரும், எம் தலைவருமாகிய நம்மாழ்வாருடைய பண்ணோடு பாடவல்ல இப்பாடல்கள் பலராலும் அறியப்படாத, உபநிஷத்துக்களின் கருத்துக்களை, அறியப் பெற்ற பெரியோர்களுக்கும் , சாட்சியாகி விளங்கும், என்று சொல்லிய காலத்தில் வேறாகிய சிறப்பு யாது வேண்டும்?

7. **கவிப்பா அமுத இசையின் கறியோடு கண்ணன் உண்ணக்**

**குவிப்பான் குருகைப் பிரான்சட கோபன்குமரிகொண்கன்**

**புவிப்பா வலர்தம் பிரான்திரு வாய்மொழி பூசுரர்தம்**

**செவிப்பால் நுழைந்துபுக் குள்ளத் துளேநின்று தித்திக்குமே.**

விளக்கம் : பாடலாகிய , பரவிய, உணவினை , இராகமாகிய, கறி முதலான விஞ்சனத்துடனே , கண்ணபிரான் , உட்கொண்டருளும்படி , சமைத்துக் குவிப்பவரும், குருகூரில் அவதரித்த பெரியோரும், சடமென்னும் வாயுவை முனிந்து போக்கினவரும், குமரி நாட்டுக்குத் தலைவரும், பூமியிலுள்ள, வித்துவான்களுக்கு, தலைவருமாகிய நம்மாழ்வார் பாடிய , திருவாய்மொழி, பிராமணர்களுடைய, காதுகளின் வழிகளிலே நுழைந்து புகுந்து, மனத்தினிடத்திலே, நிலைபெற்று நின்று , இனிய சுவையை உண்டாக்கும்.

8. **தித்திக்கும் மூலத் தெளியமு தேயுண்டு தெய்வமென்பார்**

**பத்திக்கு மூலப் பனுவற்கு மூலம்பவம் அறுப்பார்**

**முக்திக்கு மூலம் முளரிக்கை வாணகை மொய்குழலார்**

**அத்திக்கு மூலம் குருகைப் பிரான் சொன்ன ஆயிரமே.**

விளக்கம் : குருகூரில் அவதரித்த, சடகோபர் சொன்ன, திருவாய்மொழி ஆயிரம் பாடல்களும், இனிமை செய்கின்ற, சாவாமைக்குக் காரணமாயிருக்கின்ற, தெளிந்த அமிர்தமேயாம் ; அன்றியும் தெய்வங்களிருக்கின்றன என்று சொல்லுகிறவர்களுடைய பக்திக்கும் இதுவே காரணமாகும் ; வரலாற்று முறையிற் பாடுகின்ற நூல்களுக்கும் மூலம் பிறவியை, போக்கத் துணிந்தவர்கள், முக்தியடைவதற்கும், தாமரை மலர் போன்ற கைகளும் , ஒளி பொருந்திய பற்களுமுள்ள, நெருங்கிய கூந்தலையுடைய மாதர்களிடத்தாசையை; போக்கும்.

9.**ஆயிரம் மாமறைக்கும் அலங்காரம் அருந்தமிழ்க்குப்**

**பாயிரம நாற்கவிக் குப்படிச்சந் தம்பனு வற்குஎல்லாம்**

**தாய்இரு நாற்றிசைக் குத்தனித் தீபந்தண் ணங்குருகூர்ச்**

**சேயிரு மாமர பும்செவ் வியான்செய்த செய்யுட்களே.**

விளக்கம் : குளிர்ச்சியான, நீர்வளமுடைய குருகூர்ப் பதியிலே குழந்தை வடிவாக அவதரித்தவரும், சிறந்த தாய், தந்தை வழியாக இரண்டு வழியும், சிறந்த மரபினரும் ஆகிய சடகோபர் செய்த, பாடல்களானவை, சிறந்த ஆயிரம் என்ற பகுதியுள்ள சாம சாகைகளுக்கெல்லாம், அழகு செய்வனவாகும் ; அரிய தமிழ்க்கு, வரலாற்று முறையாகும்; நான்கு வகைப்பட்ட கவிகளுக்கு , ஒப்புக்காண்பதற்குரியனவாம் ; எல்லா வகைப்பட்ட நூல்களுக்கும் , தன்னுட் கொண்டு தரும் தாய் போல்வனவுமாம் ; எட்டுத்திக்கும், ஒப்பற்று விளங்குகிற விளக்குமாகும்.

10. **செய்ஓடு அருவிக் குருகைப் பிரான்திரு மாலைநங்கள்**

**கைஓர் கனிஎனக் காட்டித்தந் தான் கழற் கேகமலம்**

**பொய்யோம் அவன்புகழ் ஏத்திப் பிதற்றித் தாய்ந்திரியோம்**

**ஐயோ அறிதும் என்றே உபகாரத்தின் ஆற்றலையே.**

விளக்கம் : அருவி நீர்கள், வயல்களில், ஓடிப் பாய்கின்ற, குருகூரில் வந்த பெரியோரான பராங்குசர், சிறந்த மாயோனை, நம்முடைய, கையிலுள்ள, ஒரு பழமென்னும் படியாக, குறித்துக் காட்டிக் கொடுத்தருளினார் ; அதனை அறிந்தும் அந்தப் பராங்குசருடைய , திருவடிகளிலே, தாமரை மலர்களை பூசித்தறியோம் ; அவரது கீர்த்தியை , துதித்து, பலதரமுஞ்சொல்லி, பிறர் நம்மை நோக்கிப் பைத்தியரென்று சொல்லும்படியாகி, திரிந்து அலைந்திலோம் ; அவர் நமக்குச் செய்துள்ள நன்றியின், பெருமையை, எப்பொழுது அறியப் போகிறோம் ? ஐயோ, என்னே!

11.**ஆற்றில் பொதிந்த மணலின் தெகையரு மாமறைகள்**

**வேற்றில் பொதிந்த பொருள்கஎளெல் லாம்விழு மாக்கமலம்**

**சேற்றில் பொதியவீழ்க் கும்குரு கூரர்செஞ் சொற்பதிகம்**

**நூற்றில் பொதிந்த பொருளொரு ஒருகூறு நுவல்கிலவே.**

விளக்கம் : பொருநை ஆற்றில், தங்கியுள்ள , மணலின் அளவை ஒத்த, சிறந்த, பலவகைப்பட்ட அரிய வேதங்களில், மறைந்து கிடக்கின்ற, எல்லாப் பொருள்களும், யாவரும் விரும்பத்தக்க, சிறந்த தாமரைகள் சேற்றில், கட்டவிழ்ந்து மலரப் பெற்ற, குருகூர்ப் பதியிலுள்ள பராங்குசர்

செய்தருளிய , செந்தமிழ்ச் சொற்களால் செய்த நூறு பதிகங்களிலும், நிறைந்துள்ள பொருள்களில் ஒரு பகுதியளவும், சொல்லினவில்லை;

12. **இலவே இதழுள வேமுல்லை யுள்ளியம் பும்மொழியும்**

**சிலவே அவைசெழுந் தேனொக் குமேதமிழ்ச் செஞ்சொற்களால்**

**பலவே தமும்மொழிந் தான்குரு கூர்ப்பது மத்துஇரண்டு**

**சலவேல் களும்உள வேயது காண்என் தனியுயிரே.**

விளக்கம் : பற்பலவாகிய, வேதத்தின் கருத்தை எல்லாம் , செவ்விய தமிழ்ச் சொற்களினாலே, பாடியருளிய பராங்குசர் அவதரித்த குருகூர்ப் பதியிலே ஒரு தாமரை மலரிலே, சில இதழ்கள், நிறத்தில் முள்ளிலவமலரேயாம் ; அவ்விதழ்களுக்குள்ளே, முல்லையரும்புகளும் சில உள்ளனவாம்; அவைகளில் இருந்து சொல்லப்படுகின்ற வார்த்தைகளும், சிலவுண்டாம்; அவ்வார்த்தைகள் தாம் செழுமையான தேனை, நிகர்க்கும்; இன்னும் அத்தாமரை மலரிலே கோபஞ் செய்வனவாகிய இரண்டு வேலாயுதங்களும், உள்ளனவேயாம் ; அம்மலரையுடைய வடிவந்தான் , எனது ஒப்பற்ற உயிரேயாகும்; நீ சென்று அதனைப் பார் ;

13. **உயிர்உருக் கும்புக் குஉணர்வு உருக்கும் உடலத்தினு ள்ள**

**செயிர்உருக் கொண்டநம் தீங்குஉருக் கும்திரு டித்திருடித்**

**தயிர்உருக் கும்நெய் யொடுஉண் டான்அடிச்சட கோபன்சந்தோடு**

**அயிர்உருக் கும்பொருநல்குரு கூர்எந்தை அம்தமிழே.**

விளக்கம் : உருக்குவதற்குரிய வெண்ணெயுடனே, தயிரையும் ஆயர்பாடியில் எல்லாவீடுகளிலுஞ் சென்று திருடி, விழுங்கிய கண்ணபிரானது, திருவடியைத் தொழுபவராகிய, சடகோபனென்னும் பெயருடையவரும், சந்தன மரங்களுடனே, நுண்மணலையும் கொணர்ந்து கரையோரங்களில் ஒதுக்கித் தள்ளுகின்ற, பொருநையென்னுந் தாமிரபரணி நதியையுடைய, குருகூர்ப் பதியில் அவதரித்து எழுந்தருளிய எம் தந்தை போல்வராகிய பராங்குசரது, அழகிய தமிழ்ப்பாடல்கள் நம் உயிரை உருகச் செய்யும்; உள்ளே புகுந்து அறிவை உருக்கும். நம் சரீரத்தில் அமைந்துள்ள குற்றமே, வடிவமாகக் கொண்டிருக்கின்ற நம்முடைய தீவினைகள் எல்லாம் போக்கும்.

14. **அந்தம் இலாமறை ஆயிரத்து ஆழ்ந்த அரும்பொருளை**

**செந்தமி ழாகத் திருத்தில னேல்நிலைத் தேவர்களும்**

**தத்தம் விழாவும் அழகும்என் னாம்தமி ழார்கவியின்**

**பந்தம் விழாஒழு குங்குரு கூர்வந்த பண்ணவனே.**

விளக்கம் : சுவை நிரம்பிய தமிழ்ப்பாடல்கள் போல கிரமமாக உற்சவங்கள் நடந்தேறீ வருகின்ற, குருகூர்ப்பதியில், அவதரித்த சிறந்தவரான சடகோபர், முடிவில்லாத ஸாம வேத சாகை ஆயிரத்திலும், மறைந்திருக்கிற அருமையாகிய விஷயத்தை, செவ்விய தமிழ்ப்பாடலாக, திருத்தமமையப் பாடியருளாவிட்டால், பூசுரராகிய பிராமணர்களும், அவரவர்கள் கொண்டாடப்படுகிற, உற்சவங்சளும், அவர்களுள் அமைதியும், எத்தன்மையவாய் முடியும்?

15. **பண்ணப் படுவன வும்உள வோமறை யென்றுபல்லோர்**

**எண்ணப் படச்சொல் திகழச் செய்தான் இயலோடு இசையின்**

**வண்ணப் படைக்கும் தனித்தலை வேந்தன்மலர் உகுத்த**

**சுண்ணப் படர்படப் பைக்குரு கூர்வந்த சொல்கடலே.**

விளக்கம் : இயற்றமிழோடு, இசைத்தமிழுமாகிய , அழகிய சேனைக்கு , ஒப்பற்ற தலைமை வாய்ந்த அரசரும் பூக்களிலிருந்து உதிர்க்கப்பட்ட மகரந்தங்கள், பரவிய நீர்நீராட்டுகிற குருகூரில் அவதரித்த, தமிழ்ச்சொற்கடல் போல் பகருமாகிய பராங்குசர், வேதங்கள், இனிப் புதியவனவாகச் செய்யப்படுபவைகளும், இருக்கின்றனவோவென்று, பலவகைப்பட்டவர்களும் , தங்கள் மனத்தில் நினைக்கும்படியாக சொற்கள் விளங்குமாறு பாடியருளினார்.

16. **கடலைக் கலக்கி அமுதம் அமரர்க்குஅளித் தான்களித்தார்**

**குடலைக் கலக்கும் குளிர்சங்கி லான்குறை யாமறையின்**

**திடலைக் கலக்கித் திருவாய் மொழிஎனும்தே னைத்தந்தான்**

**நடலைப் பிறப்பு அறுத்து என்னையும் ஆட்கொண்ட நாயகனே.**

விளக்கம் : கட்குடியாராகிய அசுரர்களுடைய, குடர்களெல்லாம் கலங்கச் செய்கின்ற, குளிர்ச்சி பொருந்திய சங்கத்தையுடைய மாயேனானவன், சமுத்திரத்தைக் கடைந்து, அதிலுண்டாகிய அமிருதத்தை, தேவர்களுக்கு, கொடுத்தருளினான் ; வஞ்சனையாகிய பிறவியைப் போக்கி, என்னையும், அடிமையாகக் கொண்டருளிய, நம்மாழ்வாரானவர், குறைவில்லாத, வேதங்களின் ,

பெரிய திடலாகிய முட்டுக்களை இடித்தெளிந்து திருவாய்மொழியென்று சொல்லப்படுகின்ற தேனை தந்தருளினார்.

17. **நாய்போல் பிறர்கடை தோறும் நுழைந்துஅவர் எச்சில்நச்சிப்**

**பேய்போல் திரியும் பிறவி யினேனைப் பிறவியெனும்**

**நோய்போம் மருந்தென்னும் நுன்திரு வாய்மொழி நோக்குவித்துத்**

**தாய்போல் உதவிசெய் தாய்க்கு அடியேன் பண்டென் சாதித்ததே.**

விளக்கம் : அயலார் வாயில்கள் தோறும், நாயைப் போல் உள்ளே புகுந்து , அவர்களுடைய எச்சிலை, விரும்பி, பிசாசைப் போல, அலைகின்ற பிறப்புடையவனாகிய என்னை, பிறப்பென்கிற, பிணிகள், போகத்தக்க மருந்தென்று சொல்லப்படுகின்ற, உமது திருவாய்மொழிப் பிரபந்தத்தை, யான் பார்க்கும்படி கருணை செய்து, பெற்ற தாயைப் போல, உபகாரஞ் செய்த உமக்கு, தொண்டனாகிய நான், முன்னாளில் என்ன உபகாரம் செய்ததுண்டு?

18. **சாதிக் குமேபற தத்துவத்தைத் தைச்சமய த்திருக்கை**

**சேதிக் குமே ஒன்று சிந்திக் குமேயத னைத்தெரியப்**

**போதிக் குமேஎங்கும் ஓங்கிப் பொது நிற்கும் மெய்யைப் பொய்யைச்**

**சோதிக்குமே உங்கள் வேதம் எங்கோன்தமிழ்ச் சொல்எனவே.**

விளக்கம் : எங்கள் தலைவராகிய நம்மாழ்வாரது, தமிழ்ப் பிரபந்தம் போல ,உங்களுடைய வேதங்களெல்லாம், மேலான கடவுளின் நிலைமை இன்னதென்பதை, உறுதிப்படுத்துமோ? அன்னிய மதங்களின் மாறுபாடுகளை, அழிக்குமோ? ஒரு பொருளை ஆராய்ந்தறியுமோ? அப்படி அறிந்தாலும் அறிந்த அவ்விஷயத்தை, பிறர்க்குத் தெரியும்படி உணர்த்துமோ? எவ்விடத்திலும் சிறப்படைந்து, பொதுவாய் நிற்கின்ற, சத்தியத்தையும், அதற்கு மாறான அசத்தியத்தையும் ஆராய்ந்தறியுமோ?

19. **சொல்என் கெனோமுழு வேதச் சுருக்கென் கெனோஎவர்க்கும்**

**நெல்என் கெனோ உண்ணும் நீர் என்கெனோ மறைநேர்நிறுக்கும்**

**கல்என் கெனோமுதிர் ஞானக் கனியென் கெனோபுகல**

**வல்என் கெனோகுரு கூர்எம்பிரான் சொன்ன மாலையையே.**

விளக்கம் : திருக்குருகூரிலுள்ள நம்மாழ்வார், அருளிச்செய்த பாடலாகிய மாலையை, இயல்பாகிய தமிழ்ச்சொல் என்பேனோ? எல்லா வேதத்திலுமுள்ள, சுருக்கமான சாரமென்பேனோ? யாவர்க்கும் உணவுப் பொருளாகிய நெல்லென்பேனோ? பருகுகின்ற, நீரென்பேனோ? வேதங்களை , நேரே தராசில் நிறுத்துப் பார்ப்பதற்குரிய, படிக்கல் என்று சொல்லுவேனோ? ஞானமாகிய சுவை முற்றிய, பழமென்பேனோ? பலவிதமாகச் சொல்லுவதற்கு எனக்கு வலிமையுண்டென்பேனோ?

20. **மாலைக் குழலியும் வில்லியம் மாறனை வாழ்த்தலர்போம்**

**பாலைக் கடம்பக லேகடந்து ஏகிப் பணைமருதத்து**

**ஆலைக் கரும்பின் நரேல்என்னும் ஓசையை அஞ்சியம்பொன்**

**சாலைக் கிளிஉறங் காத்திரு நாட்டிடம் சார்வார்களே.**

விளக்கம் : பூமாலை அணிந்த கூந்தலையுடைய உன் மகளும், கையில் வில்லை உடைய அவள் தலைவனும், நம்மாழ்வாரை துதியாதவர்கள், செல்லத்தகுந்த பாலை நிலத்து வழியை, இன்றைப் பகலிலேயே தாண்டிச் சென்று, மருத நிலத்து வயல்களில் விளைந்துள்ள கரும்புகளை ஆட்டுகிற ஆலைகளில் , நரேல் என்று ஒலிக்கிற ஒலியைக் கேட்டு, அழகிய பொலிவு பெற்ற வீடுகளில் வளர்க்கிற, கிளிகள், பயந்து , தூங்காத, சிறந்த தமது நாட்டினிடத்தை அடைவார்கள்.

21. **சாரல் குறிஞ்சி தழுவும் பொழில்தளிர் மெல்லடித்தண்**

**மூரல் குறிஞ்சி நகைமுகம் நோக்கற்குநீ முடுகும்**

**சூரல் குறிஞ்சி நெறிநினை தோறும் துணுக்குஎனுமால்**

**வாரல் குறுகைப் பிரான்திரு ஆணை மலையவனே.**

**விளக்கம்** : குருகூர் நம்மாழ்வாரது, சிறந்த கட்டளையை கொண்டுள்ள, பொதியில் மலையிலிருக்கிற தலைவனே ! மலைச் சார்பாகிய, குறிஞ்சி நிலம் தழுவப்பட்ட சோலையிலே, தளிர் போன்ற மெல்லிய அடிகளையும், குளிர்ந்த குறிஞ்சி அரும்பு போன்ற பற்களையுடைய தலைவியினது முகத்தைப் பார்ப்பதற்கு, நீ விரைந்து வருகிற பிரப்பங்காடுகள் நெருங்கிய, மலைவழியை , நினைக்கும் பொழுதெல்லாம் , அவள் துணுக்கென்று நடுங்குவளாதலால் நீ வாராது நீங்குவாய் .

22. **மலையார மும்கடல் ஆரமும் பன்மா மணிகுயின்ற**

**விலையார மும்விர வுந்திரு நாடனை வேலைசுட்ட**

**சிலையார்அமுதின் அடிசட கோபனைச்சென்று இறைஞ்சும்**

**தலையார் எவர்அவ ரேஎம்மை ஆளும் தபோதனரே.**

விளக்கம் : பொதியில் மலையில் உள்ள , சந்தன மரமும், கடலிலுள்ள முத்துக்களும் , பலவாகிய சிறந்த இரத்தினங்களிழைத்த, விலை பெற்ற மலைகளும் பொருந்தியிருக்கிற, சிறந்த பாண்டிய நாட்டிலுள்ளவராகிய, சமுத்திரத்தை, அம்பு விட்டெரித்த கோதண்டமென்னும் வில்லையுடைய, அரிய அருமருந்தன்ன இராமபிரானுடைய, திருவடிகளில் பற்றுள்ள, நம்மாழ்வாரை போய் வணங்குகின்ற, தலையையுடையவர், யாவரோ ,அவரே எங்களை ஆண்டு கொள்ளுகின்ற , தவமாகிய செல்வத்தை உடையவர் ஆவார்.

23. **போந்துஏ றுக என்று இமையோர் புகலினும் பூந்தொழுவின்**

**வேந்துஏ றுஅடர்த்தவன் வீடே பெறினும் எழில்குருகூர்**

**நாம்தே றியவ றிவன்திரு வாய்மொழி நாளும் நல்கும்**

**தீந்தேறலுண்டுழலும் சித்தியே வந்து சித்திக்குமே.**

விளக்கம் : எங்கள் விமானத்தில் வந்து ஏறிக்கொள்ளுக என்று, தேவர்கள் சொன்னாலும், அழகிய கொட்டிலினிடத்துள்ள, தலைமை பெற்ற , ஏழு காளை மாடுகளை, அடக்கிய கண்ணபிரானது, பரம பதத்தை அடையப் பெற்றாலும், அழகிய குருகூர்ப்பதியில், நாங்கள் தெளிவடையச் செய்த, பேரறிவாளராகிய நம்மாழ்வாரருளிச் செய்த திருவாய்மொழி, தினமும், கொடுக்கின்ற, இனிய தேன் போன்ற சுவையை, பருகி உலாவுகின்ற ஒப்பற்ற பயனே, வந்து, நான் பெறும்படி எனக்குக் கை கூடா நிற்கும்.

24. **சித்தர்க்கும் வேதச் சிரம் தெரிந்தோர் கட்கும் செய்தவர்க்கும்**

**சுத்தர்க்கும் மற்றைத் துறைதுறந்தோர் கட்கும் தொண்டுசெய்யும்**

**பத்தர்க்கும் ஞானப் பகவர்க்கு மேயன்றி பண்டுசென்ற**

**முத்தர்க்கும் இன்ன முதம்சடகோபன் மொழித்தொகையே.**

**விளக்கம்** : நம்மாழ்வார் பாடியருளிய, பாடல்களின் தொகுதியானது, எண்வகைச் சித்தியுடையவர்க்கும், வேதத்தின் தலையாகிய வேதாந்தத்தை, அறிந்தவர்களுக்கும், தவத்தை

செய்பவர்களுக்கும், பரிசுத்தமுடையவர்க்கும், வேறுமார்க்கங்களில் இருந்து, எல்லாப் பற்றும் விட்ட துறவிகளுக்கும், கடவுளுக்கு அடிமை செய்கின்ற அடியார்களுக்கும், ஞானம் மிகுந்த பெரியோர்களுக்குமே அல்லாமல் , முன்னாளில், சென்ற, முக்தி பெற்றவர்களுக்கும், இனிய அமிர்தமேயாகும்.

25. **தொகைஉள வாயபணு வற்கெல்லாம் துறைதோறும் தொட்டால்**

**பகையுள லாம்மற்றும் பற்றுளவாம் பழ நான்மறையின்**

**வகையுள வாகிய வாதுள வாம்வந்த வந்திடத்தே**

**மிகையுள வாம் குருகூர்எம் பிரான்தன் விழுத்தமிழ்க்கே.**

**விளக்கம் :** சேர்க்கப்பட்டுள்ளனவாகிய , சாஸ்திரங்கள் எல்லாம், ஒவ்வொரு பகுதிகள் தோறும், உற்று நோக்கினால் , ஒன்றுக்கொன்று விரோதம் உள்ளனவாம்; மீட்டும் தொடர்ச்சியுள்ளனவாகும்; பழமையாகிய நான்கு வேதங்களின் பகுதியுள்ளனவாகிய, விரோதங்களுமுள்ளனவாகும் ; அப்படியின்றி திருக்குருகூரில் அவதரித்த, எங்கள் இறைவனாகிய நம்மாழ்வாருடைய, சிறந்த தமிழ்ப்பாடல்களில் , பார்த்து பார்த்த இடங்களில் எல்லாம், சிறந்த மேம்பாடுகள் உள்ளனவாகின்றன.

26. **விழுப்பா ரினிஎம்மை யார்பிற வித்துயர் மெய்உறவந்து**

**அழுப்பா தொழியின் அருவினை காள்உம்மை அப்புறத்தே**

**இழுப்பான் ஒருவன்வந் தின்றுநின் றான்இள நாகுசங்கம்**

**கொழுப்பாய் மருதம் சுலாம்குரு கூர்எம் குலக்கொழுந்தே.**

விளக்கம் : நீங்குதற்கரிய வினைகளை ! மிக்க இளைய சங்கங்களில், உழுகின்ற தொழுவானது பாயப்பெற்ற, மருத நிலங்கள் சூழ்ந்துள்ள குருகூர், எம்போல்வராகிய தொண்டர் கூட்டங்களுக்கு , கொழுந்து போல்வராகிய, ஒப்பற்ற நம்மாழ்வார் உங்களைஈ எங்களிடத்தில் நெருங்கவொட்டாமல் அப்பால், இழுத்தறிய வேண்டி வந்து, இப்பொழுது எம் உள்ளத்தில் எழுந்தருளி இருக்கிறார்; ஆதலால் மெய்யாகவே எங்களைக் கூட்டிவந்து, அப்பாமல், நீங்கிவிடுங்கள் ; இனிமேல், எங்களை, பிறப்பாகிய துன்பத்தில், தள்ளுபவர் யாவர் இருக்கிறார்கள் ?

27. **கொழுந்தோ டிலையும் முகையுமெல் லாம்கொய்யும் கொய்ம்மகிழ்க்கீழ்**

**விழுந்து ஓடுவது ஓர் சருகும் பெறாள்விறல் மாறனென்றால்**

**அழும்தோள் தளரும் மனமுருகும் கூரையில்**

**எழுந்து ஓடவுங் கருத்துண்டு கெட்டேன்இவ் இளங்கொடிக்கே.**

**விளக்கம்** : கொழுந்துகளும், இலையும், அரும்புகளும், மற்றுள்ள மிளகாய்களும், மிகக் கொய்யும்படியாகிய மகிழ மரத்தின் கீழ்ச் சென்று அங்கே காற்றால் விழுந்து ஓடுவதாகிய, ஒரு சருகேனும் பெற்றாளில்லை ; வலிமையுடைய, நம்மாழ்வாரென்று அயலிற் கூறினால், அழுகின்றனள் ; தோள் தளர்ச்சியடைவாள் ; மனம் கரைவாள் ; குருகூரென்று சொன்னால், தான் எழுந்து ஓடிச் சென்று அவ்வூரையடையவும், இந்த இளமையான கொடி போன்ற பெண்ணுக்கு, நினைவு உண்டாயிருக்கிறது ; நான் யாது செய்வேன் என கேட்டேன் !

28. **கொடிஎடுத்துக் கொண்டு நின்றேன் இனிக் கொடுங் கூற்றினுக்கோ**

**அடிஎடுத்துக் கொண்டென் பால்வர லாகுங்கொல் ஆரணத்தின்**

**படிஎடுத்துக் கொண்ட மாறன்என் றால்பது மக்கரங்கள்**

**முடிஎடுத்துக் கொண்ட அந்தணர் தாள்என் முடிஎனவே.**

**விளக்கம்** : வேதத்தைப் போல நான்கு பகுதியாக, தமிழில் எடுத்துக் கொண்டு கூறிய நம்மாழ்வார் என்று யார் சொன்னாலும், தாமரைப் பூப் போன்ற கைகளை, தலையில் அஞ்சலி செய்து கொண்ட, எல்லாவுயிர்களிடத்தும் அன்பு பொருந்திய மேலோர்களுடைய , பாதங்கள், எனது தலையில் சூடப்படுவன என்று விருதுக் கொடி பிடித்துக் கொண்டு நிற்கின்றேன் ; ஆதலால் இனிமேல், கொடிய யமனுக்கு, ஒரு காலை எடுத்துக் கொண்டு என்னிடத்தில் வருதல் கூடுமோ?

29. **என்முடியா தெனக்கி யாதே அரியது இராவணன்தன்**

**பொன்முடி யால்கடல் தூர்த்தவில் வலான்பொருநைத் துறைவன்**

**தன்முடியால் அவன்தாள் இணைக்கீழ் எப்பொரு ளும்தழீஇச்**

**சொல்முடியால் அமுதக்கவி ஆயிரம் சூட்டினனே.**

விளக்கம் : இராவணனுடைய , பொன்னாகிய கிரீடமணிந்த தலைகளைக் கொண்டு சமுத்திரத்தைத தூரச் செய்த, கோதண்டமென்னும் வில்லை உடையவனாகிய , அந்த இராமபிரானுடைய , இரண்டு திருவடிகளிலும் தாமிரபரணி ஆற்றங்கரையில் அவதரித்த நம்மாழ்வார், தம் தலையால் வணங்கி, எல்லாப் பொருள்களையும் ஒரு சேரக் கொண்டு சிறந்த சொற்களால் அமைந்த ஆயிரம் பாடல்களை பாடிச் சேர்ப்பித்தனர்; அவ்வாழ்வாரைத் துதிக்கின்ற எனக்கு என்ன காரிய முடிய மாட்டாது ? எது தான் அரியதாகும்? எல்லாம் முடியும் அரிதொன்றுமில்லை என்பதாகும்.

30. **சூட்டில் குருகு உறங்கும்குருகூர் தொழுதேன்வழுதி**

**நாட்டில் பிறந்தவர்க் காளும்செய் தேனென்னை நல்வினையாம்**

**காட்டில் புகுதவிட்டு உய்யக்கொள் மாறன்கழல் பற்றிப் போய்**

**வீட்டில் புகுதற்கும் உண்டே குறைமறை மெய்எனிலே.**

விளக்கம் : நெற்போரில் நாரை முதலிய பறவை, தூங்குகின்ற திருக்குருகூரையும், வணங்கினேன் ; பாண்டிய நாட்டில் பிறந்தவராகிய இறைவனிடத்தில் அன்புடையவர்க்கு, அடிமையுமாயினேன் ; ஆதலால் வேதமானது உண்மையாயிருக்குமானால் என்னை, நல்ல தவஞ்செய்தலால் மேன்மையுற்ற காட்டில், புகுதவிட்டு பிழைக்கும்படி அருள்செய்கின்ற, நம்மாழ்வாருடைய , பாதங்களை புணையாகக் கொண்டு சென்று , மோட்சத்தை அடைதற்கும், தடையுண்டோ? தடை இல்லை என்பதாம்.

**பாட வினாக்கள் :**

1. திருவரங்கக் கலம்பகம் உணர்த்தும் செய்திகளை எழுதுக.
2. மேகவிடுதூது – குறிப்பு வரைக.
3. திருவரங்கக் கலம்பகம் உணர்த்தும் ‘இரங்கல்’நிமித்த செய்திகளை விளக்குக.
4. கம்பரின் சடகோபர் அந்தாதி வெளிப்படுத்தும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
5. நம்மாழ்வாரைக் கம்பர் எவ்வாறெல்லாம் போற்றுகிறார் ? என்பதை பாடல்வழி விளக்குக.

## அலகு எண் - 5

## தேவமாதா அந்தாதி

## வேதநாயகம்பிள்ளை

- மாயூரத்தின் நீதிபதியாக இருந்து நீதி செலுத்தியதால் இவருக்கு இப்பெயர் கிடைத்தது எனலாம். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் நெருங்கிய நண்பர்.
- தமிழில் முதன் முதலில் 1879 ஆம் ஆண்டு பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் புதினத்தை உருவமைத்து வெற்றிக் கண்டவர்.
- நகைச்சுவையும், நீதிச்சுவையும் மிக்கதாக விளங்குகிறது.
- பெண் முன்னேற்றம் போற்றுவதாக விளங்குகிறது.
- இப்படைப்பால் இவர் 'புதின இலக்கியத்தின் தந்தை' எனப் போற்றப்படுகின்றார்.
- இவர் 'சுகுணசுந்தரி' என்னும் புதினத்தையும் படைத்துள்ளார்.
- பிற படைப்புகள் :

- திருவருள் மாலை
- திருவருள் அந்தாதி
- தேவமாதா அந்தாதி
- பெரியநாயகி பதிகம்
- தேவ தோத்திர மாலை
- சத்திய வேதக் கீர்த்தனைகள் போன்ற பல்வேறான படைப்புகளைப் படைத்துள்ளார்.

காப்பு

**"நண்பா வந்தாதி நவை துடைத்த நாயகிமேல்**
**வெண்பாஅந் தாதி விளம்பவே – பண்பாகத்**

**தானே பெறுமகளைத் தாயாகக் கொண்டபரன்**
**கானே பெறுமலர்த்தாள் காப்பு"**

**விளக்கம்** : மனிதர்கள் மீது கொண்ட அன்பால் நட்புடனே வந்து அவர்களது முதன்மையான குற்றங்களை நீக்கியருளிய நாயகியானவள், தூய மரி அன்னை. அந்த அன்னையின் மீது வெண்பாவினால் ஆன அந்தாதி வகை இலக்கியத்தைப் பாடிடவே, பண்புநலன்களோடு தானாகவே கருவுற்றுப் பெறும் மகளைத் தனது தாயாகக் கொண்ட கடவுளின் அழகிய மலர் போன்ற மென்னையான பாதங்கள் துணை நின்று காத்தருள வேண்டும்.

1. தேவமாதா

**"எண்தரும்மேல் நாவனந்தம் எய்திடினும் வான்வாழும்**
**அண்டருமே சொல்லற்(கு) அடங்குமோ – தொண்டர்கள்தம்**
**சிவமா தாவே திரிபுவன மாதாவே**
**தேவமா தாவே நின்சீர்**

**விளக்கம்** : அடியவர்களுக்கு உயிரான அன்னையே ! மூன்று உலகங்களுக்கும் அன்னையாக விளங்குபவளே! கன்னி மரியாளே! உனது புகழினைக் கூற எண்ணிக்கைக்கு உரிய அளவைக் காட்டிலும் அளவற்ற நாவினைப் பெற்றாலும், வானுலகில் வாழும் தேவர்களாலும் சொல்லுவதற்கு அடங்காது.

2. உத்தரீய மாதா

**"சீரில்லேன் ஞானம் சிறிதுமில்லேன் தீமைதனில்**
**நேரில்லேன் நீதியில்லேன் நிச்சயமெ - கூரிய பா**
**பந்தர் ஈயத் தான்கொள் பாலன்பால் என்குறையை**
**உத்தரீயத் தாயே ஓது"**

**விளக்கம்** : உத்தரீயத்தாயே ! அன்பான பக்தர்கள் பாடிக் கொடுக்கும் சிறந்த பாடல்களைத் தான் ஏற்றுக்கொள்ளும் இயேசுபாலனிடம், புகழில்லாதவன், அறிவு சிறிதுமில்லாதவன், தீமையில் ஒரு நிகரில்லாதவன், நியாயமற்றவன்' என்னும் எனது குறைகளைச் சொல்வாயாக.

3. தரிசன மாதா

**“ ஓதுமுடுனம் என்துயரை உள்ளபடி நீ அறிவாய்**
**ஏது மொழிவேன் எளியேன் யான் - போதக்**
**கரிசனம்மா றா எனக்காகக் கத்தனைவேண் டாயோ**
**தரிசனமா தாவே நீ தான்”**

**விளக்கம்** : தரிசன அன்னையே ! எனது குறைகளை இயேசுபாலனிடம் சொல்லும் முன்பாக என் துன்பத்தை உள்ளவாறு நீ அறிவாய் . என்னவென்று சொல்வேன் ; நான் மிகவும் எளியவன். ஞானத்தின் மீதான அக்கறை மாறாமல் எனக்காகக் கடவுளை வேண்டிக் கொள்வாயா?

4. உபகார மாதா

**“ தானே இருக்கும் தனிப்பொருளை ஈன்றவளே**
**தேனே இருக்கும் மொழிச் செல்வியே – நானே**
**அபகாரத் தானேனும் ஆள் என்அடுத்தேன்**
**உபகாரத் தாயே உனை”**

**விளக்கம்** : உபகார அன்னையே ! உலகிலுள்ள அனைத்துப் பொருளாகவும் இருக்கும் ஒப்புயர்வற்ற பொருளைப் பெற்றேடுத்தவனே! தேன் போன்ற இனிமையான மொழிகளைப் பேசும் செல்வியே! நான் தீமைகளை உடையவன் என்றாலும், உம்மையே துணை என்று கருதிச் சேர்ந்தேன்.

5. தேற்றரவு மாதா

**“ உனையன்றி வே(று)இங்(கு) ஒருகதியும் இல்லேன்**
**எனைவந்(து) ஆட்கொள்ளாத(து) என்னே – வீண்புரியத்**
**தோற்(று)அரவு மாதாவே சூழச்செ யும்இடரைத்**
**தேற்றரவு மாதா வேதீர்”.**

**விளக்கம்** : இரக்கம் மிகுந்த தேற்றரவு அன்னையே !உன்னை அல்லாது வேறு இங்கு ஒருவரும் எனக்கு இல்லை. என்னை வந்து நீ ஏற்று அருள்புரியாதது ஏனோ? செயல்களைப் புரிவதற்காக அவதரித்த அன்னையே ! சூழ்ந்து வரக்கூடிய துன்பங்களைத் தீர்ப்பாயாக.

6. **சென்ம இராக்கினி மாதா**

**“ தீராத வன்பிழைகள் தீரப் புவியில் வந்த**
**ஓர்ஆ தவன்உதய ஒண்கிரியே – பேராத**
**கன்மஇராக் கழியக் காவலனை வேண்டிஅருள்**
**சென்மஇ ராக்கினியே செய்”**

**விளக்கம்** : சென்ம பாவமின்றி பிறப்பித்த இராக்கினி அன்னையே! தீராத கடுமையாந குற்றங்கள் தீர இந்தப் பூமியில் வந்த ஒரு சூரியன் உதிக்கும் ஒளிமிக்க மலையே ! நீங்காத தீவினை எனும் இருள் நீங்கக் கடவுளை வேண்டி அருள் செய்வாய் .

7. **ஆரோக்கிய மாதா !**

**“ செய்யேன் செபதவங்கள் சேரேன்நற் சீலர்குழாம்**
**பெய்யேன் விழிஅருவி பேதையன் - மெய்யேஇப்**
**பாரோர்க்கு இயல்அப் பதம்தருநீ அன்றிஎனக்(கு)**
**ஆரோர்க் கியமரியே ஆர்”**

**விளக்கம்** : ஆரோக்கிய அன்னையே ! வழிபாடுகள், தவங்கள், இவற்றைச் செய்யவில்லை. நல்ல ஒழுக்கமுள்ளோர் கூட்டங்களில் சேரவில்லை. கடவுளை வணங்கி உள்ளம் உருகி கண்களில் நீரை வடிக்கவில்லை. உண்மையில், இப்பூமியில் உள்ளவர்க்கு இயலும் மேலான கடவுள்பதம் தரும் நீ அல்லாது வேறு யார் உளர்?

8. **அடைக்கல மாதா!**

**“ ஆரடா பேயே நீ அஞ்சாமல் என்னுடனே**
**போரடா செய்யப் புறப்பட்டாய் - வீரப்**
**படைக்கலமாக் கொண்டேன்நான் பண்டுஉன்னைத் தேய்த்த**
**அடைக்கலமா தா சீர்அடி.**

**விளக்கம்** : யாரடா பேயே நீ? பயமின்றி என்னோடு போர் செய்யவா புறப்பட்டாய். முன்நாளில் உன்னைத் தோற்கச் செய்து உனது புகழைக் குறைத்த அடைக்கல

அன்னையின் பெருமைமிக்க திருப்பாதங்களை வீரமிக்கப் போர்க்கருவியாகக் கொண்டேன்நான்.

9. செபமாலை மாதா

**“அடியர்க்கு ஆனந்தமே அற்புத மெய்யாளே**
**விடியற் காலத்துஉடுவே மின்னே – கொடியன்**
**நிபமாலை நீக்கி நிதமும் கருணை**
**செபமாலை மாதாவே செய்”**

**விளக்கம்** : செபமாலை அன்னையே ! உமது தொண்டர்களுக்கு ஆனந்தமாக விளங்குபவளே! அதிசயமான உடலையுடையவளே! சூரியன் உதிக்கும் முன்பு கிழக்கே தொடுவானத்தில் கடைசியாகத் தோன்றும் நட்சத்திரமே! மின்னலே! கொடிய செயல்களை உடைய எனது வஞ்சனை எனும் மாலையை நீக்கி எப்போதும் கருணை செய்வாயாக.

10. வியாகுல மாதா

**“ செய்யும் வினைதீரும் சேரும் பரமசுகம்**
**உய்யும் வழியும்நமக் குஉண்டாகும் - மெய்யாம்**
**தயாகுலமா தேவ தநயனுக்கா நெந்த**
**வியாகுல மா தாவை நெஞ்சே வேண்டு”**

**விளக்கம்** : நெஞ்சே! உண்மையான அன்புகுலத்தினரான தெய்வப் புதல்வனுக்காக வருந்தித் துன்புற்ற வியாகுல அன்னையை வேண்டுவாய். இதனால், இப்பிறவியில் இன்ப துன்பங்களுக்குக் காரணமான வினைகள் இல்லாது போகும். மேலான பேரின்பம் உண்டாகும். நற்கதி அடையும் வழியும் நமக்கு உண்டாகும்.

11. காணிக்கை மாதா

**வேண்டேன்நான் அற்பசுகம் விண்மதிசேர் பொன்அடியைப்**
**பூண்டேன் இனிவிடேன் பூவுலகை – ஆண்டவளே**
**பேணிக்கை கூப்பிநின்றேன் பேரின்பம் எய்தும்வழி**
**காணிக்கை மாதாவே காட்டு”**

விளக்கம் : காணிக்கை மாதாவே! பூமியை ஆண்டவளே! உம்மை விரும்பி கைகளைக் கூப்பி வணங்கி நின்றேன். கீழான உடல் இன்பங்களை நான் வேண்டமாட்டேன். வானத்தில் உள்ள நிலவினைச் சேரும் பொன் போன்ற திருவடிகளை மகுடமாக அணிந்து கொண்டேன். பேரின்பத்தை அடையும் வழியைக் காட்டுவாயாக.

12. சிந்தாந்திரை மாதா

**" காட்டுவாள் நல்லவழி கற்பிப்பாள் ஞானநெறி**
**ஓட்டுவாள் பேயை ஒடுக்குவாள் - நாட்டுசுகம்**
**சிந்தாத் திரைஆழி சேரநமைச் சேர்ப்பிப்பாள்**
**சிந்தாத் திரைஅனை நெஞ்சே.**

**விளக்கம்** : நெஞ்சே ! சிந்தாத்திரை அன்னையைச் சேர்ந்திடுவாய். அவள் நல்ல வழியினைக் காட்டிடுவாள். ஞானநெறியான கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டையில் கூடுதல் என்னும் நிலைகளைக் கற்பிப்பாள். பேயை ஓட்டிடுவாள்; அடக்கிடுவாள். நிலையான இன்பம் எனும் சிந்தாத அலைகளை உடைய கடலில் சேர நம்மைச் சேர்ப்பிப்பாள்.

13. மோட்ச இராக்கினி மாதா

**"நெஞ்சமே தூதாக நீஓடி என் நிலையை**
**வஞ்சமே இன்றி வகுத்துரைப்பாய் -செஞ்சரணில்**
**வீட்சஅவ் இராக்கிதிராம் மென்பா துகைபூண்ட**
**மோட்ச இராக் கினித்தாய் முன்"**

**விளக்கம்** : நெஞ்சமே! சிவந்த பாதங்களில் வியக்கும்படியான அச்சந்திரனாகிய மென்மையான காலணியை அணிந்த மோட்ச இராக்கினி அன்னையின் முன்பு தூதாக நீ ஓடிச்சென்று, எனது நிலையை, தீமை சிறிதும் இல்லாது முறைப்படுத்திக் கூறுவாயாக.

14. அலங்கார மாதா

**" முன்அறியேன் பின்அறியேன் முற்றும் உணர்ந்து(உன்) புகழைப்**
**பன்னறியே னேனும் பொற் பாவையே – சொன்னேன்**
**இலங்(கு)ஆரம் ஆகவே என்கவியை ஏற்பாய்**
**அலங்கார மாமரி அம் மா.**

**விளக்கம்** : அலங்கார மாமரி அன்னையே ! உனது புகழை முன்னது எது, பின்னது எது என்று அறியவில்லை. முழுமையாக உணர்ந்து கூறுவதற்கும் அறியவில்லை. இருப்பினும், பொன்னாலான பாவை போன்றவளே !நான் உனது புகழைக் கூறினேன். எனது கவிகளை ஒளிவீசும் மாலை என்று எண்ணி ஏற்பாய் அம்மா.

15. பெரியநாயகி மாதா

**"அம்மா மெய்ஞ்ஞானம் அடியேனுக்(கு) ஈயாமல்**
**சும்மா இருப்பதென்ன சோதனையோ – மும்மையுமே**
**தேர் பெரிய நாயகனைத் தேடிமன் றாடிஎனை**
**ஆர் பெரிய நாயகியே ஆள்"**

**விளக்கம்** : அம்மா ! உண்மையான ஞானத்தை அடியவனாகிய எனக்கு அருளாமல் சும்மா இருப்பது எந்த வகையான சோதனையோ? இறப்பு, நிகழ்வு, எதிர்பு என்னும் மூன்று காலங்களுக்கும் உரியவன் என்று ஆய்ந்து பெரிய நாயகனைத் தேடி மன்றாடி எனை ஆட்கொள்ளுவது யார்? பெரிய நாயகித் தாயே! நீயே ஆட்கொள்வாயாக.

16. மங்கள மாதா

**" ஆளாயோ சீலம் அருளாயோ என்மனுவைக்**
**கேளாயோ நாயேன்பால் கிட்டாயோ – வாளா நான்**
**வங்களமா தாவுற்று வீயாமல் ஈயாயோ**
**மங்கள மா தாவே வரம்"**

**விளக்கம்** : மங்கள அன்னையே ! என்னை ஆட்கொள்ள மாட்டாயா? நல்ல ஒழுக்கங்களைக் கொடுத்து அருளமாட்டாயா? எனது விண்ணப்பத்தினைக் கேட்க மாட்டாயா? நாயினைப் போன்ற இழிவான எனக்குக் கிடைக்க மாட்டாயா? ஒன்றும் செய்யாது நான் போர்க்களத்தினைத் தாவிக் கடந்து அழியாதிருக்கும்படி வரம் கொடுத்து அருள் புரிய மாட்டாயா?

17. பிரகாச மாதா

**" வரம்வேண்டி னேன் என்றும் மாறாத இன்பப்**
**பரம்வேண்டி னேன் ஞானப் பாவாய் - கரும**
**நகஷரகா சன இருளை நரன்பா ரா(து) ஈவாய்**
**பிரகாச மாதாவே பேறு"**

**விளக்கம்** : பிரகாச மாதாவே ! வரம் தருமாறு உன்னை வேண்டினேன். என்றைக்கும் மாறாத மேலுலக இன்பத்தை வேண்டினேன். ஞானத்தின் வடிவான பாவையே ! வினைப்பயன் என்னும் நரக இருக்கையாகிய இருளை நான் பார்க்காதவாறு வரம் தருவாயாக.

18. நம்பிக்கை மாதா

**"பேறு பெறலாம் பிணி அறலாம் வந்த இடை**
**யூறும் அறலாம் உரம்உறலாம் - மாறுகொண்டு**
**கம்பிக்கை ஆகிக் கலங்காதே நெஞ்சமே**
**நம்பிக்கை மாதாவை நம்பு"**

**விளக்கம்** : நெஞ்சமே ! பகைமை கொண்டு நடுங்குதல் உடையவராக ஆகி மனம் கலங்காதே ! நம்பிக்கை அன்னையை நம்பு. பெருமை பெறலாம். நோய் தீரலாம். வந்த துன்பங்களும் நீங்கலாம். வலிமை பெறலாம்.

19. இருதய மாதா

**" நம்பியே வந்துன் நளினக் கழல்அடைந் தேன்**
**வெம்பியே வாட விடலாமோ – பம்பிப்**
**பொருதயமா நெஞ்சைப் பலப்படுத்திக் காப்பாய்**
**இருதயமா தாவே எனை"**

**விளக்கம்** : இருதய அன்னையே ! நம்பிக்கையோடு வந்து உனது அழகிய மென்மையான திருப்பாதங்களை அடைந்தேன். என்னை மனம்புழுங்கி வாடவிடுவது சரியா? எங்கும் நிறைந்த பொருந்திய உனது அன்பான நெஞ்சை வெளிப்படுத்தி என்னைக் காத்திடுவாய்.

20. மாதரசு மாதா

**" எனையே கெடுக்க இடைகட்டிக் கொண்டு**
**வினையேசெய் பேயை விலக்கி – முனையாகும்**
**பாதரசம் போல் ஆடும் பாவியேன் நெஞ்சகத்தில்**
**மாதரசு மாதாவே வாழ்"**

**விளக்கம்** : " எனக்குக் கெடுதல் செய்ய வேண்டும் என்று இடைவரை தூக்கி ஆடையைக் கட்டிக் கொண்டு செயல்களைச் செய்யும் பேயினை ஓட்டிவிட்டு கூரிய முனையில் இருக்கும் பாதரசத்தினைப் போன்று நிலையில்லாது ஆடும், வாங்களை உடையவனான எனது நெஞ்சத்தின் உள்ளே மாதரசு அன்னையே வாழ்வாயாக.

## சீதக்காதி நொண்டி நாடகம்

நொண்டி நாடகம்

- சிற்றிலக்கிய நாடக வகைகளுள் நொண்டி நாடகம் ஒரு வகையாகும். மேடையில் தனியொரு மனிதனாகத் தோன்றும் கதைத் தலைவனின் தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டு 'நொண்டி' எனப் பெயர் பெற்றது. இதனை 'ஒற்றைக்கால் நாடகம்' என்றும் அழைப்பர்.
- தோற்றம் : நொண்டி நாடகத்தின் தோற்றம் கி.பி 17 ஆம் நூற்றாண்டு ஆகும். சாதாரண மக்களுக்காக நடத்திக் காட்டப்பெறும் வண்ணம் இந்நாடகம் மேடையில் நடித்துக் காட்டப்பட்டது. மக்களுக்கு அற ஒழுக்கத்தினை வலியுறுத்துவதே இந் நொண்டி நாடகத்தின் நோக்கமாகும். 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் மிகவும் செல்வாக்குடன் இந்நாடகம் விளங்கியது.
- நாடக வகைகள்

❖ திருச்செந்தூர் நொண்டி நாடகம்

❖ சீதக்காதி நொண்டி நாடகம்

❖ சாத்தூர் அய்யன் நொண்டி நாடகம்

❖ திருவிடை மருதூர் நொண்டி நாடகம்

❖ ஞான நொண்டி நாடகம்

- ❖ சீதக்காதி நொண்டி நாடகம் - வள்ளல் சீதக்காதியைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்ட நாடகம் ஆகும்.
- ❖ 1930 களில் முதன்முதலில் பதிப்பித்தவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அரபி, பார்ஸி, உருது போன்ற துறைகளில் துறைத் தலைவராகப் பணியாற்றிய **முஹம்மது ஹுசைன் நயினார்.**
- ❖ 1953 இல் இரண்டாம் பதிப்பாக சீதக்காதி மரைக்காயர் திருமண வாழ்த்து என்ற நூலையும் இணைத்துப் பதிப்பித்தார்.

**நொண்டியின் சிறப்பு**

**தன்மமும் பொறையுங் கொண்ட சற்குண னிதிபோல் வந்த**
**மன்மதன் வச்ர நாடன் வகுதைவாழ் செய்தக் காதி**
**பொன்மகள் நிர்த்த மாடப் பூமகள் புகழ் கொண்டாட**
**நன்மைசேர் கொலுவி னொன்டி நயத்தோடுந் தோன்றி னானே.**

விளக்கம் : பண்பும் , பொறுமையும் கொண்ட நல்ல நற்பண்புகளின் பொக்கிஷம் போல் வாகுடையின் மன்மதன் வஜ்ர நாடன் சீதக்காதி வந்தான். தங்க மகள் நடனமாடி, பூமி கொண்டாடிய போது நல்ல, சபையில் தோன்றி நொண்டி வந்தான்.

1. **இந் நி லம்புகழ்ப்ர தாபன் விசய**
   **இரகுநாத பெரிய தம்பி மகிபன்**
   **கன்னாவு தாரனையன் புகழ்பாடி நொண்டி**
   **களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே.**

   விளக்கம் : இந்நிலத்தில் பெரிய புகழை அடைந்த விஜயஇரகுநாதனின் பெரிய தம்பி மகிபனைப் புகழ்ந்து பாடி களரிக்குள் ஆடுவதற்காகக் கணுக்கால் பட்டையைக் கட்டி நொண்டி தோன்றி, ஆடினான்.

2. **அந்தமார் சருபந்துங் கட்டி மெய்யி**
   **கைலாசத்துச் சகலாத்து டகலாவுங் கட்டிக்**

**கந்தக்குப் பாயமுங் கட்டி நொண்டி**
**களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே.**

விளக்கம் : நொண்டியானவன் பல்வேறான பொருட்களைத் தன்னுள் கட்டிக் கொண்டு களரிக்குள் ஆடுவதற்காக கணங் கட்டி வந்தான்.

3. **பரிசையொடு பெரிய கத்தி கொண்டு நொண்டி**
**பாசிப் பருவமுள்ள மீசையைந் திருத்திக்**
**கருதலர் வாயடங்கக் குத்தி நொண்டி**
**களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே.**

**விளக்கம்** : பல்வேறு பொருட்களுடன் அரங்கில் நிகழ்த்துவதற்காக நொண்டி கணுக்கால் மணிகளைக் கட்டினார். ஒரு கேடயம், மற்றும் பெரிய கத்தியுடன் நொண்டி தனது மீசையை வெட்டி, ஒரு குத்தினால் தனது எதிரிகளை அமைதிப்படுத்தினார். மேலும் அரங்கில் நடனமாட கணுக்கால் மணிகளைக் கட்டினார்.

4. **கண்ணாடி போற்பரிசை பதித்து நொண்டி**
**கால்வீசி வட்டமிட்டு மேன்மீசை யுந்திருத்தி**
**சுண்ணாம்புக் கல்லுப்பல்லுக் காட்டி**
**தொந்தோமென்றாடிக் கொள்ளத துசங் கட்டி னானே.**

விளக்கம் : சுண்ணாம்புக்கல் சூளையில் அடுக்கப்படுவதை போன்று நொண்டியானவன், சூளையைச் சுற்றி வந்து வெப்பத்தைச் சீராகப் பரப்பும் செயலைச் செய்து, கால்வீசி வட்டமிட்டு தனது மீசையைத் திருத்தி தொப்பைத் தெரியும்படி நொண்டியானவன் வந்தான். இதனுள் சுண்ணாம்புக்கல் வெந்து, தூளாகி, பின் நீருடன் கலந்து சுண்ணாம்பாக மாறும் நிலை பொதிந்து காணப்படுகிறது.

5. **மெய்யிற்குங் குமவாடை பூசி நொண்டி**
**விருதான வழிக்கெல்லாம் மகத்துவம் பேசி**
**கையிற்குஞ் சமுமெடுத்து வீசி நொண்டி**
**களரிக்கு ளாடக்கஞங் கணங்கட்டி னானே.**

**விளக்கம்** : தனது உடம்பில் குமவாடை என்னும் ஒருவகையான மணத்தை பூசி தேவையில்லாத வழிகளில் எல்லாம் உயர்வாகப் பேசி கையில் சிறிய பொருளை எடுத்துக்கொண்டு வீசி, அரங்கில் நடனமாடத் தயாராகி வருகிறான்.

6. **புதுமலர்க்குங் குமத்தார் சூடி யருள் கொடைப்**
   **போகன செய்தக்காதி புகழைக் கொண்டாடிக்**
   **கதையொடு காவியங் கள்பாடி நொண்டி**
   **களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே.**

**விளக்கம்** : கொடைப் போகன் செய்த சீதக்காதி புகழைக் கொண்டாடிக் கதையோடு காவியங்கள் பாடி நொண்டி நாடகம் நடத்த ஆட கங்கணம் கட்டிக் கொண்டு வந்தான்.

7. **ஆலித்த வீரதண்டை கட்டி நொண்டி**
   **யதற் கண்டையிற் பலகறை வெண்டய முங்கட்டிக்**
   **காலுக்குப்பணையமுங் கட்டி நொண்டி**
   **களரிக்கு ளாடக்கங் கணங் கட்டி னானே.**

**விளக்கம்** : அவர் வீரம் பொருந்திய கணுக்காலில் பல மணிகளையும், ஒரு வெள்ளைக் கணுக்காலையும் கட்டினார். பெரிய கணுக்காலில் காலைக் கட்டிக்கொண்டு நொண்டி போர்க்களத்தில் நடனமாட அவர் கொலுசுகளைக் கட்டினார்.

8. **ஆனை மாறாட்டஞ் செய்யுந் தீரன் இசுலா**
   **மாணவாக் கெல்லாமொரு வருமைக் குமாரன்**
   **கானிறை குங்குமப் பூந்தாரன் நொண்டி**
   **களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னானே.**

**விளக்கம்** : யானை தந்திரங்களைச் செய்யும் துணிச்சலான மனிதர். இஸ்லாமிய மாணவர்களுக்கு ஒரே அருமையான மாணவர் (ம) மகன். காவி நிற மாலை அணிந்திருந்த முடவன், தனது கணுக்கால் மணிகளைக் கட்டிக்கொண்டு அரங்கில் நடனமாடினான்.

9. குபிரான நொண்டிகளை நகுவேன் என்றும்

**கோதற்ற தீனவர்கள் பாதத்திற் புகுவேன்**

**இபிராம மற்று நெறி பறைவேன் நசு**

**றானிகள் மார்பில் முளை யாணிக ளறைவேன்.**

**விளக்கம்** : அவர் நொண்டியாக இருந்த போதிலும் கணுக்கால் மணிகளை அணிந்து கொண்டு நடனமாடுகிறார். குப்ரான், நசுரானிகள் போன்ற மதம் சார்ந்தவைகளை நசுக்குவேன் என்றும் றானிகள் மார்பினில் அவற்றை தெளிவுபடக்கூறுவேன்.

10. வாதாடும் பேர்களைத தடுப்பேன் எதிர்

**மாற்றலர் மூக்கிற்றும்பைச் சாற்றையே விடுப்பேன்**

**வேதாந்த குருவைக் கை யெடுப்பேன் கள்ள**

**விச்சைக்குப் பத்திரட்டிப் பிச்சையுங் கொடுப்பேன்.**

**விளக்கம்** : வாதாடுபவர்களை நான் நிறுத்துவேன். தும்பைப் பூவின் சாற்றை எதிராளியின் மூக்கில் வைப்பேன். வேதாந்த குருவிடம் கையை உயர்த்துவேன். பொய்யான மந்திரத்துக்கு தானம் செய்வேன்.

பாடவினாக்கள்

1. தேவமாதா அந்தாதி குறிப்பிடும் மாதாவின் வருணனைகளை எடுத்துரைக்க.
2. நொண்டி நாடகத்தின் சிறப்புக்களைக் கூறுக.
3. நொண்டி நாடகம் குறிப்பிடும் உட்கருத்துக்களை விளக்கி எழுதுக.

பார்வை நூல்கள்


1. வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு – முனைவர். பாக்யமேரி
2. தமிழ் இலக்கிய வரலாறு – மது.ச. விமலானந்தம்
3. தமிழ் இலக்கிய வரலாறு – சு.ஆனந்தன்
4. தேவமாதா அந்தாதி – முனைவர். ந. ஆனந்தி
5. சடகோபர் அந்தாதி மூலமும் உரையும் - மின்நூல்



முனைவர் சு.அபிலாசுந்தரி

உதவிப்பேராசிரியர்
தமிழியல்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி.